கல்கி

KALKI 11.6.89 ரூ. 2.



ஒரு சர்ச்சை!

இங்கிலீஷ் மீடியமா? தமிழ் மீடியமா?


உங்கள் குழந்தைக்கு ஊட்டுங்கள் காய்கறிகளின் சிறந்த சத்தூட்டத்தை!
முன்பே-பக்குவப்படுத்தப்பட்ட
ஃபாரெக்ஸ்®-வெஜ்
6 மாதம் முதல்
புதிய ஃபாரெக்ஸ்-வெஜ். இது, வைட்டமின் வளம் செறிந்த காய்கறிகளான காரட், தக்காளி மற்றும் பச்சைப் பயற்றின் இயற்கையான ஊட்டச்சத்துக்களைக் கொண்டதாகும்.
இது, நன்றாக, முன்பே - பக்குவப்படுத்தப்பட்டது. ஆகவே இது, குழந்தையின் மென்மையான வயிற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றதாகும்.
ஃபாரெக்ஸ்—சுவையுடன் வளரும் வழி
Farex-veg
VEGETABLES, DAL AND MILK
இதோ ஃபாரெக்ஸ் வளர்ச்சி வழி: 1. பால் சேர்த்த ஃபாரெக்ஸ் சீரியல் 2. ஃபாரெக்ஸ்-வெஜ் 3. ஃபாரெக்ஸ்-எக்

GX/57/203 TML



* ஃபாதர் ஜான் பிரகாஷ்

நம்புவதா, வேண்டாமா?



* பிருந்தா



* இசக்கி அம்மாள்

ரத்த மழை! திடீர்த் தீ! பறக்கும் பாத்திரம்!

'அழகப்பபுரத்தில் ரத்த மழை...! மக்கள் பீதி!'

'கன்னியாகுமரி அருகே ஒரு வீட்டி லுள்ள பொருட்கள் திடீரென்று தீப் பிடித்து எரிகின்றன.....!'

'களியக்காவிளையில் ஒரு வீட்டில் தாமாகவே கற்கள் வந்து விழுகின் றன..! பாத்திரங்கள் தாமாகவே பறக் கின்றன.....!'

— இப்படி கடந்த இரண்டு மாதங்களா கவே, குமரி மாவட்டத்தைப் பற்றி நாளிதழ் களில் பரபரப்பான செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் எப்படி நடக்கின்றன? இவற்றில் எவ்வளவு தூரம் உண்மை என்பதைக் கண்டறிய, சம்பவ இடங்களுக்கு நேரில் சென்று பார்த் தோம்.

முதலில், அழகப்பபுரம் ரத்த மழைச் சம்பவம்!

நாகர் கோவிலிலிருந்து அஞ்சு கிராமம் செல்லும் வழியில் சுமார் பத்து கி.மீ. தொலை வில் அமைந்துள்ளது 'அழகப்பபுரம்' என்ற சிற்றூர். அழகப்பபுரம் மக்களிடம் இரத்த ம்ழை சம்பந்தமாக விசாரித்த போது, கடந்த மார்ச் 28—ந் தேதியன்று மதியம் 2.30 மணியளவில், அங்குள்ள புனித அந்தோனி யார் தொடக்கப் பள்ளியில் 5—ம் வகுப்பு மாணவிகள் மீதுதான் முதன் முதலாக இரத்தத் துளிகள் விழுந்திருக்கின்றன என்றும் அந்த இரத்தத் துளிகள் அப் பள்ளியில் பயிலும் மாணவி பிருந்தா என்ற சிறுமியைச் சுற்றியே மற்ற மாணவிகளுக் கும் விழுந்திருக்கின்றன என்றும் சொன் னார்கள்.

உடனே அச் சிறுமி பிருந்தாவைச் சந்தித் தோம். மிரட்சியுடன் பேசிய சிறுமி பிருந்தா வுக்குச் சுமார் பதினோரு வயது இருக்கும்.

''அன்னைக்கு வகுப்பில டீச்சர் பாடம் நடத்திக்கிட்டிருந்தப்போ... எம் மேல் சிவப்பா ஏதோ விழுந்தது மாதிரியிருந்தது. கையை வெச்சுப் பாத்தப்போ ரத்தம் மாதிரி யிருந்தது. அதே மாதிரி நிறையப் புள்ளைங் களுக்கு விழுந்திருந்தது. உடனே நாங்க அதை டீச்சரிடம் காண்பிச்சோம். டீச்சர், மேற்கூரையைப் பாத்துட்டு, 'ஏதாவது பிராணிகள் ஒன்றுக்கொன்று சண்டை போட்டதால ரத்தத் துளிகள் விழுந்திருக்க லாம். நீங்க அதைக் கழுவிக்கிட்டு வாங்க'ன்னு சொன்னாங்க.

''நாங்க வெளியே போய் அதைக் கழுவிக் கிட்டு வந்தோம். சிறிது நேரத்திற்குப் பிறகும் அதே மாதிரி எங்க மேல இரத்தத் துளிகள் விழுந்தன. மீண்டும் டீச்சரிடம் அதைக் காண்பிச்சோம். டீச்சர் எங்க எல்லாரையும் கூட்டிக் கொண்டு அரு கிலிருந்த ஒரு வேப்ப மரத்தடியில் உட்கார வெச்சுப் பாடம் நடத்தினாங்க. அங்கேயும் இரத்தத் துளிகள் விழ ஆரம்பித்தன!

''உடனே, டீச்சர், அங்கிருந்து ஒரு 'கான் கிரீட்' கட்டடத்தில் வெச்சுப் பாடம் நடத்தி னாங்க. அங்கேயும் முன்ன மாதிரி ரத்தத் துளிகள் விழுந்தன. இது ஊர்ல உள்ளவங் களுக்கு எல்லாம் தெரிஞ்சதும்... பள்ளிக் கூடம் முன்பு ஊர் மக்கள் கூடி விட்டனர். உடனே அன்னைக்குப் பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டது.

''மறுநாள் காலையில் மீண்டும் பள்ளிக் கூடம் திறக்கப்பட்டு, வகுப்புகள் நடந்து கொண்டிருந்தப்போ... மீண்டும் ரத்தத் துளிகள் விழ ஆரம்பிச்சது. எல்லாரும் என்னை ஒரு மாதிரியாப் பாத்தாங்க. என்னைச் சுற்றியிருந்த மற்ற மாணவிகளுக் கும் இந்த மாதிரி ரத்தத் துளிகள் விழுந் திருக்குன்னு பேசிக்கிட்டாங்க. என்னைப் பள்ளிக்கூடத்துக்கு வர வேண்டாம்னு சொன்னாங்க. ஆனா... அந்த ரத்தத் துளிகள் எப்படி விழுந்ததுன்னு எனக்கு

நிச்சயமாத் தெரியாது. எம் மேல விழுந்த பிறகுதான் என்னால பாக்க முடிஞ்சது. இதுதான் நடந்தது...!'' என்றாள்.

அதே போல் மார்ச் 29—ந் தேதி இரவு சுமார் 8 மணியளவில் அழகப்பபுரம் தெப்பக் குளம் சந்திப்பிலுள்ள பலசரக்குக் கடையின் முன்பு கூடி நின்றவர்கள் மீதும் இரத்தத் துளிகள் விழுந்திருக்கின்றன. அந்தப் பலசரக்குக் கடையின் அருகில்தான் சிறுமி பிருந்தாவின் வீடு உள்ளது. பல சரக்குக் கடையின் முன்பு உள்ள கூரையில் கீழேயிருந்து மேல் நோக்கி ரத்தத்தைச் சிந்தியது போன்ற அடையாளம் தெரிகின்றது.

ரத்தத் துளிகளை, அதே ஊரைச் சேர்ந்த ரத்தப் பரிசோதனையாளர் டி. டென்னிஸ் என்பவர் பரிசோதனை செய்து பார்த்திருக்கிறார். அவரை அணுகி, அது பற்றிக் கேட்டோம்.

''எனது பரிசோதனையில், அது மனித ரத்தம்தான் என்பது உறுதியாகத் தெரிந்தது. ஆனால், அதில் ஒருவித துர்நாற்றம் கலந்திருந்தது. எனக்குக் கிடைத்த சாம்பிளை வைத்து, அந்த ரத்தம் எந்த குரூப்பைச் சார்ந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை! மர்மமாக இப்படி ரத்தத் துளிகள் விழுமா என்பதைப் பற்றி என்னால் கூற முடியவில்லை. ஆனால், விழுந்தது மனித ரத்தத் துளிகள்தான் என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்!'' என்றார் அவர்.

அழகப்பபுரத்திலுள்ள பலரிடமும் விசாரித்ததில், எங்களுக்குச் சில உண்மைகள் தெரிய வந்தன. ரத்தம் விழும் போது யாரும் பார்க்கவில்லை. விழுந்த பிறகுதான் அவர்களுக்குத் தெரிகிறது! எல்லோருக்கும் பின்பக்கமாகத்தான் ரத்தத் துளிகள் விழுந்திருக்கின்றன. அல்லது பக்கவாட்டில் விழுந்திருக்கிறது. ஆரம்பத்தில் சிறுமி பிருந்தா செல்லும் இடங்களிலும், அவளைச் சார்ந்தவர்களுக்கும்தான் இப்படி ரத்தத் துளிகள் விழுந்திருக்கின்றன. இதனால், அச் சிறுமியை மற்றவர்கள் சந்தேகத்தோடு பார்த்திருக்கிறார்கள்.

ஆனால், மீண்டும் மே மாதம் 7—ந் தேதி அழகப்பபுரத்தில் உள்ள புனித அந்தோணியார் கோவிலில் விசேஷ பூஜை நடந்து கொண்டிருந்த போது, பெண்கள் பகுதியில் திடீரென்று ரத்தத் துளிகள் விழுந்திருக்கின்றன. இதனால் பெண்கள் பகுதியில் பீதியும் அச்சமும் ஏற்பட்டிருக்கிறது. இம் முறை ரத்தத் துளிகள் விழுந்த போது, சிறுமி பிருந்தா அழகப்பபுரத்தில் இல்லை என்கிறார்கள்.

சமீப காலமாக அழகப்பபுரத்தில் பல கொள்ளைகள் நடந்திருக்கின்றன. இந்தக் கொள்ளைகளைப் பற்றி மக்கள் போலீசாரிடம் புகார் சொல்லாமலிருக்கவும், தொடர்ந்து கொள்ளையடிக்கவும் கொள்ளைக்காரர்கள் அவ்வூர் மக்களைப் பீதியடையச் செய்யத்தான் இந்த மாதிரியான செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் பரவலாக மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

அதே ஊரைச் சேர்ந்த வேறு சிலர், ''எல்லாம் வெறும் கட்டுக்கதை! ரத்தமாவது... மழையாவது...? ஒண்ணுமில்லாத விசயத்தைப் பத்திரிகைக்காரங்க பெரிசு படுத்துறாங்க! வெளியூருக்குப் போக முடியலை. எல்லாரும் 'உங்க ஊர்ல ரத்த மழை கொட்டுதாமே... உங்க மேலேயும் விழுந்ததா...?' ன்னு கேட்கிறாங்க...!'' என்று அலுத்துக் கொள்ளுகிறார்கள்!

அழகப்பபுரம் ரத்த மழைச் சம்பவத்திலிருந்து மக்கள் விடுபடும் முன்பு, கன்னியாகுமரி அருகே அஞ்சு கூட்டு விளையிலுள்ள ஒரு குடிசை வீட்டில் பொருட்கள் எல்லாம் மர்மமாகத் தீப் பிடிக்கின்றன என்ற செய்தி மாவட்டம் முழுக்கப் பரவியது. அங்கும் சென்றோம்.

இசக்கி அம்மாள் என்ன நடந்தது என்பதை நம்மிடம் விவரித்தார்:

''ஏப்ரல் 18—ந் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் தூங்குவதற்குப் பாயைத் தரையில் போடும் போது, வீட்டிலிருந்த தையல் மிஷின் மீது போட்டிருந்த எனது பாவாடையில் திடீரென்று தீப்பிடித்தது. உடனே அத் தீயைத் தண்ணீர் விட்டு அணைத்தேன். காரணமின்றித் தீப் பிடித்ததால் பயமாக இருந்தது. எப்படியோ அன்று இரவு கடந்தது.

''மறுநாள், காலையில், எங்கள் பெட்டிக் கடை மேஜை டிராயரிலிருந்து தீப் புகை வந்தது. திறந்து பார்த்த போது, கற்பூரம் பற்றி வைத்தது போலத் தீ எரிந்து கொண்டிருந்தது. அவசர அவசரமாகத் தண்ணீர் தெளித்து அதையும் அணைத்தேன்.

''நான் துணிமணிகள் வைத்திருந்த சூட்கேஸினுள்ளிருந்து திடீரென்று தீப் புகை நாற்றமடித்ததும், உடனடியாக சூட்கேஸைத் திறந்து பார்த்த போது, அதிர்ச்சியடைந்தேன். எனது சேலைகள் தீப் பிடித்து நாசமாகியிருந்தன. சூட்கேஸின் உள்பக்கமும் தீப்பிடித்திருந்தது. நாங்கள் வீடு கட்டுவதற்காக அரசாங்கத்திடமிருந்து லோன் வாங்கி வைத்திருந்த ரூபாய் மூன்றாயிரம் எரிந்து சாம்பலாகியிருந்தது! இனி நாங்கள் எப்படி வீட்டைக் கட்டி முடிக்கப் போகிறோமோ? எப்படி கடனைத் திருப்பி அடைக்கப் போகிறோமோ...?'' இவ்வாறு வருத்தத்துடன் கூறிய அவர்,



* செண்பகம் பிள்ளை: ''பயந்து பயந்து வாழ்றோம்.''



* டென்னிஸ்: ''அது மனித ரத்தம்தான்.''

எரிந்த சூட்கேஸ், சேலைகளையும் எங்களிடம் காண்பித்தார்.

அழகப்பபுரம் ரத்த மழையைப் போன்றே இங்கும் தீப் பிடிக்கும் போது நேரில் யாரும் காணவில்லை! லோன் பணம் மூன்றாயிரம் ரூபாயையும் அப்படியே சுருட்டிக் கொள்ளத்தான் இப்படி ஒரு திடீர்த் தீ என்று கதை கட்டுகிறார்கள் என்று மக்கள் பலர் பேசிக் கொள்கிறார்கள். ஏனெனில் அந்த வீட்டில் தீப் பிடித்ததாகச் சொல்லப்படும் எந்தப் பொருளும் முழுமையாக எரிந்து சாம்பலாகவில்லை! ஆனால், ரூபாய் மட்டும் முழுமையாக எரிந்து போய் விட்டது என்று சொல்வதை எப்படி நம்புவது என்கிறார்கள்.

அடுத்த சில நாட்களில், குமரி மாவட்டத்தில் களியக்காவிளையில் ஒரு வீட்டில் திடீரென்று கல் விழுவதும், கட்டில்கள் ஆடுவதும், பாத்திரங்கள் பறப்பதும் போன்ற அதிசயங்கள் நடைபெறுவதாகச் செய்திகள் வரவே அங்கும் சென்றோம். கற்கள் விழும் வீட்டின் சொந்தக்காரர் செண்பகம் பிள்ளையைச் சந்தித்தோம்.

ஒரு கண் பார்வையை இழந்த அவர், "கடந்த ஏப்ரல் 25-ந் தேதி மாலையில் வெளி வராண்டாவில் நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது, எங்கள் மத்தியில் திடீரென்று ஒரு கல் வந்து விழுந்தது. மீண்டும் சிறிது நேரத்தில் ஒரு கல் வந்து விழுந்தது! தொடர்ந்து இப்படி கற்களும் சுட்ட செங்கல்லும் எங்கள் வீட்டுக் கூரையிலும், வீட்டினுள்ளும் வந்து விழவே, பக்கத்து வீட்டுக்காரர் இப்படி வேண்டுமென்றே செய்கிறார் என்று முடிவு செய்து, அவர் மீது போலீஸில் புகார் செய்தோம். பிறகுதான், இதற்குக் காரணம் பக்கத்து வீட்டுக்காரர் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டோம்!

"வீட்டில் தொடர்ந்து கற்கள் வந்து விழுந்ததால்... இடம் மாறியிருப்போம் என்று, பக்கத்திலுள்ள ஒரு லாட்ஜில் குடும்பத்துடன் தங்கியிருந்தோம். அங்குள்ள அறையில் கட்டில்கள் தானாக ஆடின. வெளியே எறிந்த பழத்தோல், உள்ளே வந்து விழுந்தது!

"மீண்டும் வீட்டிற்கே திரும்பினோம். அதே சம்பவம் தொடர்ந்தது. மந்திரவாதிகளை அழைத்து வந்து... பரிகாரம் செய்து பார்த்தோம். பயனில்லை. ஒன்பதாம் நாளன்று, வீட்டிலேயே சோறு பொங்குவோம் என்று தீர்மானித்து, சோறு பொங்கிய சில நிமிடங்களில், சோற்றுப் பானை தானாகவே அடுப்பிலிருந்து கவிழ்ந்து, சாதம் எல்லாம் தரையில் கொட்டி விட்டது. கடந்த ஒரு மாதமாக நாங்கள் பயந்து பயந்து இந்த வீட்டில் வாழ்ந்து வருகிறோம்" என்றார்.

பில்லி, சூனியம், பேய், பிசாசு சம்பந்தமாகக் கடந்த சுமார் பத்தாண்டுகளாக ஆராய்ச்சி செய்து வரும் ஃபாதர் ஜான் பிரகாஷைச் சந்தித்து, "பில்லி, சூனியம், மந்திரத்தினால் இப்படிச் செய்ய முடியுமா?" என்று கேட்டோம்.



* கலெக்டர் சுந்தரதேவன்: "உண்மையை விரைவில் கண்டுபிடிப்போம்..."

அதற்கு அவர், "நிச்சயமாக மந்திரத்தினால் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்யவே முடியாது. இது, யாரோ பின்னணியில் இருந்து கொண்டு செய்யும் காரியம்தான்! ஒருவேளை, அந்த ஆள், மன நோயால் பாதிக்கப்பட்டவராகக் கூட இருக்கலாம். ஆளைக் கண்டுபிடித்துத் தகுந்த சிகிச்சையளித்தால் எல்லாம் சரியாகி விடும்" என்றார் உறுதியாக.

கடைசியில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், என். சுந்தரதேவன் அவர்களை, அவருடைய இல்லத்தில் சந்தித்து, "ஸார்... அழகப்பபுரம் இரத்த மழை, அஞ்சுகாட்டு விளை திடீர்த் தீ, மற்றும் களியக்காவிளையில் ஒரு வீட்டில் தொடர்ந்து கற்கள் விழுவது — இப்படிப்பட்ட சம்பவங்கள் குறித்து, அரசு தரப்பில் உங்கள் கருத்து என்ன....?" என்று கேட்டோம்.

மாவட்ட ஆட்சித் தலைவர், என். சுந்தரதேவன் புன்னகையுடன் கூறினார்: "அழகப்பபுரம் ரத்த மழை சம்பவம் பற்றி நாங்கள் விசாரித்த வரையில், அது மிகைப் படுத்தப்பட்ட செய்திதானே தவிர, உண்மையல்ல என்பது தெளிவாகத் தெரிகின்றது. யாரோ ஒரு சிலர் மறைந்திருந்து இதைச் செய்வதாகத்தான் தோன்றுகிறது.

"அடுத்து, அஞ்சுகாட்டு விளையில் திடீர்த் தீப் பிடிப்பதாகச் சொல்லும் சம்பவமும் நம்பத் தகுந்ததல்ல! காரணம், அப்படி தீப் பிடிக்கும் போது யாரும் நேரில் பார்க்கவில்லை! மேலும், அந்த வீட்டுக்காரப் பெண், அரசிடமிருந்து லோன் வாங்கிய மூன்றாயிரம் ரூபாய் மட்டும் முழுமையாக எரிந்து சாம்பலாகி விட்டது என்பது ஏற்கக் கூடியதாக இல்லை!

"மூன்றாவது, களியக்காவிளையில் ஒரு வீட்டில் கற்கள் விழுவது சம்பந்தமாக எங்களுக்குத் தகவல் கிடைத்ததும் சப்-கலெக்டர் நேரில் சென்று பார்த்திருக்கிறார். அங்கு அவர் சில சம்பவங்களை நேரடியாகப் பார்த்திருக்கிறார். களியக்காவிளைச் சம்பவத்தில் மட்டும் ஏதோ ஒரு சங்கதி இருப்பது போல நாங்கள் உணர்கிறோம்! மொத்தத்தில் மேற்கண்ட சம்பவங்கள் பற்றித் தீவிரமாக விசாரணை செய்து வருகிறோம். உண்மையை விரைவில் கண்டு பிடிப்போம்!" என்றார் அழுத்தமாக.

கட்டுரையும், படங்களும்:
பாலு மணாளன்.



"குழந்தைகளின் எதிர்காலம் சிறக்க ஆங்கில மீடியம் தான் உதவும்"

பள்ளிக் கல்வி அளவில், பாடங்கள் கற்பிக்க ஏற்ற மொழி தமிழா, ஆங்கிலமா? என்பது பற்றி, பேராசிரியர் டாக்டர் மா. நன்னன், சென்னை கோபாலபுரம் நேஷனல் இங்கிலீஷ் ஸ்கூல் முதல்வர் திருமதி மோகனா சந்திரசேகர் இருவரும் இங்கே காரசாரமாக விவாதிக்கிறார்கள்......

மோகனா: என்னுடையமுதல்பாயின்ட், ஆங்கிலம் மூலம் பாடங்கள் கற்பிக்கும் போது, தேசிய ஒருமைப்பாட்டுக்கு நாம் உதவுகிறோம். அந்தந்த பிராந்திய மொழியில்தான் கற்பிக்க வேண்டும் என்கிற போது, பிளவுபட்டுப் போகிற சிந்தனைக்குத்தான் நாம் வழி வகுக்கிறோம் என்பதுதான்!

நன்னன்: நம் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆங்கிலம் இருந்தால் நல்லது; நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் பாட மொழியாக அது இருக்க வேண்டுமா என்ன? என்பதுதான் என் கேள்வி!

மோகனா: எந்த நவீன முன்னேற்றத்தை எடுத்துக்கொள்ளுங்கள். விஞ்ஞானம், தொழில் நுட்பம் என்று எதை எடுத்துக் கொண்டாலும் ஆங்கிலத்தில்தான் இருக்கிறது. இதற்குத் தகுந்த மாதிரி குழந்தைகளைத் தயார் செய்யாவிட்டால் அவர்கள் எதிர்காலம் மிகவும் சிரமமானதாக ஆகிவிடும். தமிழ் என்ற கூட்டுக்குள் அவர்களை அடைத்துவிட்டால், குறுகிய கல்வியறிவு காரணமாக பிற போட்டிப் பரீட்சைகளில் அவர்கள் பிரகாசிக்க முடியாமல் போய் விடும். புரொஃபஷனல் கோர்ஸ், பிஸினஸ், இண்டஸ்ட்ரி என்று எதை எடுத்துக்கொண்டாலும் அதில்தான் டெவலப்மென்ட்ஸ் இருக்கிறது.

நன்னன்: புதிய கருத்துக்கள் எல்லாம் ஆங்கிலத்தில் இருக்கிறது என்று சொல்லுகிறீர்கள். ஆங்கிலத்திலேயே படித்துவிட்டோமானால், தமிழ் மொழி வளரவே வளராது.

மோகனா: இங்கிலீஷ் மீடியம் என்கிற போது, தமிழ் படிக்கக்கூடாது என்பதில்லை.

நன்னன்: சாப்பிடுகிற நேரத்தில் வெளியே போய்ச் சாப்பிட்டு விட்டு வந்து விட்டோமானால், அடுப்பு மூட்ட மாட்டோம். வீட்டில் உப்பு, புளி, சாமான் எதுவும் இருக்காது... வீட்டிலே சமைக்கும் போதுதான் எல்லாம் ஒழுங்காக இருக்கும். 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று பாரதியார் சொல்லியிருக்கிறார். இல்லை என்றால் 'மெல்லத் தமிழ் இனிச் சாகும்' என்று பாரதி பாடியிருக்கிறார். நம் குழந்தைகளுக்கு நாம் தமிழில் கற்பிக்கத் தொடங்கினால்தான் அந்தக் கலைச் செல்வங்கள் — அறிவியலாக இருந்தாலும், தொழில் நுட்பமாக இருந்தாலும், வந்து சேரும்.

மோகனா: பிஸினஸ், இண்டஸ்ட்ரி விஷயங்களைத் தமிழில் கற்பித்தால் தமிழ் நாட்டுக்குள்ளேயே அவர்கள் இருக்க வேண்டியதுதான். வேலை வாய்ப்புக்கான சாத்தியக் கூறுகள் குறைந்து விடும். தெலுங்கு மீடியம், கன்னட மீடியம், மலையாள மீடியம் என்று ஒவ்வொரு மொழியிலும் பாடங்கள் சொல்லிக் கொடுக்கும் போது, மொழி வெறிக்குத்தான் அது வழி வகுக்கிறது. பிரிவினை மனப்பான்மைக்குத்தான் அது ஆரம்பமாக இருக்கிறது. ஆங்கிலம் அகில உலக மொழி....

நன்னன்: அது முழு உண்மை அல்ல. ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஆப்ரிக்கா... இங்கேதான் பிழைக்கலாம். பீக்கிங், டோக்கியோ, ரஷ்யா இங்கே எல்லாம் இது உதவாது. அங்கே நாம் தமிழில் பேசினாலும் ஒன்றுதான்; ஆங்கிலத்தில் பேசினாலும் ஒன்றுதான். ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு உலகம் முழுக்கச் சமாளிக்க முடியாது.

மோகனா: இந்தியாவுக்குள்ளேயே, இங்கிலீஷ் இருக்கிறதால்தான் ஒருவாறு மானேஜ் பண்ணுகிறோம்.

நன்னன்: அதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அது இன்டர்நேஷனல் இல்லை... இந்திய ஒருமைப்பாட்டுக்கு— ஆங்கிலம் உதவும். அதை ஒரு மொழியாகக் கற்பிக்கலாம். அதற்கு நீங்கள் ஸ்டாண்டர்டு என்ன வேண்டுமானாலும் வையுங்கள். அதற்கு மறுப்பே சொல்லவில்லை. இங்கிலீஷ் மூலமாகப் படித்தால்தான் அவர்கள் மேல் அறிவு பெற முடியும் என்கிறீர்கள். அப்படி என்றால் ஆங்கிலம் மூலம் கற்காமல் ஜப்பானிய, ஜெர்மனிய மொழி மூலமே கற்ற, நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளை, அறிஞர்களைப் பாருங்கள்.

மோகனா: நீங்கள் ஜப்பான் — ஜெர்மனியை நம்முடைய நாட்டுடன் ஒப்பிடக் கூடாது. இங்கு ஏகப்பட்ட மொழிகள் இருக்கின்றன. ஜப்பான் மாதிரி இன்னும் நாம் முன்னேறவில்லை — எதிலுமே.

நன்னன்: அதற்குக் காரணம் என்ன? நாம் ஆங்கிலத்தையே நம்பி இருக்கிறோம். அதனால்தான். இலங்கையில் தொழில் நுட்பம், மருத்துவம் எல்லாம் பலர் தமிழில் படித்துச் சிறந்து விளங்குகிறார்கள்... தாய் மொழி மூலமாகக் கல்வியைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லாத கல்வியாளர்கள் இடையவே கிடையாது. தாகூர், காந்தி என்று நம் நாட்டிலேயே இப்படிச் சொல்லிய அறிஞர்களைக் குறிப்பிடலாம்.

மோகனா: தமிழில் படிக்கக் கூடாது என்று இல்லை.. தமிழ் மொழி மூலம் பாடம் கற்பிக்க வேண்டுமானால் தகுந்த புத்தகங்கள் வேண்டுமே?

நன்னன்: இது வைத்தால்தான் அது வரும். யார் போடுவார் புத்தகங்கள்? நீங்கள் பத்தாயிரம் பிரதிகள் வாங்குவீர்களா? அது விற்கும் என்றால்தான் போட முடியும். நாங்கள் தயாராகவே இருக்கிறோம், எழுதிக் கொடுக்க. இப்போது கூட சர்ஜரி பற்றித் தஞ்சாவூர்ப் பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு டாக்டர், புத்தகம் ஒன்று வெளியிட்டிருக்கிறார். அருமையான மொழிபெயர்ப்பு...

மோகனா: மொழிபெயர்த்து, நமக்கு வந்து, அதை நாம் புரிந்து கொள்ளுவதற்குள் புதிது புதிதாக எத்தனையோ கண்டுபிடிக்கப்பட்டு விடுகிறது. நாம் அறிவியலில், எங்கேயோ பின்னால் இருக்கிறோம். கம்ப்யூட்டர் எல்லாம்... கொண்டு வந்து 'இன்ஸ்டால்' பண்ணி, மொழிபெயர்ப்பு எல்லாம் நடந்து முடிவதற்குள், அது 'அவுட்—டேட்டட்' ஆகி விடுகிறது. பள்ளிக்கூடங்களில்தான் நேரிடையாகப் பார்க்கிறோமே! அது பயன்தரக் கூடியதுதானா? இஸிட் புரொடக்டிவ்? ஏன் ஆங்கிலத்தின் மீது இத்தனை வெறுப்பு? அது மீடியமாக இருப்பதில் என்ன தப்பு?

நன்னன்: ஆங்கிலத்தை நான் வெறுக்கவில்லை. தமிழ் நாட்டில் கட்டாயமாக இங்கிலீஷ் படிக்க வேண்டும் என்றுதான் சொல்லி வருகிறோம். இங்கிலீஷ் கூடாது என்று யாருமே சொல்லவில்லை. ஆனால் இங்கிலீஷ் என்பது கண்ணாடி மாதிரி இருக்கணும். அதுவே கண்ணாயிடக் கூடாது. தேவையான போது எடுத்துப் போட்டுக் கொள்ளணும். கண்ணையே எடுத்து விட்டுக் கண்ணாடி போட்டுக் கொள்ள முடியாது. தமிழில் எது முடியவில்லையோ அப்போது மட்டும், கண்ணாடி மாதிரி ஆங்கிலத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.

மோகனா: ஆங்கிலம் ஒரு லிங்க் லாங்குவேஜ். மக்கள் எல்லாரையும் இணைக்கிறது. உலகில் எங்கே போனாலும் எளிதாக 'கம்யூனிகேட்' பண்ணலாம். அப்புறம் இந்த மொழி வெறியை உண்டாக்காமல் பார்த்துக் கொள்ளலாம்.

நன்னன்: எதை மொழி வெறி என்கிறீர்கள்? ஒரு பஞ்சாபியையோ, ஓர் ஆங்கிலேயரையோ நீங்கள் தமிழில்தான் பேச வேண்டும் என்றால் அது மொழி வெறி. என் பிள்ளையை நான் தமிழில் படிக்கணும் என்று சொன்னால் எப்படி அது வெறியாகும்?

மோகனா: இல்லை. நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்! குழந்தைகளைத் தயார் பண்ணும் போது ஜாக்கிரதை

"ஆங்கிலத்திலேயே போதித்து வந்தால் தமிழ் வளரவே வளராது!"



யாக இருக்க வேண்டும். அதில் மொழி வெறி வந்து விடக் கூடாது என்கிறேன். பற்று வேறு; வெறி வேறு. அது எல்லை கடந்து விடக் கூடாது.

நன்னன்: எது எல்லை என்கிறீர்கள்?

மோகனா: குழந்தைகளின் சைகாலஜியைச் சொல்லுகிறேன். மீடியம் என்று வருகிற போது, அதில் தானாகவே அவர்களுக்குத் திறமை வந்து விடுகிறது. தமிழ் என்று வரும் போது, மற்ற மொழிகளுக்கு இரண்டாம் இடம்தான் வருகிறது. சரியான முறைப்படி, போதனா மொழியாகப் பண்ணினால் பரவாயில்லை. ஆனால் இப்போது தமிழ் மீடியம் பள்ளிகளில் ஆங்கிலம் வந்து சரியான முறையில் கற்பிக்கப்படும் சூழ்நிலை கிடையாது. ஆகையால் அதில் ஒரு குறைந்தபட்சத் தரம் கூட இருப்பதில்லை... இப்போது முக்கியமாக அறிவியல், தொழில் நுட்பச் செய்திகள் ஆங்கிலத்தில் உடனடியாகக் கிடைக்கிறது. அதற்காகவாவது, ஆங்கிலக் கல்வியை வைத்துக் கொள்ள வேண்டும்.

நன்னன்: தமிழ் மொழிப் பள்ளிக் கூடங்களில் ஆங்கிலம் நன்றாக வரவில்லையே என்று கவலைப்பட்டீர்கள். ஆங்கிலம் அந்நிய மொழி. அதில் திறமை வராததற்கு நீங்கள் இத்தனை கவலைப் படுகிறீர்கள்.

மோகனா: ஏனென்றால், நான் பிராக்டிகலாகப் பார்க்கிறேன்.

நன்னன்: அதே மாதிரி தமிழனுக்குத் தமிழில் திறமை இல்லையே என்று நீங்கள் வருத்தப்படவில்லையே!

மோகனா: இப்போது இருக்கிற சூழ்நிலையை வைத்துப் பார்த்தோமானால் நமக்குச் சில பலவீனங்கள், குறைபாடுகள் இருக்கின்றன. தமிழ் மொழி எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கண்டிப்பாக இருக்க வேண்டும். ஆனால் மீடியம் இங்கிலீஷ் ஆக இருந்தால் வாழ்க்கையில் உதவிகரமாக இருக்கும்.

நன்னன்: அதாவது தமிழ் ஒரு மொழியாகப் படிக்கப்படட்டும் என்கிறீர்கள்?

மோகனா: இல்லை. நாங்கள் கூட சண்டை போட்டு, தமிழ் மொழியை கோர்ஸ்—A ஆகக் கற்பிப்பதற்கு அனுமதி வாங்கியிருக்கிறோம்! ஏனென்றால் தமிழில் ஆர்வம் இருக்கிற குழந்தைகளுக்கு மேற்கொண்டு உதவலாம். பிற்காலத்தில் இவர்களே கூட, நீங்கள் சொல்கிற மாதிரி சயன்ஸ் புத்தகங்களைத் தமிழில் கொண்டு வரலாம். ஆனால் இன்றையத் தேதியில் நிலைமை என்ன? ஆரம்பமாக, இங்கிலீஷுக்கு எத்தனை முக்கியத்துவம் இருக்கிறதோ, அதே அளவு, ஆங்கில மீடியம் பள்ளிகளில் தமிழுக்கும் கொடுக்கலாம். தமிழ் ஸ்டாண்டர்டை உயர்த்தலாம். நிறையப் புத்தகங்கள் கொடுக்கலாம். திடீரென்று ஒரு மாற்றம் கொண்டு வந்தால், குழந்தைகளுக்குத்தான் கஷ்டம். படிப்படியாகத்தான் மாற்றத்தைச் செய்ய வேண்டும்.

நன்னன்: ஈக்வல் இம்பார்டன்ஸ் கொடுக்கலாம் என்று சொல்லுகிறீர்கள். ஆனால், தமிழை ஒரு விடரரி மொழியாக மட்டும் படிக்கட்டும். மற்ற விஞ்ஞானம், கணிதம் எல்லாம் ஆங்கிலத்திலேயே இருக்கட்டும் என்றால், அது எப்படி ஈக்வல் இம்பார்டன்ஸ் ஆகும்?

மோகனா: மெடீரியல் இல்லையே! எங்கே இருக்கிறது?

நன்னன்: தமிழ் மொழி வளர வேண்டுமா வேண்டாமா? பாட்டு எழுதுவதோடு, கதை எழுதுவதோடு நின்று விடணுமா? எல்லாப் பாடங்களையும், கருத்துக்களையும் சொல்லக்கூடிய மொழியாக வளரணுமா வேண்டாமா?

மோகனா: கட்டாயம் வளர வேண்டும்.

நன்னன்: அப்போ பாடம் சொல்லிக் கொடுக்காமல் எப்படி வளரும்?

மோகனா: தமிழ் மீடியத்தை எல்லா ஸ்கூல்களிலும் கொண்டு வந்தால், தமிழ் நாட்டின் எதிர்காலம் என்ன என்று யோசித்தீர்களா?

நன்னன்: இங்கிலீஷை நாம் விடவில்லை. அதை ஒரு பாடமாகப் படிக்கவே செய்கிறோம்.

மோகனா: அது மட்டுமே போதும் என்கிறீர்களா? முன்பு தமிழ் மீடியத்தில் படித்த பல அறிஞர்கள், அதிகாரிகள் ஆங்கிலத்தில் சிறப்பாக எழுத, பேச, முடிகிறது என்றால் அதற்கு அப்போது இருந்த ஸ்டாண்டர்டுதான் காரணம். இப்போது குறைந்து விட்டது.

நன்னன்: ஆங்கிலம் அந்நிய மொழி. அதன் தரம் குறைந்து விட்டதே என்று நீங்கள் கவலைப்படும் அளவுக்குத் தமிழைப் பற்றி நீங்கள் கவலைப்படுவதில்லையே என்பதுதான் என் குறை...

மோகனா: நீங்கள் இவ்வளவு பேசுகிறீர்கள். ஏன் உங்கள் பேரக் குழந்தைகளை ஆல்ஃபா மெட்ரிகுலேஷன் பள்ளியில் சேர்க்க வேண்டும்?

நன்னன்: அது வேறு பாயிண்ட். அதைப் பற்றி நாம் பேசவில்லை. தமிழில் முடியுமா, முடியாதா என்பதுதான் விவாதம்.

மோகனா: என் பள்ளியைப் பற்றி, பிரின்ஸிபல் என்ற முறையில் எனக்கு நன்றாகத் தெரியும். அந்த அனுபவத்தை வைத்துத்தான் ஆங்கிலத்தில் படிப்பது நல்லதென்று சொல்லுகிறேன். தமிழ் மொழி மீது எனக்கு வெறுப்புக் கிடையாது.

நன்னன்: அனைத்துச் சிந்தனையையும் நாம் ஆங்கிலத்துக்கு மாற்றிக் கொண்டால், தமிழ் மொழி என்ன ஆவது என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டாமா என்றுதான் நானும் கேட்டுக் கொள்கிறேன்!

தொகுப்பு: சாருகேசி

அட்டையில்:

மாணவிகள் ஐரின் ஜோஸப், ஜெயந்தி.

அட்டை வண்ணப்படம், படங்கள்:

யோகா




காம்ப்ளான் சாம்பியன்கள்!
Complan
"ஆரோக்கியமான முழுமையான உடல் வளர்ச்சிக்கு உன்னதமானது காம்ப்ளான்."
–அனிதா
Anita Sood
இந்திய நீச்சல் சாம்பியன்.
அனிதா – இன்றைய இளைஞர்களின் நீச்சல் திறமையை வளர்க்க உதவுகிறார். அவர் காம்ப்ளானை சிபாரிசு செய்கிறார். காம்ப்ளான், ஆரோக்கியமான முழுமையான உடல் வளர்ச்சிக்குப் பரிபூரண திட்டமிட்ட உணவாகும்.
நினைவிருக்கட்டும், உங்கள் வளரும் குழந்தைகளுக்கு உன்னதமானது காம்ப்ளான்.
Complan
23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்க்கத் தேவையில்லை
காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு

GX/45/213 TML

குங்குமப் பூ

தினசரி உணவில் குங்குமப் பூ சில இதழ்கள் சேர்த்து உண்டு வர கண் பார்வைக் குறைபாடுகள் வராமல் தடுக்கலாம். குங்குமப்பூ பல நோய்களைக் குணப்படுத்தக் கூடியது.



ஆதாரம்: மூலிகை மணி



எங்களிடம்

1. குங்குமப்பூ கோதுமை ஹல்வா
2. குங்குமப்பூ ஜாங்கிரி
3. குங்குமப்பூ லட்டு
4. குங்குமப்பூ பாதாம் ஹல்வா
5. குங்குமப்பூ பேடா

கிடைக்கும்

கல்யாண வைபவங்களுக்கு: சீர்முறுக்கு, சீர்முள்ளு தேன்குழல், தேன்குழல், சீர் அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்து தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24-2-வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு
சென்னை - 600 020
போன்: 412557.

காவல் பூனைகள்



உயிரைக் கொடுக்கத் தயாராயுள்ள பல்லாயிரம் தொண்டர்களைக் கொண்ட செல்வாக்குப் படைத்த முதல்வர் நோய் வாய்ப்பட, அடுத்த தட்டில் உள்ள குட்டித் தலைவர் அவர் இடத்தை எட்டிப் பிடிக்கும் ஆயத்தத்தில் முதல்வரின் உயிருக்கு உலை வைக்கப் பார்க்க, இந்தச் சதியறிந்த காவல் பூனைகள் அவர் உயிர் காக்கும் முயற்சியில் போராட, வில்லன்கள் அவர்களை அழிக்கப் பார்க்க... சத்திய மேவ ஜயதே!

அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் அரசியல் என்று சொல்கிறதுதான். அதற்காக ஒருவர் பாக்கியில்லாமல் எல்லாருமே இப்படியா? திரையில் தெரிகிறவர்களில் இன்னான் இறுதி வரை யோக்கியனாய் இருப்பான் என்று நம்பினீர்களோ, 'மோசம் போனேன் கோவிந்தா' என்று தலையில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்து விட வேண்டியதுதான். முதல்வர் மட்டும் விதிவிலக்கு போலும்! 'அப்பேர் உங்க சொத்து பத்தெல்லாம் இவங்களுக்குத் தான்னு சொல்லுங்க,' என்று நிருபர்கள் மடக்க, முதல்வருடைய செகரட்டரி, 'ஐயாவோட சொத்துன்னா அது நாலு கதர் ஜிப்பாவும் நாலு வேட்டியும்தானேய்யா,' என்கிறார்! அத்தனை நேர்மையான மனிதராக்கும்! வாழ்க!

திரும்பி வந்த மஞ்சுளா அளவுக்கு ராதிகாவுக்குக் காட்சிகள் இல்லாவிட்டாலும் கதையை முடித்து வைக்கும் பங்கு ஏற்றதால் அவரிடம் ஒரு விசுவாசம் ஏற்படுகிறது. டாக்டர் மஞ்சுளாவுக்கும், ராதிகாவுக்கும் ஏற்படும் மோதலில் இருவருமே நன்கு எடுபட்டிருக்கிறார்கள். 'உன் கணவரால் தான் முதல்வரின் உயிருக்கு ஆபத்து,' என்று மஞ்சுளா சொன்னதும் ராதிகா சிலிர்த்துக் கொண்டு, 'நீங்க எதிரிகளண்டை எவ்வளவு பணம் வாங்கினீங்க டாக்டர்?' என்று ஆரம்பித்துச் சாடுகிற சாடல் என்ன, பதிலுக்கு மஞ்சுளா ஆதாரம் காட்டி அவர் கணவன் ரவி அயோக்கியர்தான் என்று நிரூபிக்கும் அழுத்தம் என்ன? ஒன்றுக்கு ஒன்று வாங்கல் இல்லை.

நிழல்கள் ரவிக்கு ரொம்பக் கை வந்த பாத்திரம். இதிலே இன்னும் பாந்தம். முதல்வரிடம் உயிரையே வைத்திருப்பது போல் அவர் போடும் வேஷம்; காவல் பூனை பானு சந்தரிடம் கையும் மெய்யுமாய்ப் பிடிபடும் போது ஒரு திடுக்குடன் கூடிய நரிப் பார்வை; எதிரியை விலைக்கு வாங்கப் பேரம் பேசும் இதம் — படு சுபாவம்.

ஆரம்பத்தில் அந்தச் சித்திரக் குள்ளனை வைத்துக் கொஞ்சம் சிரிப்பு மூட்டப் பார்த்திருக்கிறார்கள். அத்தோடு சரி. அப்புறம் டென்ஷன் டென்ஷன், ஒரே டென்ஷன்!


சில நுணுக்கமான அரசியல் சூதாட்ட வித்தைகளை ரசிக்கலாம். உதாரணமாய் அந்த ஸ்பெஷலிஸ்ட் டாக்டர், 'நான் உன்னைப் பத்தி ஜனங்ககிட்ட சொல்லத் தான் போறேன்,' என்று விறுவிறுவென்று கேட்டை நோக்கி நடக்க, பின்னால் ஒருவன், 'டாக்டர், வேண்டாம் டாக்டர்! சொன்னா கேளுங்க டாக்டர்!' என்று கெஞ்சிக் கொண்டே வர, ஜனங்கள், 'என்ன ஆச்சு?' என்று விசாரிக்க, பின்னால் வந்தவன், டாக்டரை முந்திக் கொண்டு, 'தலைவருக்கு அவசரமா ஆபரேஷன் செய்யணும். இந்தச் சமயத்திலே, 'நான் வீட்டுக்குப் போய் பிராந்தி சாப்பிட்டுட்டுத்தான் வருவேன்'னு டாக்டர் கிளம்பறார்! சொன்னா கேட்க மாட்டேங்கறார்...' என்று சொல்லி வைக்க, வெறிபிடித்த ஜனங்கள் டாக்டரைப் பேச வொட்டாமல் அடித்து நொறுக்கிக் கபால மோட்சம் தரும் காட்சி.


சம்பந்தா சம்பந்தமில்லாமல் எங்கோ ஒரு சாமியார். அவர் நடத்துகிற மனிதச் சங்கிலிப் பிரார்த்தனையோ போராட்டமோ — ஏதோ புரியாத ஒன்று. அகலத் திரைக்கு வாகாக இருக்கும் என்று சேர்த்து விட்ட மாதிரி இருக்கிறது.

சும்மா அப்பளம் நொறுக்குகிற மாதிரி படாபடா தடுப்புக் கண்ணாடிகளைப் பொடிப் பொடிப் பொடியாய் நொறுக்கித் தள்ளியிருக்கிறார்கள் பாருங்கள்! ஒரு நூறு இருக்கும். சண்டையென்றால் சண்டை, மணிக்கணக்கில் நீளுகிறது.

போதுமடா சாமி. வெளியே வந்த பிறகு கண்களில் படுகிறவர்கள் எல்லாம் ஏதோ சதி பண்ணப் போகிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது!

— பி. எஸ். எஸ்.


பஞ்சாயத்து ஆட்சி —
ஜவஹர் ரோஜ்கர் யோஜனா
பொங்கலூர் மாடுகளம்
தேசிய முன்னணி


இலவச திட்டங்கள்
மின்சாரம் தண்ணீர் தட்டுப்பாடு


ஹயாதி புடிச்ச தி.மு.க. ஆட்சி! சர்வ ரோக நிவாரணி இந்த லேகியம்!
பல்லி சூன்யம், பேய் புடிச்ச தி.மு.க. ஆட்சி! அது அம்போன்னு போக இந்த தாயத்து கட்டு!
லேகியம்
கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்
உண்ணா விரதம்



கல்கி

1989 ஜூன் 11
மலர் 47 இதழ் 45
சுக்ல வைகாசி 29



பஞ்சாயத்துப் பாட்டுக்குப் பக்கவாத்தியமும் உண்டு!

பிரதமரின் பஞ்சாயத் ராஜ் விவகாரம் பரிகாசத்துக்கு இடமளிப்பதாக ஆகி விட்டது. இதற்கு ஒரு முக்கிய காரணம் டீ.வி. அரசு இலாகாவாக இயங்குகிற டீ.வியை ஏதோ தமது சொந்த நிறுவனம் போலப் பயன்படுத்திக் கொள்கிறார் ராஜீவ். பஞ்சாயத் ராஜ் திட்டத்துக்கும், அதன் மூலம் தமக்கும் தமது கட்சிக்கும் விளம்பரம் தேடித் தர டீ.வியை அவர் உபயோகித்துக் கொள்வது பலமான கண்டனத்துக்கு உரியது. மக்கள் இதனை நன்றாகவே புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதன் அடையாளம்தான் இத்தனை கிண்டலும் கேலியும்.

எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒருவர் பாக்கியில்லாமல் பிரதமரின் பஞ்சாயத் ராஜ் திட்டத்தை வன்மையாகக் குறை கூறி விமர்சித்திருக்கிறார்கள். அவர்களுள் நமது முதல்வர் ஒருவர் மட்டுமே பிரதமருக்கு உரிய மதிப்பளித்துக் கௌரவமான முறையில் கடிதம் எழுதியிருக்கிறார். இதர எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆவேசம் பிரதமரின் பிடிவாதத்தை வளர்த்தாலும் கருணாநிதியின் கண்ணியமான போக்காவது பிரதமரின் கண்களைத் திறக்க வேண்டும். பிடிவாதத்தைத் தளர்த்தி, 'என்ன கூறியிருக்கிறார், ஏன்?' என்று சிந்திப்பாரானால் நல்லது. முதல்வர் கூறியிருப்பன எல்லாவற்றையுமே பிரதமர் ஏற்றுக் கொள்ளா விட்டாலும் சில அடிப்படை அம்சங்களை அவர் புறக்கணிக்கவே முடியாது; கூடாது.

பஞ்சாயத் ராஜ் பற்றி விவாதிக்க முதல்வர்கள் மாநாட்டைப் பிரதமர் கூட்டிய போது சட்டசபைத் தொடரில் முக்கிய நிகழ்ச்சிகள் இருந்தபடியால் நமது முதல்வரால் அம்மாநாட்டில் கலந்து கொள்ள முடியவில்லை. நாஞ்சில் மனோகரனைத்தான் அனுப்பி வைத்தார். அந்த மாநாட்டின் போதும் பிரதமர் உத்தேசித்துள்ள பஞ்சாயத் ராஜ் சட்டம் என்ன? அது எத்தகைய அம்சங்களை உள்ளடக்கியிருக்கும் என்பது போன்ற விஷயம் எதுவுமே தெரிவிக்கப்படவில்லை. அதனால் மேலோட்டமாக உள்ளாட்சி அமைப்புக்களின் முக்கியத்துவம் பற்றி மட்டுமே பேசப்பட்டது. இதன் பின்னரே மசோதா தயாராயிற்று. எனவே பிரதமர் இன்னொரு முதல்வர்கள் மாநாட்டினைக் கூட்டி இப்போது உருவாக்கப்பட்டுள்ள மசோதா பற்றிய அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிய வேண்டும். நாடாளுமன்றத்தில் தமக்கு இருக்கும் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி, பிரதமர் அள்ளித் தெளித்த அவசரக் கோலமாகச் சட்டத்தை நிறைவேற்றி வைத்துவிடக் கூடாது.

அடிப்படை ஜனநாயகம் வளர வேண்டும், பலம் பெற வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் உள்ளாட்சி அமைப்புக்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு விதமாகத் திட்டமிடப்பட்டு வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. இவை அனைத்தையும் ஒரே மாதிரியாகச் செய்து மத்திய அரசின் நேரடி கவனத்துக்குக் கீழ் கொண்டு வந்துவிட வேண்டிய அவசியமே இல்லை. அந்தந்த மாநில மக்களின் வாழ்க்கை முறைகள், சூழ்நிலைகள், விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப அடித்தள ஜனநாயக அமைப்புக்கள் உருவாகி, வளர்ந்து, பலப்படுவதே சிறந்தது. தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புக்களுக்கென இப்போது நிலவுகிற நடைமுறைகள், விதிமுறைகள் முதலியன மத்திய அரசு இப்போது உருவாக்கியுள்ள மசோதாவில் காணப்படும் நடைமுறைகளை விடப் பல விதங்களில் சிறந்தவை! புதிய சட்டம் நிறைவேற்றப்படுமானால் சில மாநிலங்களில் முன்னேற்றத்துக்குப் பதில் பின்னடைவே நிகழும்!

நமக்குப் புரிகிற இந்த விஷயங்கள் பிரதமருக்குப் புரியாமல் போகாது. ஆனால் புரிந்த மாதிரியே அவர் காண்பித்துக் கொள்ள மாட்டார்! காரணம், அவருக்குத் தேர்தல் ஜுரம் வந்துவிட்டது! பஞ்சாயத்து அமைப்புக்களையும் அவற்றின் நிதி வசதிகளையும் நேரடியாக மைய அரசின் எதேச்சாதிகாரக் கட்டுப்பாட்டுக்குள் படிப்படியாகக் கொண்டு வந்து விட்டால், ஆசை காட்டியோ, அல்லது மிரட்டியோ அவற்றை இ. காங்கிரஸ் சார்பாக இயக்குவிக்கலாம் என்பதுதான் நோக்கம். அதனால்தான், பஞ்சாயத்து ராஜ் மசோதா தவிர நகர்ப்புற மேம்பாட்டு மசோதா ஒன்றும் கொணர்ந்து நகராட்சிகளையும் வளைத்துப் போடப் பார்க்கிறார்.

தமது இந்தப் பஞ்சாயத்துப் பாட்டுக்குப் பக்க வாத்தியமாக இருபத்தோராம் நூற்றாண்டு வயலினையும் ஜவஹர் ரோஜ்கர் யோஜனா மிருதங்கத்தையும் பயன்படுத்துகிறார், பிரதமர். மக்களோ, கர்ண கடூரம் என்று காதுகளைப் பொத்திக் கொள்கிறார்கள்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

‘காமராஜ் திட்டம்’ தோல்வியடைந்தது!



○○ காமராஜ் திட்டம் என்பது நேருஜி தமது வசதிப்படி அமைச்சர்களைக் கட்சிப் பணிக்கு அனுப்பவும் புதிய அமைச்சர்களை நியமிக்கவும் உருவானது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி அல்லவாம்! டாக்டர் ராதாகிருஷ்ணன் பற்றி சச்சிதானந்தமூர்த்தி எழுதியுள்ள நூல் என்ன சொல்கிறது என்றால், காமராஜும் ராதாகிருஷ்ணனும் ஹைதராபாத்தில் சந்தித்த போது இந்தத் திட்டம் உருவாயிற்று! அதன் உண்மை நோக்கம் நேருவைப் பிரதம மந்திரி பதவியிலிருந்து நீக்குவதுதான்! பிரதமர் உள்பட எல்லா அமைச்சர்களும் ராஜினாமா செய்து, மக்களிடையே உழைத்து, காங்கிரஸின் செல்வாக்கை உயர்த்துவது என்பதுதான் காமராஜ் திட்டம். ஆனால் நேரு இல்லத்தில் கூடிய காங்கிரஸ் செயற் குழு, ‘நேருவின் தலைமை நாட்டுக்கு இன்றியமையாதது, எனவே அவரைத் தவிர மற்ற எல்லாரும் ராஜினாமா செய்ய வேண்டும்’ என்ற மாறுதலுடன் காமராஜ் திட்டத்தை ஒப்புக்கொண்டது! இதை அறிந்த போது ராதாகிருஷ்ணனுக்கு மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டதாம்!

— ஸண்டே

* * *

○○ ஓர் சராசரி மனிதன் இரவில் தூங்கும் போது 20—லிருந்து 65 தடவை வரை திரும்பித் திரும்பிப் படுக்கிறான்!

○○ முதல் பொய்ப் பல் மரத்தினால் செய்யப்பட்டது. கட்டிக் கொண்டவர்: ஜார்ஜ் வாஷிங்டன்!

○○ லண்டன் மிருகக் காட்சி சாலையில் உள்ள சிம்பென்ஸி குரங்கு இதுவரை 250 படங்களை ‘பெயிண்ட்’ செய்திருக்கிறது! அவற்றில் சில அங்கு வரும் உல்லாசப் பயணிகளால் விலை கொடுத்து வாங்கப்பட்டிருக்கின்றன!

○○ ஒரு சராசரி மனித உடலில் இருக்கும் பாஸ்பரசைக் கொண்டு இரண்டாயிரம் தீக்குச்சிகளையும், இரும்பைக் கொண்டு பதினைந்து செ.மீ. நீளத்திற்கு ஆணியும், கொழுப்பைக் கொண்டு எட்டு பார் சோப்புக்களையும் செய்யலாம்!

○○ கடல் பிராணி அக்டோபஸுக்கு எத்தனை இதயங்கள் தெரியுமா? மூன்று!

○○ ஒரு பேப்பரை (அது எவ்வளவு பெரிய அளவில் இருந்தாலும் சரி) ஏழு மடிப்புகளுக்கு மேல் மடிக்க முடியாது!

○○ கொரில்லாக்களுக்கு நீந்தத் தெரியாது!

— மலர்மதி.


Liril
THE FRESHNESS SOAP
ளுகிளு பரவசக் களி:
லிரில் புத்துணர்வுக் குளி!
லிரில்
புத்துணர்வு சோப்!
மனம் குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி



"எழுத்தாளர் ஏன் இரண்டு தட்டுல சாப்பிடறார்?"

"ஒன்று அவருக்காம். இன்னொன்று அவரோட கற்பனைக் குதிரைக்காம்!"

— இரா. நரசிம்மன்.

ஒருவன்: "எங்க நாட்டு மன்னர் எதிலுமே ரொம்ப முன் ஜாக்கிரதை!

மற்ற ஊர்க்காரன்: "எதை வச்சு அப்படிச் சொல்றே?"

ஒருவன்: "போர் முரசு கொட்டுற சத்தம் கேட்டதுமே நாட்டை விட்டு நழுவிடுவார்!"

— நீடாமங்கலம் ஜே.பி.



நிருபர்: "தேனிலவுக்கு நீங்க அமெரிக்கா போனதில் உங்க கணவருக்கு வருத்தமாமே?"

நடிகை: "ஆமாம் சார். அவரையும் அழைச்சிட்டுப் போகலைன்னுதான்!"

— நாகை பாபு




"'டி. வி. பார்க்காதேடா, ரேடியோ கேட்காதேடா'ன்னு முட்டிண்டேன்! சொன்னபடி கேட்டால்தானே?"

"ஏன், என்ன ஆச்சு?"

"தலையைப் பிச்சுண்டு, 'பஞ்சாயத், பஞ்சாயத்'னு கத்திண்டு தெருவிலே ஓடறானே!"

— எம். எஸ். பாலசுப்ரமணியன்.






'சல்மான் ரஷ்டி' என்றாலே கோமேனிக்குக் கோபம் வரும். ஆனால், அவர் மனைவி 'விக்கின்ஸ் ரஷ்டி' எனில் போப் பாண்டவருக்குக் கோபம் வருமோ என்னவோ, பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்!

இவரும் ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதன் தலைப்பு 'ஜான் டாலர்'. இது கிறிஸ்துவ மதச் சார்பான யூகாரிஸ்ட் சடங்குகளைப் பற்றிய படு சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறுகிறதாம்!

— பால்கி.



அரசியல்வாதிகளே, டைரி எழுதுங்கள்!

என்னைப் போல் வேறு யாரும் டைரி 'மெயின்ட்டையின்' பண்ண முடியாது என்று கர்வப்பட்டுக் கொண்டிருக்கும் என்னை, அன்று பத்திரிகையில் வந்த செய்தி, பயங்கர சம்மட்டி அடியாகத் தாக்கியது.

சென்னை நகர்த் திருடர் ஒருவரின் டயரி எழுதும் பழக்கத்தை அந்தப் பெட்டிச் செய்தியில் போலீஸ் கமிஷனர் வானளாவப் புகழ்ந்திருந்தார்.

திருடச் செல்லும் வீடுகள், திருடிய பொருட்கள், அடமானம் வைக்கப்பட்டிருக்கும் கடைகளின் முகவரிகள் அனைத்தையும் டயரியில் குறித்து வைக்கும் பழக்கமாம் அவருக்கு. அவரைப் பிடித்துப் போலீஸ் விசாரித்த போது, மறு பேச்சுப் பேசாமல் டயரியை எடுத்துக் கொடுத்து விட்டாராம். அதன் துணை கொண்டு ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் மீட்கப்பட்டனவாம்.

இந்த அபூர்வ அனுபவத்தை போலீஸ் இலாகா பயன்படுத்திக் கொண்டு, மாமூல் திருடர்களையும் 'பிக்பாக்கெட்'டுகளையும் பிடிக்கும் போது, அவர்கள் கையில் ஒரு டயரியைத் திணித்து, தங்கள் தொழில் விவரங்களைத் தினமும் அதில் குறிக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்பவர்களுக்கு சில சலுகைகள் கூட அறிவிக்கலாம். போலீசைத் திசை திருப்ப வேண்டுமென்றே டைரியில் தவறான தகவல்கள் எழுதுகிறவர்களுக்கு ஸ்பெஷல் தண்டனை அளிக்கப்படும் என்றும் எச்சரிக்கலாம்.

இதே மாதிரி, அரசியல்வாதிகள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் போது ஒவ்வொருவருக்கும் பெரிய டைரி ஒன்றைப் பரிசாக அளிக்க வேண்டும். பண விஷயமாகத் தங்களது அன்றாட நடவடிக்கைகளை மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் அவர்கள் எழுதி வைக்க வேண்டும். இதனால் பெரிய நன்மை உண்டு.

இப்படிச் செய்தால் பதவியை இழந்த அரசியல்வாதிகள் மீது, யாரும் ஆதாரமற்ற, அடாவடித்தனமான குற்றச்சாட்டுக்களைக் கூற முடியாது. எதிர்க் கட்சியினரும், ஆளும் கட்சியினரின் மீது கோடிக்கணக்கில் ஊழல் புகார்ப் பட்டியல் தயாரித்துத் தூற்ற முடியாது. ஏன் தெரியுமா?

ஊழல் புகார் கூறப்பட்டதுமே, அவர்கள் தங்கள் டைரியை மக்கள் பார்வைக்காக ஒரு பொது இடத்தில் வைத்து விடலாம். 'கோடிக்கணக்கில் ஊழல் நடைபெறவில்லை, லட்சக்கணக்கில்தான் நடைபெற்றிருக்கிறது. சுவிஸ் பாங்க்கில் பணம் போடப்படவில்லை. உள்ளூரிலேயே அந்தப் பணம் எங்கெங்கே, யார் யாரிடம், எந்தெந்த வடிவில் இருக்கிறது என்பதை உள்ளங்கை நெல்லிக் கனி போல் டயரி தெளிவுபடுத்தி விடுமே!

இந்த ஏற்பாட்டினால், ஆதாரமற்ற, பொறுப்பற்ற, மிகைப்படுத்தப்பட்ட, பொய்யான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் நாட்டில் மெள்ள மெள்ளக் குறையலாம்!

ஏதோ எனக்குத் தோன்றிய 'ஐடியா'வைச் சொன்னேன். பிறகு உங்களிஷ்டம்!

மெரீனா


முத்தாரம்
9.6.'89 தேதி இதழ்
அன்றாடப் பொருட்கள்
சிறப்பிதழாக
மலர்கிறது!
அடுக்களைக் கரண்டி முதல்
ஹோம் கம்ப்யூட்டர் வரை
அனைத்துப் பொருட்களைப் பற்றிய
அட்டகாசமான தொகுப்பு!
வண்ண இதழ்! அதிக பக்கங்கள்!
விலை இரண்டே ரூபாய்தான்!

நாகர்கள்:

விநோதப் பழக்கங்களும் விரும்பத்தக்க வழக்கங்களும்

நாகர்களைப் பற்றி மேஜர் ஜெனரல் எஸ். சி. சர்தேஷ் பாண்டே எழுதிய புத்தகத்திலிருந்து சில பகுதிகள்......

OO இயற்கையிலேயே நாகர்கள் சந்தேகப் படுபவர்கள்; உணர்ச்சிவசப்படுபவர்கள்; சுலபத்தில் நம்பாதவர்கள்; ஆவேசமானவர்கள்; பெருமையடித்துக் கொள்பவர்கள். ஆயினும் நாகர்களைவிட நல்ல நண்பனைக் காண்பது அரிது – சரியான நண்பன் என நாகன் ஏற்றுக் கொண்டுவிடும் பட்சத்தில். அதே போல, நாகனைவிடப் பெரிய எதிரியும் கிடையாது – அவன் கைவிடப்பட்டு விட்டான் அல்லது ஏமாற்றப்பட்டு விட்டான் என்று அவன் உணர்ந்துவிடுகிற பட்சத்தில்!

OO நாகர்கள் சமூகத்தில் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற சாதிப் பாகுபாடுகள் இல்லை; பரிசுத்தமானவன், தீண்டத்தகாதவன் என்றெல்லாம் ஏதும் கிடையாது; பணக்காரன் – ஏழை என்ற பிரிவு இல்லை; பொருளாதார ரீதியான வித்தியாசம் எதுவும் இல்லை.

OO நல்ல நாள் பார்த்துக் கடவுளை முதலில் தொழுவதும், வயலில் முதலில் விதைப்பதும் லாம் நாகர்களின் உரிமை. வேறு யாரும் இவற்றைச் செய்யக் கூடாது. ஷீவ் நாகர்கள் ஆளுபவர்கள்; தலைவர்கள்; பிரச்னைகளில் தலையிட்டுத் தீர்ப்பு வழங்க அதிகாரம் படைத்தவர்கள்.

OO ஷீவுக்குள்ளேயே இருக்கிற இன்னொரு வகுப்பினர் மேயா. இவர்கள் வீடுகளில், வீரர்கள் கொய்து கொண்டு வந்த எதிராளியின் தலைகள் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும். அவர்கள் தலையைக் கொய்து கொண்டு வந்ததும், அவர்கள் கைகளிலிருந்து ஒழுகும் ரத்தத்தை வழித்துத் துடைப்பது வழக்கம். இவர்களின் வீடுகளில் முன்பு நூற்றுக்கணக்கான மனித மண்டையோடுகள் அலங்காரமாக வைக்கப்பட்டிருக்கும். இப்போது அப்படியில்லை.

OO ஒரு கிராமம் என்பது முப்பதிலிருந்து ஐம்பது வீடுகள் உள்ள 'கேல்'களைக் கொண்டது. 'கேல்,' கிராமம் எல்லாவற்றுக்கும் தலைவர்கள் உண்டு. தலைவர்களைத்



* மூங்கில் 'குடுவை'களில் தண்ணீர் சுமந்து......

* நாக இளைஞர்கள்......



தேர்ந்தெடுப்பது இல்லை. திறமை, தேக பல வீரதீர சாகசம் இவற்றால் தங்களைக் காப்பான் என்ற நம்பிக்கையிலேயே, மக்கள் தலைவனாக ஒருவனை ஒப்புக் கொண்டு விடுகிறார்கள்.

○○ பெண்கள் தலைவி ஆவதைச் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளுவதில்லை. ஆனால் சமீப காலமாகச் சில பெண்கள் ஏரியா கவுன்சில் மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். வீடுகளில் பொதுவாகப் பெண்கள் சொல்லுவதை ஆண்கள் கேட்டுக் கொண்டுதான் ஆக வேண்டும். வீட்டில் எலி, வெளியில் புலி என்பது நாகர்களில் கியாம்நுங்கன் பிரிவில் நூற்றுக்கு நூறு உண்மை!

○○ பண வசதியுள்ளவர்களின் மனோபாவம் விசித்திரமானது. அவர்கள் வசதியில்லாத, ஏழைகளுக்கு உதவவில்லையானால், கடவுளே அவர்களை ஏழையாக்கி அவமானப்படச் செய்வார் என்று நம்புகிறார்கள். பணக்காரர் — ஏழைகள் கிராமங்களில் இருக்கவே செய்கிறார்கள். ஆனால் பிச்சைக்காரர்கள் இல்லவே இல்லை. வசதியற்றவர்கள் மிக மிக சொற்பம்.

○○ ஒரு பையனும் பெண்ணும் காதல் வலையில் சிக்கிக் கொண்டு விட்டார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். உடனே பெற்றோர்களிடம் தெரிவித்து விடுவார்கள். பிறகு பெற்றோர்தான் மேற்கொண்டு விசாரிப்பார்கள். அப்புறம் நிச்சயதார்த்தம் மாதிரி — ஆனால் சடங்கு என்று எதுவும் இல்லாமல் — ஒரு நிகழ்ச்சி நடைபெறும். பிறகு ஆறு மாதத்திலிருந்து இரண்டு வருடங்களுக்குள் திருமணம் நடத்தி வைக்கப்படும்.

○○ கல்யாணத்தன்று பிள்ளை வீட்டுக்காரர்கள் பெண் வீட்டுக்குப் போய், பெண்ணைப் பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு, காத்திருக்கும் பிள்ளையின் வீட்டுக்குக் கொண்டு வந்து விடுவார்கள். இதில் தங்கள் அதிகாரத்தை, பலத்தை ஓகோ என்று காண்பிப்பார்கள்! பெண் மறுபடி தன் வீட்டுக்கே ஓடிப் போய் விடுவாள். மறுபடியும் பிள்ளை வீட்டார் துரத்திக் கொண்டு போய், மறுபடி தூக்கி வந்து விடுவார்கள். கடைசி கடைசியாகப் பிள்ளை வீட்டுக்குத் தூக்கிக் கொண்டு வந்த பிறகு, பெண் வீட்டாரோ, பெண்ணின்கிராமத்துக்காரர்களோயாருமே அங்கே இருக்க மாட்டார்கள்!

**

○○ ஒரு கோழியின் தலை வெட்டப்பட்டு, அதன் ரத்தமும் மதுவும் கலந்து ஒரு தொன்னையில் எடுத்துக் கொண்டு, அதில் பெண் தன் ஆள்காட்டி விரலை முக்கி, தன் கணவனுக்கு இறுதி வரை விசுவாசமாக இருப்பதாகச் சத்தியம் செய்வாள். கணவன் இறந்த பிறகும் கூடக் குடும்பத்தையும், மாமனார் — மாமியாரையும் பாதுகாப்பதாகவும் உறுதி சொல்லுவாள். அப்புறம் பிள்ளை அதே மாதிரி தொன்னையில் ஆள்காட்டி விரலைப் போட்டு உறுதி மொழி சொல்லுவான்.

○○ விவாகரத்து ரொம்பச் சுலபம். காரணங்கள்: இருவரும் ஒத்துப் போகாமை, பரஸ்பர வெறுப்பு, துரோகம் செய்தல், நோய், குழந்தையின்மை அல்லது சண்டை! மனைவியைவீட்டைவிட்டுவெளியேபோகச் சொல்லி விட்டால் தீர்ந்தது விஷயம். அதே மாதிரி, கணவனை 'ஒழிந்து போ!' என்றால் அவன் வெளியேறத்தான் வேண்டும். குழந்தைகள் தகப்பனிடம்தான் இருக்கும். அவன் தான் அவர்களுக்குப் பொறுப்பு. விவாகரத்தைக் கேவலமாக மதித்தாலும், அதைப் பிரமாதப்படுத்துவதில்லை.

○○ இருபதிலிருந்து இருபத்தைந்து வயது தான் பெண்களுக்குக் கல்யாணத்துக்கு உகந்த வயதாகக் கருதப்படுகிறது. மிகச் சிறிய வயதில் திருமணம் செய்து கொள்ளுவது, பிறக்கும் குழந்தைகளுக்கு நல்லதல்ல என்று நினைக்கிறார்கள்.

○○ பையன்களும் பெண்களும் சர்வ சாதாரணமாக, வெளிப்படையாகப் பழகுவார்கள். அத்து மீறாது, இணைந்து பணிபுரிவார்கள். பாட்டுப் பாடிச் சந்தோஷமாக இருப்பார்கள்.

○○ புலிகளை வேட்டையாடுவோர், அப்போது அணிந்திருந்த துணிமணிகளையெல்லாம் தூக்கிப் போட்டுவிட வேண்டும். வேட்டையாடிய பிறகு பூஜை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் புலியின் ஆவி பழிவாங்கி விடுமாம். புலி மாமிசம் சாப்பிடுவதில்லை. புலி விமரிசையாகப் புதைக்கப்பட்டு விடும். அப்புறம் இவர்களுக்குப் பச்சை குத்திக் கொள்ளும் அதிகாரம் உண்டு. (பெண்களும் பச்சை குத்திக் கொள்வதுண்டு. ஆடு சதையில் பச்சை குத்திக் கொள்ளும் பெண் திருமணம் ஆகாதவள். திருமணமான பெண்ணுக்குத் தொடையில் பச்சை குத்துவார்கள்!)

○○ கரடியின் குடலை, காய்ச்சலுக்கும் பல் வலிக்கும் மருந்தாகப் பயன்படுத்துவார்கள். குரங்கு ரத்தமும் மருந்துதான். மலைப் பாம்பும், பெரிய பாம்பு வகைகளும் புலிகள் மாதிரி மனித விரோதிகளாகப் பாவிக்கப் படுகின்றன. பச்சை நிறப் பாம்பை மட்டும் தான் உண்ணுகிறார்கள்.

— சாருகேசி.

THE PATKOI NAGAS — Maj. Gen. S. C. Sardeshpande. Daya Publishing House, Delhi — 110 006. Rs. 225/-.


தாக விருந்து
தாகம் தருபவருக்கும் லிம்கா
தாகம் தணிப்பவருக்கும் லிம்கா
விருந்துகளில் அனைவரின் தாகத்தையும் தீர்க்க முனைந்து முனைந்து அல்லது மற்றவர் மனத்தில் தாகத்தை ஏற்படுத்த முனைந்து முனைந்து களைத்து நீங்கள் தாகத்தால் தவிக்கும் பொழுது... ஐசோடானிக் ஸால்ட் அடங்கிய கிருமிகள் அற்ற லிம்கா அருந்தி தாகம் தணிப்பீர்.
Limca®
ARTIFICIALLY FLAVOURED. CONTAINS NO FRUIT JUICE OR FRUIT PULP
® THE REGISTERED TRADEMARK OF PARLE (EXPORTS) LTD., BOMBAY
RADEUS/PE L 6-89-TAM

சுக போகத் தீவுகள்

22

அன்பளிப்பாகக் கிடைத்த அந்த வீட்டின் மொட்டை மாடியில் கிருஷ்ணமூர்த்தி நின்றிருந்தான். அவனுக்குநிறைய அன்பளிப்புகள் வரத் தொடங்கியிருந்தன. அவை சின்னவையோ, அற்பமானவையோ அல்ல. அடையாறில் வீடு. வைரக் கற்கள் பதித்த நெக்லஸ். ரொக்கமாகக் கறுப்பில், சூட்கேஸில் வைத்த கற்றை நோட்டுக்கள் என்பது போன்ற அன்பளிப்புகள். மேலிடத்து மூலமாகச் சலுகைகள் பெற நினைப்பவர்கள் கிருஷ்ணமூர்த்தியின் மூலமாகவே அதைப்பெற்றுக்கொள்ளவேண்டும்என்பது எழுதப்படாத விதியாகி விட்டிருந்தது. கதிரேசன் கூட அவனைக் கிண்டல் செய்வது போல, ''புல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி நெல்லுக்கும் பாய்வதுதான் நீதி'' என்று சொன்ன அந்த வேடிக்கை அவன் நினைவுக்கு வந்தது.

மணி என்னவாயிற்று என்று அவனுக்குச் சரியாகத் தெரியவில்லை. எனினும் காலம் நள்ளிரவைத் தாண்டியிருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது. உலகம் அமைதியில் துயின்றிருந்தது. 'ஷிவாஸ் ரீகல்' உயர்ந்த மதுவகைதான். எனினும் அவனுக்கு உறக்கம் வரவில்லை. அவன் உறக்கத்தைத் தடுத்துக் கொண்டிருப்பது எது என்று அவனுக்கு விளங்கத்தான் இல்லை. வீட்டில், வேலை வாய்ப்புப் பகுதிகளைப் பார்த்து, விண்ணப்பக் கடிதம் எழுதி, வேளா வேளைக்குச் சாப்பிட்டுக் கொண்டு இருந்த காலத்தில் இருந்த நிம்மதி, இப்போது எங்கே ஓடி ஒளிந்து கொண்டது என்று அவனுக்கு விளங்கவில்லை.

அன்று அவனுக்கென்று, புத்தகங்கள் மட்டும்தான் சொந்தமாக இருந்தன. ஆகவே அவனுக்குப் படுத்தவுடன் தூக்கம் வந்தது. இப்போது அவனுக்கென்று சொந்தமாக அடையாறில் ஒரு வீடு இருந்தது. ஏகப்பட்ட செல்வாக்கு இருந்தது. பணம் இருந்தது. அலமாரிக்குள் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஏற்றபடி அணிய ஆடைகள் இருந்தன. வெளிநாட்டு மதுவகைகளும், சிகரெட்டுகளும் இருந்தன. ஆனால் தூக்கம்தான் வருவதில்லை.

அவன் மனம் சஞ்சலப்பட்டது.

கதிரேசன் இதை 'யானை வேட்டை' என்கிறார். யானை வேட்டைக்குப் போகிறவனுக்கு உறக்கம் ஆகாது என்கிறார். குறி என்பதே யானைதான். அது எந்த நேரத்திலும் வரலாம். வீரனுக்குக் கண் துஞ்சுதல் ஆகாது. கதிரேசன் சொல்வது சரிதான். யானை வேட்டைக்கு அது பொருந்தும். வீரனின் குறி யானையைக் கொல்வது. கொன்றவுடன் அவன் லட்சியம் சித்தியடைந்து விடுகிறது. ஆனால் அரசியல் யானை வேட்டைதானா? அதற்கு முடிவு என்று ஒன்று உண்டா? மனிதர்களை மேம்பாடு அடையச் செய்தலையே குறியாகக் கொண்ட அரசியல் வியூகத்தில் எத்தனை காலம் இந்த மனித வேட்டையை ஓய்வு ஒழிவில்லாமல்ஆடிக்கொண்டேயிருப்பது?


தெரு சலனமற்றிருந்தது. உலகத்து ஓசைகள் அனைத்தும் அவன் மனசுக்குள் குடி வந்தது போன்று, மனம் இரைந்து கொண்டேயிருந்தது. மனம் குற்ற மனப்பான்மையில் ஆழ்ந்து இறுகிக் கனத்துக் கொண்டிருந்தது. அவனைத் தலைநகருக்கு அழைத்து வந்து, அவனுக்கு அரசியலை அறிமுகம் செய்து வைத்து அவனை ஆளாக்கிய மாமாவுக்கு அவன் துரோகம் செய்துதான் விட்டான். மாமா அவனை மன்னிப்பாரா?

உள்ளே போன் அடித்தது கேட்டது. அவன் உள்ளே சென்று போனை எடுத்தான். எதிர் முனையில் மாமாதான் பேசினார்.

''நான்தான் தெய்வநாயகம். நல்லா இருக்கியா கிருஷ்ணமூர்த்தி? ''

''இருக்கேன் மாமா.''

''எனக்கு நீ ஒரு உதவி செய்யணுமே...''



''சொல்லுங்க மாமா.''

''என் நிலைமை உனக்குத்தான் தெரியுமே! என் மேல் மத்திய அரசாங்கம், தமிழக அரசு எல்லாம் வழக்குப் போட்டிருக்கிறது. நான் ஏதோ தவறு செய்து விட்டேனாமே? பரவாயில்லை. எனக்கு அரசியல் தெரிந்த விஷயம்தான். யார் எந்த ஆயுதத்தை ஏந்துகிறார்களோ, அந்த ஆயுதத்தால்தான் அழிவார்கள். துரோகம், வஞ்சகம், குழி பறித்தல், மோசம் செய்தல் எல்லாம்தான் அரசியல் என்று நேற்றுவரை செய்து வந்தேன். அது எனக்கே திரும்ப வந்திருக்கிறது. இதில் எனக்கு ஆச்சர்யம் இல்லை. வினை விதைத்தவன் வினை அறுக்கத்தானே வேண்டும்? போகட்டும்! எனக்கு ஒரே ஒரு காரியம் செய். எப்படியாவது முதல்வரை நான் சந்திக்க ஏற்பாடு செய். இங்கே இல்லை என்றாலும் பரவாயில்லை. அவர் ஊட்டிக்குப் போக இருக்கிறார், அல்லவா? அங்கே அவரை நான் சந்திக்கிறேன். அது அவருக்கும் நல்லது. எனக்கும் நல்லது. ஏற்பாடு பண்ண முடியுமா?

மாமா கெஞ்சுவது போல் இருந்தது. இது என்ன கொடுமை? மாமா, முதல்வரைச் சந்திக்கத் தான் ஏற்பாடு பண்ணும் காலம் ஒன்று வரும் என்று அவன் என்றாவது எதிர்பார்த்திருக்க முடியுமா?

''ஏற்பாடு பண்றேன் மாமா. ஏற்பாடு செய்து கொண்டு நான் உங்களைக் கூப்பிடுகிறேன்.''

ரஞ்சன்

''தயவு செய்! வயசில் பெரியவன் என்ற முறையில் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். என் காலம் முடிந்துவிட்டது. என் மேல் சேறு தெளித்து என்ன ஆகப் போகிறது? நீ வாழ வேண்டிய பையன். பணம், பரபரப்பு, செல்வாக்கு இதெல்லாம் என்றும் அமைதியைத் தராது. நல்லதைச் செய். நல்லதே விளையும்.''

மாமா போனை வைத்துவிட வேண்டும் என்று அவன் எதிர்பார்த்தான். வைக்கவில்லை.

கிருஷ்ணமூர்த்தியின் மனம் சோர்வடைந்தது. அவர் தொடர்ந்து சொன்னார்:

''கோகிலா எப்படி இருக்கிறாள்? ''

''நன்றாக இருக்காங்க. ஏதாவது சொல்லணுமா? ''

''குறிப்பா ஒன்றுமில்லை. விநோதினியை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கச் சொல்லு.''

''அப்படீன்னா? ''

''விநோதினிக்கு ஆபத்து வரலாம்.''

''ஆபத்தா? அவள் இப்போ கன்னியாகுமரியில் இருக்கிறாள்.''

''தெரியும். தெரிஞ்சுதான் சொல்கிறேன். நீயும் கவனமா இரு.''

''என்ன சொல்றீங்க? ''

''விரிவாச் சொல்ல முடியாது. பருந்து



கோழிக்குஞ்சைப் பிடிக்கும் முன்னாலே, கோழிக் குஞ்சு மீது நிழல் படியும். புத்தி சாலிகள் அதைக் காப்பாற்றி விடலாம். ரைட். அப்புறம் பேசறேன்.''

மாமா போனை வைத்துத்தான் விட்டார்.

கிருஷ்ணமூர்த்தியின் மனம் எல்லையற்ற சோகத்தில் ஆழ்ந்தது.

குமரி முனையில் சூரிய உதயத்தையும் அஸ்தமனத்தையும் பார்க்க மிக அழகாகத் தான் இருந்தது. உலகத்தில் எந்த மூலையில் இருந்து பார்த்தாலும் சில விஷயங்கள் அழகாகத்தான் இருக்கும் என்று விநோதினிக்குத் தோன்றியது. சூரியன், சந்திரன், குழந்தைகள், புன்னகை, முதுமை இவையனைத்தும் உலகம் முழுக்க அழகாகத்தான் இருக்கும். ஆனால் மனிதர்க்கு 'எங்கள் ஊர்ச் சூரியன்' என்பதில் ஒரு தனிப் பெருமை. ஏதோ, ஊருக்கு இரண்டு சூரியன் இருப்பது போல. சொந்த ஊர் என்றாலே, சொந்தக் குழந்தை மாதிரிதான் எல்லோருக்கும். சொந்தக் குழந்தை என்றாலே, கொள்ளை அழகுதான் எல்லோருக்கும்.

''என்ன யோசித்துக் கொண்டு இருக்கிறீர்கள்? '' என்றாள் பிலோமினா.

விநோதினி தன் மனத்தில் உள்ளதை அவளுக்குச் சொன்னாள்.

''உங்கள் மனம் ஏதோ சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறது'' என்று பிலோமினா, லேசாகச் சிரித்தவாறு விநோதினிக்குச் சொன்னாள். இருவரும் கடற்கரையில் அலைகளில் காலை நனைத்தவாறு இருந்தார்கள். அலைகள் காலைத் தழுவி, காலுக்குக் கீழே மணலை அரித்து... அதில் ஏற்படும் சுகத்தை அவர்கள் அனுபவித்தவாறு இருந்தார்கள்.

''உட்காருவோமா? ''

விநோதினியும் பிலோமினாவும் மணலில் வந்து அமர்ந்தார்கள்.

''என் மனம் சங்கடத்தில் ஆழ்ந்திருப்பது பற்றி ஏதோ சொன்னீர்களே, எப்படிச் சொன்னீர்கள்? ''

''நானும் ஏதோ கொஞ்சம் மனோதத்துவம் படித்திருக்கிறேன்.''

பிலோமினா மனோதத்துவ ஆசிரியையாகத்தான் விநோதினியுடன் பணி ஆற்றுகிறாள். பத்து மாணவர்கள் விநோதினிக்கு. அவர்களுக்கு ஆங்கில அடிப்படையும், தமிழ் இலக்கியமும் கற்பிக்க வேண்டிய பொறுப்பு. மாணவர்கள் ஆறு வயதிலிருந்து அறுபது வயது வரை இருந்தார்கள். அதுவே அவளுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது. பல்வேறு வயது, திறமைகள், அறிவுத் தரம் ஆகியவைகளைக் கொண்டவர்கள் ஆகையால், அவளுக்கு அவள் வேலை ஒரு சவாலாகக் கூட இருந்தது. சவால்களை ஏற்றுச் செயல்படுவது என்பது அவளுக்கு மிகப் பிடித்த காரியம்.

''உங்கள் மனோதத்துவம் என்ன சொல்கிறது? ''

''அழகைச் சுத்த மனத்தால்தான் ரசிக்க முடியும். சுத்த மனசு என்பது, கவலைகள் அற்ற மனசு. கவலைகள் அற்ற மனசு, அழகை இனங்கண்டு கொள்கிறது. அந்த அழகைச் சொந்தம் கொண்டாடுகிறது. தம்முடையது என்று பூரிக்கிறது. அதில் என்ன தப்பு? எங்கள் காவிரி, எங்கள் இமயமலை என்றெல்லாம் பெருமிதம் கொள்கிறது. இதெல்லாம் இயல்புதானே? ஆனால், இதில் எல்லாம் சுவாரஸ்யம் காண முடி

பக்தி செய்வது எப்படி?



காந்தக்கல் இருக்கிறது. அதோடு இரும்பு ஊசி அருகில் போனால் ஒட்டிக் கொள்கிறது. பதிவிரதா சிரோன்மணிகளின் மனம் அவர்களுடைய பர்த்தாக்களிடம் போய்க் கவிந்து கொள்கின்றன. கொடிகள் மரங்களை அரவணைக்கின்றன. நதிகள் மகா சமுத்திரத்தில் சங்கமம் ஆகிக் கலக்கின்றன. இவை போல நம் மனசானது தன்னையறியாமல் ஈஸ்வரி ஈஸ்வரரிடம் லயிக்க வேண்டும் — கலக்க வேண்டும்.

அவனிடம் நாம் போய் நிற்பதற்கு நாம் ஏதாவது காரணம் கற்பித்தால் அது வியாபாரம் ஆகிவிடும். அதாவது பக்தி என்பது பண்டம் மாற்றுவது போல ஏதோ ஒன்றுக்கு ஒன்று கொடுப்பது போல ஆகக் கூடாது. 'பக்தி செய்கிறேன், நீ செல்வத்தைத் தா' என்றால் அது பரிமாற்றம் அல்லது வியாபாரம் என்பதாகும். அப்படி இல்லாமல் நாம் எதையும் கிஞ்சித்தும் கருதாமல், சர்வ சதா அவனிடம் போய்ச் சேருவது ஒன்றை நினைத்து நினைத்துத் தன்னையும் அறியாது ஓடுகிற சித்தவிருத்தி இருக்கிறதே, அதற்குத்தான் பக்தி என்று பெயர்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

யாமல் போவதுதான் ஒருவகை மன எரிச்சல். மன எரிச்சல் கொண்டவர்கள் எங்கும், எதிலும் அழகைக் காண முடியாது.''

விநோதினி சிரித்தாள்.

''மனோதத்துவம் படித்தவருக்கு மூனுக் கென்றால், மனச்சோர்வு, மன அழுத்தம் என்கிற வார்த்தைகள்தான் நினைவுக்கு வருகின்றன. என் மனம் சோர்ந்து போய் விடவில்லை. ஒரு சின்ன ஏக்கம்.''

''இந்த வயதில் என்ன ஏக்கம் வரும் என்று எனக்குத் தெரியும்.''

''என்ன தெரியும்?''

''காதல்தானே?''

விநோதினி அவள் தலையில் குட்டினாள்.

''உஸ்... அப்பா'' என்று பொய்யாகத் தலையைத் தேய்த்து விட்டுக் கொண்டாள் பிலோமினா. பிறகு கேட்டாள்.

''ஆள் யார்?''

''கிருஷ்ணமூர்த்தி.''

''எந்த நாட்டின் ஜனாதிபதி?''

''ஏய்?''

''வெறும் கிருஷ்ணமூர்த்தி என்றால் நான் எப்படிப் புரிந்து கொள்வது? அவர் என்ன ஜே. கிருஷ்ணமூர்த்தியா?''

''அரசியல்வாதி கிருஷ்ணமூர்த்தி.''

''ஓ... முதலமைச்சரின் வலது கரம் கிருஷ்ணமூர்த்தியா? பிரபல மேலிடப் பினாமிதானே? பொன் கொழிக்கும் நிலங்களைத் தொழிற்சாலைக்கு விற்ற ஆளா? கிங் மேக்கர் என்று சொல்கிறார்களே. அவரா? கட்சியின் துணைப் பொதுச் செயலாளராயிற்றே...! அவரா?''

விநோதினியின் மனம் சுருண்டது. கூசியது. வேதனை உற்றது.

''அவரேதான்,'' என்றாள் வருத்தத்துடன்.

''உங்களுக்குப் போய் இப்படி ஒரு காதலரா? வேடிக்கைதான்.''

''உண்மைதான். அவர் அரசியல் பிரவேசம் எனக்குப் பிடிக்கவில்லைதான். அவரை எப்படியாவது அங்கிருந்து கழற்றிக் கொண்டு வர விருப்பம்தான். என்ன செய்யலாம்?''

''எனக்கு அவரைப் பற்றி முழுத் தகவலும் சொல்லுங்கள். நான் ஒரு திட்டம் சொல்கிறேன்.''

விநோதினி அவனைப் பற்றிச் சொல்லத் தொடங்கினாள். மிக நீண்ட நேரத்துக்குப் பிறகு, அனைத்தையும் கேட்டுவிட்டுப் பிலோமினா சொன்னாள்:

''உங்களவரை இழுப்பது மிகவும் சுலபம். அதற்கு ஒரு ஐடியா சொல்கிறேன். நீங்கள் அதற்குச் சம்மதிக்க வேண்டும்.''

''சொல்லுங்கள்.''

''நீங்கள் அரசியலில் பெரும் பங்கெடுக்க வேண்டும்.''

''நானா?''

''அதுதான் ஒரே வழி.''

விநோதினி அதிர்ந்து போய் அமர்ந்திருந்தாள்.

(தொடரும்)



ஒருவர்: ''சிறைச்சாலையில் டீவி வைக்கிற விழாவில் கைதிகள் பயங்கரமாக் கலாட்டாப் பண்ணிட்டாங்க..''

நண்பர்: ''ஏன்?''

முன்னவர்: ''ஒரே சமயத்தில் அவங்க ரெண்டு தண்டனையை அனுபவிக்க மாட்டாங்களாம்...''

— வி. கிருஷ்ணகுமார்.



''ஏன்தான் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. வாக ஆனோம்னு ரொம்ப வருத்தமா இருக்கு...!''

''ஏன்....?''

''காலாற ஒரு வெளிநடப்புக் கூடச் செய்ய முடியலே....!''


— ஏ. ஆர். வீரராகவன்.

''தலைவர் சுத்த அல்பம்...!''

''எப்படி...?''

''ஏதாவது திறப்பு விழாச் செய்தா ரிப்பனை ஓரத்தில் கட் பண்ணி அப்படியே சுருட்டி, வீட்டுக்கு எடுத்துக் கிட்டு வந்திடறார்...!''

— ஏ. ஆர். வீரராகவன்.



சம்பந்தி வீடு

அந்த ஒரு நிமிஷத்தில் நான் நிச்சயித்து விட்டேன், என் பெண்ணுக்கு இந்த வீட்டில்தான் சம்பந்தம் செய்ய வேண்டுமென்று.

பணம் கிடக்கட்டும், பதவி கிடக்கட்டும் முதலில் வேண்டியது குணம் அல்லவா..? பொறுமை, சகிப்புத் தன்மை, பெருந்தன்மை இதெல்லாம் அவசியம் இல்லையா?

விவரமாகச் சொன்னால்தான் புரியும்.

என் பெண் லதாவுக்குத் திருச்சியில் ஒரு ஜாதகம் பொருந்தியிருந்தது. பையன் தனியாகப் "பிஸினஸ்" செய்கிறான். மாத வருமானம் ஐயாயிரத்துக்குக் குறையாது என நம்பத் தகுந்தவர்கள் உறுதியாகச் சொன்னார்கள்.

பையன் பெண்ணைப் பார்க்க வந்தான். எனக்குப் பிடித்திருந்தது. லதாவுக்கும் சம்மதம். அவர்கள் வீட்டிலும் பச்சைக் கொடி தான்.

இன்னும் சில லௌகிக விஷயங்களைப் பற்றித் தீர்மானிக்க நான் திருச்சிக்குப் போயிருந்தேன். கூட என் மனைவி திலகாவும் வந்திருந்தாள்.

நாங்கள் அவர்கள் வீட்டு வாயிற்படி ஏறும் போது அவர்கள் ஒரு பெரிய "வேனி"ல் எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சந்தர்ப்பம் தெரியாமல் நாங்கள் வந்து விட்டோமோ என நினைத்து நான் சற்று மனம் தளர்ந்த போது, பையனின் தந்தை மிகுந்த உற்சாகத்துடன் எங்களை வரவேற்றார்.

"நாங்கள் ஒரு தெய்வீக காரியமாகப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது, பார்வதி, பரமேசுவரர் போல் வந்திருக்கிறீர்கள். நல்ல சகுனம்தான்!" எனச் சிரித்தபடி சொன்னார்.

அவர்கள் அப்போது சமயபுரத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மூத்த பிள்ளையின் குழந்தைக்கு மொட்டையிட்டு ஆத்தாளை வேண்டி வர. அதே வண்டியில் எங்களுக்கு இடம் கொடுத்தார்கள். எதிர்பாராமல் அம்மன் தரிசனம்!

அன்று சமயபுரத்தில் எக்கச்சக்கமான கூட்டம். குழந்தைக்கு முடி எடுத்தாயிற்று. தலையில் சந்தனம் பூசப்பட்டுப் பொக்கை வாய்ச் சிரிப்புடன், பால முருகன் போல் எங்களைப் பெரிதும் கவர்ந்தான்.

அவர்களுக்குக் கோவிலில் நல்ல செல்வாக்கு இருந்தது. யாரிடம் போய் என்ன சொன்னாரோ எனக்குத் தெரியாது. அத்தனை கூட்டத்திலும் எங்களுக்கு ராஜ மரியாதை.

லோகநாயகிக்கு அர்ச்சனை நடந்து முடிந்தது. ஆரத்தித் தட்டுடன் அர்ச்சகர் வெளியே வந்தார்.

குழந்தையை இடுப்பில் சுமந்திருந்த தாய் அவர் வருவதைக் கவனிக்கவில்லை. அவள் பார்வை கூட்டத்தைத் துழாவிக் கொண்டிருந்தது. இடுப்பில் இருந்த குழந்தை விளையாட்டாகக் கையை நீட்டி — அர்ச்சகர் தடுக்கு முன் — ஜுவாலையாக எரிந்து கொண்டிருந்த கற்பூரத்தை அப்படியே அள்ளிக் கொண்டது.

அடுத்த வினாடி சூடு பொறுக்க முடியாமல் வீல் என்று கத்தியபடி தூக்கி எறிந்த போதுதான் நாங்கள் கவனித்தோம்.

குழந்தை வேதனையில் துடித்தபடி இடுப்பில் தங்காமல் கதறியது.

நானாக இருந்தால் அந்தப் பெண்ணின் நிலையில் என் மனைவி திலகா இருந்திருந்தால், இடம், பொருள் பார்க்காமல் கன்னத்தில் அறைந்திருப்பேன்.

அந்தப் பெண்ணின் கணவன் ஹரி, கொஞ்சமும் அலட்டிக் கொள்ளவில்லை. அழுது கொண்டிருந்த குழந்தையைக் காற்றோட்டமான இடத்துக்கு எடுத்துப் போய்க் கன்றிப் போன உள்ளங்கையில் இதமாக ஊதிச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான்.

குழந்தையின் தாத்தாவும், பாட்டியும் கூட வாயைத் திறக்கவில்லை. துளிக்கூட முகம் சுளிக்கவில்லை.

திருச்சிக்குத் திரும்பி, திருப்திகரமாக எல்லா விஷயங்களும் பேசி முடித்து, நான் ஊர் திரும்பிய பிறகும் கூட இந்தச் சம்பவம் என் மனசில் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தி விட்டது.

என் மனைவி கூட, "அப்படி என்ன அந்தப் பெண் கொஞ்சம் கூடப் பொறுப்பே இல்லாமல் எங்கேயோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்!" எனக் குறைப்பட்டுக் கொண்டாள்.

எத்தனை பொறுமை! எவ்வளவு நாகரிகம்... குடும்பத்தில் ஒருவர் விடாமல் அனைவரும் பெருந்தன்மையுடன் நடந்து கொண்ட பாங்கு என்னைக் கவர்ந்தது. அந்தத் தாயின் மனம் என்ன பாடுபடும் என்பதை உணர்ந்து கொண்டு, அதை மேலும் குத்திக் கிளறிப் புண்படுத்தாத மனித நேய உணர்வுகள்.

மாமியார்கள் என்றால் அரக்கிகளாகச் சித்திரிக்கிறார்களே... அந்த அம்மாவின் முகத்தில் புன்னகை மாறவே இல்லையே.. பெரியவர் கவனித்ததாகவே தெரியவில்லையே.

அந்த வீட்டைப் பற்றி, மனிதர்களின் தரம் பற்றி எனக்கு எந்தவித விசாரணை

ஷண்முகன்

யும் தேவை இல்லை. விளக்கமும் வேண்டாம்.

லதா அவர்கள் வீட்டு மருமகளானாள்!

ஆறு மாதங்கள் கழித்து —

லதா உண்டாகி இருந்தாள். வழக்கப்படி என் மனைவி அவளை அழைத்து வந்திருந்தாள்.

ஒரு நாள் — மதியச் சாப்பாட்டிற்குப் பிறகு, வேறு வேலை ஏதும் இல்லாததால் எதையெல்லாமோ பற்றி அசை போட்டுக் கொண்டிருந்த சமயம், நான் சமயபுரத்தில் கவனித்ததைச் சொன்னேன். கல்யாணத் தேதி குறிக்க எனக்கு மன வலிமை தந்தது அந்த நிகழ்ச்சிதான் என விளக்கினேன்.

லதா விஷமமாகச் சிரித்தாள்.

''இதில் சிரிக்க என்ன இருக்கிறது?'' எனக் கேட்டேன்.

''அப்பா, உங்கள் மனம் பால் போன்றது. பார்த்ததையெல்லாம் நம்பி விடுகிறீர்கள். வெளுத்ததெல்லாம் பாலும் இல்லை, மின்னியது எல்லாம் பொன்னுமில்லை.''


''நீ என்னம்மா சொல்கிறாய்?''

''இல்லை அப்பா. அமைதியான நீர்ப் பரப்பில்தான் ஆழம் அதிகம் என்பார்கள். எங்கள் வீட்டிலும் அப்படித்தான்.''

''புதிர் போடாமல் சொல்!''

''வேண்டாம் அப்பா. உங்கள் மனம் வேதனைப்படும்!'' என அவள் மறுத்தாள். நான் விடவில்லை. அவளை வற்புறுத்திச் சொல்ல வைத்தேன்.

''அப்பா.. கோவிலில் உங்கள் முன் நடந்தது அத்தனையும் வெளி வேஷம். ஊருக்காக அரங்கேற்றப்பட்ட நாடகம். எரிமலையை வெடிக்காமல் மூட அவர்கள் குடும்பமே கற்றுக் கொண்டிருக்கிறது.



நீங்களும், அம்மாவும் ஊர் திரும்பிய பிறகு, என் மாமனாரும், மாமியாரும் அந்த அக்காவை ஒரு பிடி பிடித்துத்தான் ஓய்ந்தார்களாம். என் மாமியாருக்கு அபாரமான ஞாபக சக்தி. பதிவு செய்த 'டேப்' போலப் பத்து வருஷங்களில் அந்த அக்கா, அவள் அப்பா, அம்மா ஆகியோர் செய்த, செய்யத் தவறிய சின்னச் சின்ன விஷயங்களைக் கூட ஒன்று விடாமல் பட்டியல் போட்டுச் சாடும் சாமர்த்தியும் உண்டு. நாக்கில் நரம்பில்லாமல் திட்டித் தீர்ப்பார். என் பெரிய மைத்துனர் ஹரி இருக்கிறாரே...''

''சொல் அம்மா...''

''தாய் எட்டடி என்றால் பிள்ளை பதினாறு அடி. எப்படி நீ அஜாக்கிரதையாக இருக்கப் போயிற்று?'' என்று அக்கா உள்ளங்கையில் புகையும் சிகரெட்டால், மருதாணிப் பொட்டு வைப்பது போல் சுட்டாராம். அக்கா கையில் நான் அந்தத் தழும்பைப் பார்த்தேன்.''

நான் அப்படியே மனம் ஒடிந்து போனேன். இத்தனை அரக்க மனம் படைத்தவர்கள் மத்தியில் நான் வளர்த்த பச்சைக் கிளியைக் கொண்டு போய்த் தள்ளி விட்டேனே.. என் உள்ளம் குமுறியது.

''அம்மா... நான் பெரிய தவறு செய்து விட்டேனோ எனப் பயப்படுகிறேன். நீ அங்கே, எப்படி... சரி, சரி உன் உள்ளங் கையைக் காட்டு, பார்க்கலாம்!'' எனப் பதறினேன்.

அவள் பெரிதாகச் சிரித்தாள்.

''அப்பா... அப்பா... என் மைத்துனர் தான் அப்படி. உங்கள் மாப்பிள்ளை அப்படியில்லை. இதுவரை என்னை முறைத்துக் கூடப் பார்த்ததில்லை. இனியும் ஏதும் சொல்ல மாட்டார். நிச்சயமாக சிகரெட்டால் சுட மாட்டார். அவருக்கு அந்தப் பழக்கம் கிடையாது'' என்றாள் வேடிக்கையாக.

''இதெல்லாம் விளையாடற விஷயம் இல்லை'' என்றேன்.

''அப்பா... தப்பு அவர்கள் மேலே மட்டும் இல்லை. அந்த அக்கா மேலேயும்தான். கல்யாணம் ஆகிப் பத்து வருஷங்கள் ஆகின்றனவே! இன்னும் ஏன் குனிய வேண்டும்? குட்ட ஏன் இடம் தர வேண்டும்! இத்தனை நாள் வீட்டுக்காரரை வளைத்துப் பிடித்திருக்க வேண்டாமா? நானாக இருந்திருந்தால் குழந்தையைக் கூட நான் தூக்கியிருக்க மாட்டேன். அவரைச் சுமக்க வைத்திருப்பேன்'' என்றாள் அந்த ''ஆறு மாத அனுபவசாலி.

உண்மைதான். செய்தாலும் செய்வாள். சின்ன வயதில் திலகா இவளைத் தூக்கியதே இல்லை. சுமந்ததெல்லாம் நான்தானே! தாயைப் போல் பெண்!



தும்மல் குண்டு தெரியுமா, தும்மல் குண்டு?

கண்ணீர் குண்டுகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்! தும்மல் குண்டுகளைத் தெரியுமா? கூட்டங்களைக் கலைக்கத் தென் ஆப்பிரிக்கப் போலீஸார் வீசும் இக்குண்டிலிருந்து புகை கிளம்பியதும் எல்லோரும் 'அச்சூ! அச்சூ' எனத் தும்முவார்கள்!

— வி. சுந்தரராமன்.

விரைவுப் பேருந்து மூலம் சென்னைக்குப் பய
ணம் செய்து கொண்டிருந்தேன். என் பக்கத்தில்
அமர்ந்திருந்தவர் கையில் ''சுருமாதி'' என்று பச்சை
குத்திக் கொண்டிருந்தார். எனக்கு வியப்பாக
இருந்தது. தயங்கித் தயங்கிக் கடைசியில் அவரிடம்
விவரம் கேட்டே விட்டேன்! அவர் கூறியது:
''என் பெயர் சுனகசபை. என் மனைவியின் பெயர்
ருக்மிணி. எங்களுக்கு ஒரு பெண், ஒரு பிள்ளை.
பெரியவன் மாணிக்கம்; சின்னவன் இலகவதி.
எங்கள் நான்கு பேர்களின் பெயர்களின் முதலெ
ழுத்துக்களைக் கூட்டிக் ''சுருமாதி'' என்று பச்சைக்
குத்திக் கொண்டேன்!'' என்றார்.
மனிதரில் எத்தனை நிறங்கள்!

— என். கண்ணன்.



மகன்: அப்பா எனக்கு ட்ரம்ஸ் வாங்கித் தர்றீங்களா?

தந்தை: முடியாது; நீ அதை வைத்துக் கொண்டு ரொம்பச் சத்தம் பண்ணுவாய்!

மகன்: இல்லேப்பா. நீங்க தூங்கும் போது மட்டும் வாசிக்கிறேன்!

— நாகை பாபு.



பொன்னியின் செல்வன்



இரண்டாம் அத்தியாயம்
வந்தான் முருகய்யன்!

சூடாமணி விஹாரத்துக்கு வெளியே கடல் பொங்கும் போது எழும் ஓசையைப் போல் மக்களின் இரைச்சல் ஒலி பெருகிக் கொண்டிருந்ததைச் சிறிது நேரம் ஆச்சாரிய பிக்ஷுவும் அருள்மொழி வர்மரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் புத்த விஹாரமும் அதில் உள்ள பிக்ஷுக்களும் தம்மால் இந்தப் பெரும் சங்கடத்துக்கு உள்ளாக்கியிருப்பதை எண்ணி இளவரசர் மிகவும் மனக் கலக்கம் அடைந்தார்.

"சுவாமி! என்னால் உங்களுக்கு இந்தத் தொல்லை உண்டானதைப் பற்றி வருத்தப்படுகிறேன்" என்றார்.

"இளவரசே! தங்கள் காரணமாக இது போல் நூறுமடங்கு தொல்லை நேர்ந்தாலும் நாங்கள் பொருட்படுத்த மாட்டோம். தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் எங்களுக்குச் செய்திருக்கும் உதவிகளுக்கு இது ஒரு கைம்மாறாகுமா?" என்றார் பிக்ஷு.

"அதுமட்டுமே அல்ல. இம்மாதிரி ஒளிவு மறைவாகக் காரியம் செய்வது எனக்கு எப்போதும் பிடிப்பதில்லை. நான் இங்கு இருந்து கொண்டே எதற்காக 'இல்லை' என்று சொல்ல வேண்டும்? சத்தியத்துக்கு விரோதமான இந்தக் காரியத்தில் தங்களையும் எதற்காக நான் உட்படுத்த வேண்டும்? தங்களுடைய பரிவான சிகிச்சையினால் எனக்கு உடம்பும் நன்றாகக் குணமாகி விட்டது. இப்போதே வெளியேறிச் சென்று ஜனங்களிடம் நான் இன்னான் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். தாங்கள் எனக்கு அடைக்கலம் அளித்துச் சிகிச்சை செய்து என் உயிரையும் காப்பாற்றினீர்கள் என்பதை மக்களிடம் அறிவிக்கிறேன். இந்தச் சூடாமணி விஹாரத்துக்கு என் காரணமாக எந்த வித அபகீர்த்தியும் ஏற்படக் கூடாது" என்றார் இளவரசர்.

"ஐயா! இதில் சத்தியத்துக்கு விரோதமான காரியம் எதுவும் இல்லை. தங்களுடைய எதிரிகள் தாங்கள் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க முயல்கிறார்கள். இந்த நாகைப் பட்டினத்தில் அவர்கள் சென்ற இரண்டு நாளாகப் பரப்பி உள்ள வதந்தியிலிருந்தே அது நிச்சயமாகிறது. அப்படியிருக்க, தாங்கள் இங்கே இருப்பதைத் தெரியாமல் வைத்திருப்பதில் தவறு என்ன? அரச குலத்தினர் இம்மாதிரி சில சமயம் மறைந்திருக்க வேண்டியது இராஜரீக தர்மத்துக்கு உகந்தது. பஞ்ச பாண்டவர்கள் ஒரு வருஷம் அஞ்ஞாதவாசம் செய்யவில்லையா? அப்போது தர்மபுத்திரர் சத்தியத்துக்கு மாறாக நடந்தார் என்று சொல்ல முடியுமா?" என்று பிக்ஷு கேட்டார்.

"குருதேவரே! தங்கள் அறிவுத்திறனும் விவாதத்திறனும் அபாரமானவை என்பதை அறிவேன். தங்களுடன் தர்க்கம் செய்து என்னால் வெல்ல முடியாது. ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன். பஞ்ச பாண்டவர்கள் மறைந்திருக்க வேண்டியது அவர்கள் ஏற்றுக் கொண்ட 'சூள்' காரண

அமரர் கல்கி

மாக அவசியமாயிருந்தது. எனக்கு அப்படி அவசியம் ஒன்றும் இல்லை. என் விரோதிகளைப் பற்றிச் சொல்கிறீர்கள். எனக்கு அப்படிப்பட்ட விரோதிகள் யார்? எதற்காக என்னை அவர்கள் விரோதிக்க வேண்டும்? எனக்கோ இராஜ்யம் ஆளுவதில் சிறிதும் ஆசை இல்லை. இதையெல்லாம் நான் வெளியிட்டுச் சொல்லி, அப்படி யாராவது எனக்கு எதிரிகள் இருந்தாலும், அவர்களையும் சிநேகிதர்கள் ஆக்கிக் கொள்வேன். என்னால் உங்களுக்குத் தொந்தரவும் இல்லாமற் போகும். மக்களும் நான் உயிரோடிருப்பது அறிந்து ஏதேனும் திருப்தி அடைவதாயிருந்தால் அடையட்டுமே? அதில் யாருக்கு என்ன நஷ்டம்?''

''இளவரசே! தாங்கள் சொல்லுவதெல்லாம் உண்மையே. தங்களுடைய நிலைமையில் நானும் அவ்விதமே எண்ணி நடந்து கொள்வேன். ஆனால் அதற்குத் தடையாக நிற்பது தங்கள் திருச் சகோதரி குந்தவைப் பிராட்டிக்கு நாங்கள் கொடுத்திருக்கும் வாக்குறுதி தான். பழையாறை இளைய பிராட்டியைப் போன்ற அறிவிற் சிறந்த மாதரசி சோழ குலத்தில் தோன்றியதில்லையென்று தாங்களே பலமுறை சொல்லியிருக்கிறீர்கள். வேறு எந்த இராஜ குலத்திலும் தோன்றியதில்லை என்பது என் கருத்து. அவர் தாம் செய்தி அனுப்பும் வரையில் தங்களை இங்கே வைத்துப் பாதுகாக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றார். முக்கியமான காரணம் இன்றி அவர் அவ்விதம் சொல்லியிருக்க மாட்டார். சுந்தர சோழ சக்கரவர்த்தியின் குடும்பத்துக்கு விரோதமாகச் சோழ நாட்டுச் சிற்றரசர்கள் பலர் சதி செய்வதாக நாடெல்லாம் பேச்சாக இருந்து வருகிறது. மற்றொரு பக்கத்தில் பாண்டிய நாட்டைச் சேர்ந்த சிலர் இரகசியச் சதி வேலை செய்து வருவதாகவும் பேசிக் கொள்கிறார்கள். அந்தக் கூட்டத்தாருக்கு இந்தப் புத்த விஹாரத்திலுள்ள நாங்கள் உதவி செய்கிறோமோ என்று எண்ணித்தான் ஜனங்கள் ஆத்திரம் அடைந்து வாசலில் வந்து கூடியிருக்கிறார்கள். இந்த நிலைமையில் தாங்கள் வெளியேறி மக்களின் முன்னிலையில் தங்களை வெளிப்படுத்திக் கொள்வது உசிதமான காரியமா? யோசியுங்கள்! அதைக் காட்டிலும், தங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் எங்களுக்கெல்லாம் ஏதேனும் சங்கடம் நேர்ந்தால் நேரட்டுமே? — அதற்கு நாங்கள் ஒரு நாளும் பின்வாங்கப் போவதில்லை!.....''

இவ்வாறு தலைமைப் பிக்ஷு சொல்லிக் கொண்டிருந்த போது, இன்னொரு இளம் சந்நியாசி அங்கே பரபரப்புடன் வந்தார்.

''சுவாமி! நிலைமை மிஞ்சிப் போய் விட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் விஹாரத்தைச் சூழ்ந்து நின்று 'இளவரசரைப் பார்க்க வேண்டும்' என்று கூச்சலிடுகிறார்கள். 'இளவரசர் இங்கே இல்லை' என்று நாங்கள் எவ்வளவு சொல்லியும் பயனில்லை. 'நாங்களே விஹாரத்துக்குள் வந்து சோதித்துப் பார்க்க வேண்டும்' என்று கூச்சலிடுகிறார்கள். அவர்களுக்கு நாம் ஏதாவது ஒரு வழி சொல்லாவிட்டால், பலாத்காரமாக உள்ளே புகுந்து விடுவார்கள் போலிருக்கிறது!'' என்றார்.

''அவர்களுக்கு நாம் என்ன வழி சொல்ல முடியும்? புத்த பகவான் அவர்களுடைய மனத்தை மாற்ற ஏதேனும் வழி கூறினால் தான் உண்டு!'' என்றார் தலைமைப் பிக்ஷு.

இளவரசர் அப்போது, ''குருதேவரே! எனக்கு ஒரு வழி தோன்றுகிறது. கருணை கூர்ந்து கேட்க வேண்டும். தங்கள் சீடர்கள் நான் இங்கே இல்லை என்று ஜனங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். இனி நான் ஜனங்களின் முன்னிலையில் போய் நின்றால் தங்கள் சீடர்களின் வாக்கைப் பொய்யாக்கியதாகும். அதனால் ஒருவேளை ஜனங்களின் மூர்க்காவேசம் அதிகமானாலும் ஆகலாம்'' என்றார்.

''நிச்சயமாய் ஆகியே தீரும். அதன் பலனை நாங்கள் அனுபவிக்க வேண்டியதுதான்'' என்றார் பிக்ஷு.

''அதைக் காட்டிலும் தங்கள் சீடர்களுடைய வாக்கை நான் மெய்யாக்கி விடுகிறேன்....''

''இளவரசே! தங்களால் கூட அது முடியாத காரியம் என்று நினைக்கிறேன். இவர்கள் சொன்னது சொன்னதுதானே? அதை எப்படி இனி மெய்யாக்க முடியும்?''

''அதற்கு வழியிருக்கிறது. ஜனங்கள் இந்த விஹாரத்துக்குள் புகுவதற்குள்ளே நான் இங்கிருந்து போய் விடலாம் அல்லவா?''

''ஆகா! எங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அத்தகைய பாவச் செயலை நாங்கள் செய்ய வேண்டுமா? தங்களை வெளியேற்ற வேண்டுமா?''

'குருதேவரே! இதில் பாவமும் இல்லை, பழியும் இல்லை. இங்கிருந்து அரைக்காத தூரத்தில் ஆனை மங்கலத்தில் சோழ மாளிகை இருக்கிறது. அன்றைக்கு என் சகோதரியைப் பார்க்கச் சென்றபடி இப்போதும் உடனே கால்வாய் வழியே அங்கே போய் விடுகிறேன். பிறகு, சௌகரியமான போது திரும்பி வந்து விட்டால் போகிறது!'' என்று சொன்னார் இளவரசர்.

ஆச்சாரிய பிக்ஷுவுக்கு இளவரசர் கூறிய அந்த யோசனை பிடித்திருந்ததாகத் தோன்றியது.

''ஆம், ஆம்! அப்படிச் செய்தால் தங்களை உடனே வெளிப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லாமற் போகும். தங்கள் தமக்கையின் கருத்தையும் நிறைவேற்றியதாகும். ஆனால் கால்வாய் விஹாரத்திலிருந்து வெளியேறும் இடத்திலும் ஜனங்கள் நிற்கலாம் அல்லவா? அவர்கள் படகில் தாங்கள் போவதைப் பார்க்கக் கூடுமே?'' என்றார்.

"குருதேவரே! அதற்கு ஓர் உபாயம் செய்ய முடியும். கூட்டத்தில் உள்ளவர்களில் யாரேனும் ஒருவன் விஹாரத்திற்குள் வந்து தேடிப் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுவோம்" என்றார் இளம் பிக்ஷு.

"ஒருவன் வந்து பார்த்தால் போதாதா? அவன் வெளியிலே சென்று மற்றவர்களிடம் சொல்ல மாட்டானா?" என்றார் குரு.

"அவனை இங்கே கொஞ்சம் தாமதப் படுத்தி வைத்திருந்தால், அதற்குள் இருட்டி விடும். இளவரசர் வெளியேறச் சௌகரியமாயிருக்கும். அது மட்டுமல்ல; சீக்கிரத்தில் ஒரு பெரும் புயல் அடிக்கலாம் என்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. இங்கிருந்து பார்க்கும்போதே கடல் அலைகள் மலை போல் எழுகின்றன. கடலின் ஆரவாரமும் அதிகமாகி வருகிறது. புத்த பகவானுடைய கருணை அப்படி இருக்கிறதோ, என்னமோ? பெரும் புயல் அடித்து நம்முடைய இந்தச் சங்கடம் தீர வேண்டும் என்பது பகவானுடைய சித்தமோ, என்னமோ!" என்று கூறினார் இளம் பிக்ஷு.

"அப்படியெல்லாம் சொல்ல வேண்டாம். நம்முடைய சங்கடம் தீருவதற்காகக் கடல் கொந்தளித்துப் பெரும் புயல் வர வேண்டுமா?" என்றார் குரு.

"சுவாமி! தங்கள் சீடர் சொல்லும் வழியைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்று எனக்கும் தோன்றுகிறது. உள்ளே ஒரு தனி மனிதன் மட்டும் வந்தால், ஒருவேளை அவனிடம் நான் பேசி அவன் மனத்தை மாற்றுவது சாத்தியமாகலாம்" என்றார் இளவரசர்.

"அந்த யோசனையும் என் மனத்தில் இருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்பு கோடிக்கரையிலிருந்து ஒரு படகோட்டியும் அவன் மனையாளும் விஹாரத்தின் வாசலில் வந்து இளவரசரைப் பற்றி விசாரித்தார்கள். இளவரசர் இங்கேதான் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். படகோட்டியின் மனையாள் பெருங் கூச்சல் போட்டாள்....!"

"ஆகா! அப்படிப்பட்ட படகோட்டி யார்? அவன் பெயர் என்னவென்று தெரியுமா?" என்றார் இளவரசர்.

"ஆம்; தன் பெயர் முருகய்யன் என்று சொன்னான். கோடிக்கரைத் தியாகவிடங்கர் மகன் என்று கூறினான்..."

"அவன் எனக்கு நன்கு தெரிந்தவன். என் விருப்பத்துக்கு விரோதமாக எதுவும் செய்ய மாட்டான். அவனை ஏன் என்னிடம் அழைத்து வரவில்லை....?"

"அவன் பெண்டாட்டியினால் நமது இரகசியத்தைக் காப்பாற்ற முடியாது என்று எண்ணினோம். இப்போது அவனும் அவன் மனையாளும் மக்களின் கூட்டத்தில் இருக்கிறார்கள்....."

"பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. படகோட்டி முருகய்யனை மெதுவாக இங்கே அழைத்து வந்து விடுங்கள். நான் இட்ட கோட்டை அவன் தாண்ட மாட்டான். இருட்டிய பிறகு திரும்பி வந்து அவனே என்னைப் படகில் ஏற்றி ஆனைமங்கலத்துச் சோழ மாளிகைக்கு அழைத்துப் போய் விடுவான்!" என்றார் இளவரசர்.

ஆச்சாரிய பிக்ஷு, "இளவரசே! இந்தக் காலத்தில் யாரையும் பூரணமாக நம்பி விடுவதற்கில்லை. இந்தப் படகோட்டியும் அவனது மனையாளுந்தான் இரண்டு நாளாக இந்தப் பட்டினத்தில் தங்களைப் பற்றிய வதந்தியைப் பரப்பியிருக்க வேண்டும் என்று கருதுகிறேன்."

"அப்படியேயிருந்தாலும் அதனால் பாதகமில்லை. எப்படியும் யாரேனும் ஒருவனை விஹாரத்துக்குள் அழைத்து வர வேண்டும் அல்லவா? அவன் கொஞ்சம் பெண்டாட்டி சொல்லுகிறபடி ஆடுகிறவன் தான். ஆனாலும் என் விருப்பத்துக்கு மாறாக மனையாள் சொல்வதைக் கூடக் கேட்க மாட்டான். முடியுமானால், அவனையே அழைத்துக் கொண்டு வாருங்கள்!" என்றார் இளவரசர்.

ஆச்சாரிய பிக்ஷுவின் சம்மதத்துடன் இளைய பிக்ஷு வெளியேறினார். அவர் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் பெரிய பிக்ஷு, "இளவரசே! என் மனம் ஏனோ நிம்மதியாகவே இல்லை. நானும் வெளியிலே சென்று பார்த்து வருகிறேன். ஜனங்களுடைய மனோ நிலை எப்படி இருக்கிறது என்பதை நேரில் அறிந்து வருகிறேன். என்னுடைய பிசகினால் இந்தப் புராதனமான சூடாமணி விஹாரத்துக்கும் கேடு வரக் கூடாது. தங்களுக்கும் தீங்கு எதுவும் நேரக் கூடாது!" என்று சொல்லி விட்டு வெளியே சென்றார்.

மூன்றாம் அத்தியாயம்
கடல் பொங்கியது!

விஹாரத்துக்கு வெளியே ஆச்சாரிய பிக்ஷு கண்ட காட்சி அவருக்குக் கதிகலக்கம் உண்டாக்குவதாயிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுடைய தோற்றமும் அவர்கள் போட்ட கூச்சலும் அவர்கள் ஆவேசங் கொண்டவர்கள் என்பதைக் காட்டின. அந்த ஆவேசத்தைக் குரோத வெறியாகச் செய்வது மிக எளிதான காரியம். பலர் கைகளில் வாள், வேல், தடி முதலிய ஆயுதங்களை வைத்திருந்தார்கள். இன்னும் சிலரின் கையில் கடப்பாரைகள் இருந்தன. பிக்ஷுக்கள் வழிக்கு வரா விட்டால், விஹாரத்தையே இடித்துத் தரைமட்டமாக்கி விடுவது என்று அவர்கள் உத்தேசித்திருந்தனர் போலும்.

அதற்கு வேண்டிய காரணம் இல்லாமலும் போகவில்லை. பராந்தக சக்கரவர்த்தி



யின் காலம் முதல் அடிக்கடி சோழ நாட்டுக்கும் ஈழ நாட்டுக்கும் யுத்தம் நடந்து வந்தது. சோழ நாட்டு வீரர் பலர் இலங்கைப் போர்களில் மடிந்திருந்தார்கள். ஏதாவது ஒன்றைப் பிடிக்கவில்லையென்றால், அதைச் சேர்ந்த மற்றவையும் பிடிக்காமற் போவது மக்களின் இயல்பு அல்லவா? இலங்கைப் போர்கள் காரணமாகச் சோழ மக்களுக்கு ஏற்பட்டிருந்த ஆத்திரம் அத்தீவில் வியாபகமாயிருந்த பௌத்த மதத்தின் மேலும் ஓரளவு திரும்பியிருந்தது. ஏதாவது ஒரு சிறிய காரணம் ஏற்பட்டால் போதும்; — தமிழகத்தில் மிஞ்சியிருந்த பௌத்த விஹாரங்கள் மீதும் அவற்றில் வாழ்ந்த பிக்ஷுக்கள் மீதும் பழி தீர்த்துக் கொள்ளப் பாமர மக்கள் சித்தமாயிருந்தார்கள்.

அத்தகைய சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டு விட்டதாக ஆச்சாரிய பிக்ஷு கருதினார். யாரோ தீய நோக்கம் கொண்டவர்கள் இவ்விதம் பாமர மக்களின் ஆத்திரத்தைத் தூண்டி விட்டிருக்கிறார்கள். புத்த பகவானுடைய கருணையினாலேதான் இந்தப் பேராபத்திலிருந்து மீள வேண்டும்!......

ஆச்சாரிய பிக்ஷுவைப் பார்த்ததும் அந்த ஜனக் கூட்டத்தின் ஆரவாரம் முன்னைவிட அதிகமாயிற்று.

''பொன்னியின் செல்வரைக் கொடுத்து விடுங்கள்; இல்லாவிடில் விஹாரத்தை இடித்துத் தரைமட்டமாக்கி விடுவோம்'' என்பவை போன்ற மொழிகள் ஏக காலத்தில் ஆயிரக்கணக்கான குரோதம் நிறைந்த குரல்களிலிருந்து வெளியாகிச் சமுத்திர கோஷத்தைப் போல் கேட்டது. அதே சமயத்தில் கடலின் பேரோசையும் அதிகமாகிக் கொண்டிருப்பதை ஆச்சாரிய பிக்ஷு கவனித்துக் கொண்டார். இளம் பிக்ஷு கூறியது உண்மைதான். அளவிலாத வேகம் பொருந்திய கொடும் புயல், கடற்கரையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அதி சீக்கிரத்தில் புயல் கரையைத் தாக்கப் போகிறது. இந்த மக்களால் ஏற்படும் அபாயத்துக்குப் பிழைத்தாலும் புயலின் கொடுமையிலிருந்து விஹாரம் தப்பிப் பிழைக்க வேண்டுமே என்ற கவலை பிக்ஷுவுக்கு ஏற்பட்டது.

இதற்குள் வாலிப பிக்ஷு கையமர்த்திச் சமிக்ஞை செய்து ஆத்திரம் கொண்ட மக்களின் கூட்டத்தில் சிறிது இரைச்சல் அடங்கும்படி செய்திருந்தார்.

''மகா ஜனங்களே! எங்கள் தலைவரை அழைத்து வந்திருக்கிறேன். சற்று நிம்மதியாயிருங்கள். நீங்கள் இத்தனை பேரும் இந்த விஹாரத்துக்குள் ஒரே சமயத்தில் புக முடியாது



அல்லவா? உங்களில் யாராவது ஒருவரையோ, இரண்டு பேரையோ குறிப்பிடுங்கள். அவர்கள் விஹாரத்துக்குள் வந்து தேடிப் பார்க்கட்டும்! திரும்பிவந்து அவர்கள்சொல்வதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்! இது உங்களுக்குச் சம்மதந்தானே? உங்களில் யார் என்னுடன் விஹாரத்துக்குள் வருகிறீர்கள்?'' என்று வினவினார்.

கூட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் "நான் வருகிறேன்,'' ''நான் வருகிறேன்'' என்று கூச்சலிட்டார்கள்.


இளம் பிக்ஷு மறுபடியும் கையமர்த்தி ''எல்லோரும் சேர்ந்து கூச்சலிடுவதினால் என்ன பயன்? யாராவது ஒருவரைத் தேர்ந்தெடுங்கள். நான் யோசனை சொல்லுகிறேன். சமீப காலத்தில், சென்ற ஒரு மாத காலத்துக்குள், பொன்னியின் செல்வரைப் பார்த்தவர் உங்களில் யாராவது இருந்தால்சொல்லுங்கள். அப்படிப்பட்டவரை நான் அழைத்துப் போகிறேன். இளவரசரை அடையாளம் கண்டு கொள்ளவும் சௌகரியமாயிருக்கும்!'' என்றார்.

கூட்டத்தின் முன்னணியில் நின்று கொண்டு ஒவ்வொரு தடவையும் பெரும் கூச்சல் போட்டுக் கொண்டிருந்த ராக்கம்மாள், ''இதோ நாங்கள் பார்த்திருக்கிறோம்'' என்று கூவினாள்.

படகோட்டியைப் பார்த்து இளம் பிக்ஷு, ''அப்பனே! இவன் கூறு







து. காந்தமென கவர்ந்திழுக்கும் தன்மையது.



CHAITRA-B OS 187 TAM R

வது சரியா?'' என்று கேட்டார்.

முருகய்யன், ''சுவாமி! இவள் கூறுவது முழுதும் சரியல்ல; இவள் இளவரசரைச் சமீபத்தில் பார்க்கவில்லை. நான் சென்ற ஒரு மாதத்துக்குள்ளே ஈழ நாட்டில் பொன்னியின் செல்வரைப் பார்த்தது உண்மை. நான் அறியாமல் அவருக்குச் செய்த அபகாரத்துக்காகக் காலில் விழுந்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டேன். அச் சமயம் அவர் கருணையுடன் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தது நேற்று நடந்தது போல் என் மனத்தில் பதிந்திருக்கிறது. அவரை நான் சுலபமாக அடையாளங் கண்டு கொள்ள முடியும்'' என்று சொன்னான்.

''அப்படியானால் நீதான் இந்த வேலைக்குத் தகுதியானவன். உன் மனையாள் சொன்னதிலும் அவ்வளவு தவறு இடையாது. நீ பார்த்தது இவள் பார்த்தது போலத்தான் என்று எண்ணிச் சொல்லியிருக்கிறாள். இப்போதும் நீ இந்த விஹாரத்துக்குள் தேடிப் பார்த்து விட்டு வந்து சொன்னால் இவள் ஒப்புக் கொள்வாள். பிக்ஷுக்கள் தவம் செய்யும் புத்த விஹாரத்துக்குள் பெண் பிள்ளைகளை விடுகிறதில்லையென்பது உன் மனையாளுக்குத் தெரிந்துதானிருக்கும். ஆகையால், நீ வா இங்கே!'' என்று இளம் பிக்ஷு கூறினார். பிறகு விஹாரத்தின் முன் வாசற்படிகளில் இறங்கிச் சென்று முருகய்யனுடைய ஒரு கரத்தைப் பற்றி அழைத்துக் கொண்டு மறுபடியும் படிகளில் ஏறினார். மக்களைப் பார்த்து, ''இதோ இந்தப் படகோட்டி முருகய்யன் சமீபத்தில் இளவரசரைப் பார்த்திருக்கிறானாம். இவனை உள்ளே அழைத்துப் போகிறேன். விஹாரம் முழுதும் தேடிப் பார்த்து விட்டுத் திரும்பி வந்து சொல்வான். உங்கள் எல்லாருக்கும் இது சம்மதந்தானே?'' என்றார்.

மக்களின் கூட்டத்திலிருந்து சம்மதக் குரல் அவ்வளவு வேகத்துடன் வரவில்லை. சிலர் ''சம்மதம்'' என்று முணுமுணுத்தார்கள். மற்றவர்கள் ஒருவரோடொருவர் ''இதில் ஏதாவது மோசம் இருக்குமோ?'' என்று இரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். அவர்கள் இரகசியம் பேசிய குரல்கள் சேர்ந்து கடலின் இரைச்சலுடன் போட்டியிட்டன.

இளம் பிக்ஷு அதைக் கவனித்து விட்டு, பெரிய குரலில், ''மகா ஜனங்களே! இதோ எங்கள் ஆச்சாரியர் இருக்கிறார். உங்களுக்கு ஏதேனும் கேட்க வேண்டியது இருந்தால் அவரைக் கேட்டுக் கொள்ளுங்கள். அதற்குள் இந்த மனிதனை நான் அழைத்துப் போய் விஹாரத்தைச் சுற்றிக் காண்பித்து விட்டு வருகிறேன்'' என்று சொல்லிப் படகோட்டி முருகய்யனை அழைத்துக் கொண்டு சென்றார்.

கம்பீரமான தோற்றத்துடனும் சாந்தம் குடிகொண்ட முகத்துடனும் பொலிந்த ஆச்சாரிய பிக்ஷுவைப் பார்த்ததும் மக்களின் மனத்தில் சிறிது பய பக்தி உண்டாயிற்று. அவரிடம் அதிகப்பிரசங்கமான கேள்வி எதுவும் கேட்பதற்கு யாரும் துணிவு கொள்ளவில்லை.

ஆச்சாரிய பிக்ஷு சற்று நேரம் அந்த ஜனக் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர், அவர்களுக்குப் பின்னால் சற்றுத் தூரத்தில் தெரிந்த கடலையும் நோக்கினார்.

''மகா ஜனங்களே! நீங்கள் எல்லாரும் இங்கே வந்து கூடியிருப்பதின் நோக்கத்தை அறிந்து கொண்டேன். சக்கரவர்த்தியின் திருக் குமாரரும் பொன்னியின் செல்வருமான இளவரசர் அருள்மொழிவர்மரிடம் உங்களுக்கெல்லாம் எவ்வளவு அன்பு உண்டு என்பது இன்றைக்கு எனக்கு நன்றாய்த் தெரிந்தது. உங்களைப் போலவே அடியேனும் பொன்னியின் செல்வரிடம் அன்புடையவன்தான். அருள்மொழிவர்மர் கடலில் முழுகி விட்டார் என்ற செய்தி வந்த அன்று காலையில் நான் இதே இடத்தில் நின்று கண்ணீர் அருவி பெருக்கினேன். புத்த தர்மத்தில் பற்றுக் கொண்டவர் எவரும் அருள்மொழிவர்மரிடம் அன்பு கொள்ளாமல் இருக்க முடியாது. புத்த தர்மத்துக்கும் புத்த பிக்ஷுக்களுக்கும் அவர் அத்தகைய மகத்தான உபகாரங்களைச் செய்திருக்கிறார். புத்தர்களின் புண்ணிய க்ஷேத்திரமாகிய அனுராதபுரத்தில் புத்த மன்னர்களின் காலத்தில் இடிந்து தகர்ந்து பாழான விஹாரங்களையும் ஸ்தூபங்களையும் திருப்பணி செய்து செப்பனிடுவதற்கு ஏற்பாடு செய்தவர். அப்படிப்பட்ட உத்தமரான இளவரசருக்கு எந்த வகையிலும் தீங்கு நேர நாங்கள் உடந்தையாக இருக்க முடியுமா? இளவரசருக்கு ஒன்றும் நேராமல் இருக்க வேண்டும். அவரைக் கடல் கொண்ட செய்தி பொய்யாயிருக்க வேண்டும் என்று நாங்கள் பிரார்த்தனை செய்த வண்ணம் இருந்தோம். உங்களையெல்லாம் விடப் பொன்னியின் செல்வரிடம் நாங்கள் அன்புடையவர்களாயிருப்பதற்குக் காரணங்கள் உண்டு.....''

இச் சமயத்தில் கூட்டத்தில் ஒருவன் குறுக்கிட்டு, ''அதனாலேதான் எங்களுக்கு அச்சமாயிருக்கிறது. உங்களுடைய அன்பு அபரிமிதமாகப் போய் எங்கள் இளவரசரின் தலையை மொட்டையடித்துக் காவித் துணி கொடுத்துப் பிக்ஷுவாக்கி விடுவீர்களோ என்று பயப்படுகிறோம்!'' என்றான்.

அவனைச் சுற்றி நின்றவர்கள் பலர் இதைக் கேட்டதும் கலீர் என்று கேலிச் சிரிப்புச் சிரித்தார்கள்.

ஆச்சாரிய பிக்ஷுவுக்கு எப்படியோ அச் சமயம் ஒருவித ஆவேசம் ஏற்பட்டு விட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களின் சந்தேகத்தைத் தீர்த்து வைப்பதற்கு ஒரே ஒரு நிச்சயமான வழி மட்டும் உண்டு என்பதை அவர் உள்ளம் உணர்த்திற்று. உடனே முன் பின் யோசிக்காமல் தம் உள்ளத்தில் தோன்றியதைப் பின்வரும் மொழிகளில் சபதமாக வெளியிட்டார்:—

''சக்கரவர்த்தியின் திருக்குமாரரும் பொன்னியின் செல்வருமான இளவரசர் அருள்மொழிவர்மரைப் புத்த சமயத்தை

மேற்கொள்ளும்படி நான் கோர மாட்டேன். அவரே முன் வந்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டேன். உலகை ஆளப் பிறந்தவரும் உங்கள் அன்பைக் கவர்ந்தவருமான கோமகனைத் தலையை மொட்டையடித்துக் காவித் துணி அளிக்கும் கைங்கரியத்தை நான் ஒரு நாளும் செய்ய மாட்டேன். அதற்கு உடந்தையாகவும் இருக்க மாட்டேன். இவ்வாறு புத்த பகவானுடைய பத்ம சரணங்களின் மீது ஆணையாகச் சபதம் செய்கிறேன்! புத்தம் கச்சாமி! தர்மம் கச்சாமி! சங்கம் கச்சாமி!''

இடி முழக்கம் போன்ற கம்பீரத்துடன் உணர்ச்சி ததும்பக் கூறிய இந்த மொழிகளைக் கேட்டதும் அங்கே கூடியிருந்த அத்தனை மக்களின் உள்ளங்களும் ஒரு பெரிய மாறுதலை அடைந்தன. பலர் கண்களில் கண்ணீர் ததும்பியது. சிறிது நேரம் நிசப்தம் நிலவியது.

ஆச்சாரிய பிக்ஷு தொடர்ந்து கூறினார்:—

''சோழ நாட்டு மக்களின் கண்ணுக்குக் கண்ணான இளவரசரைக் குறித்து நீங்கள் எல்லாரும் இவ்வளவு சிரத்தை கொண்டிருப்பது இயல்புதான். பொன்னியின் செல்வரைக் குறித்த கவலை இப்போது உங்களுக்குத் தீர்ந்து போயிருக்கலாம். இனி மேல் உங்கள் குடும்பம், வீடு, வாசலைப் பற்றிச் சிறிது கவலை கொள்ளுங்கள். மகா ஜனங்களே! இதுவரையில் நாம் இந்தப் பக்கத்திலேயே கண்டும் கேட்டுமிராத கொடும் புயல் நம்மை நெருங்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அதோ, உங்கள் பின்பக்கமாகத் திரும்பிப் பாருங்கள்!''

ஜனங்கள் திரும்பிப் பார்த்தார்கள். பிக்ஷு கூறியபடியே அவர்களுடைய வாழ்க்கையில் என்றுமே காணாத அதிசயமான காட்சியைக் கண்டார்கள். அதிசயமான காட்சி மட்டுமன்று; பயங்கரமான காட்சியுந்தான்.

கடலானது பொங்கி மேலுயர்ந்து வானத்தில் மேலே மேலே வந்து கொண்டிருந்த கரிய கொண்டல்களைத் தொட்டுக் கொண்டிருந்தது. அந்தக் கரிய நிறத் தண்ணீர் மலையானது நின்ற இடத்தில் நிற்கவில்லை. மேலே மேலே நகர்ந்து வந்து கொண்டிருந்தது. ஜனங்கள் நின்ற இடத்திலிருந்து பார்க்கும் போது அந்த மலையானது அவர்கள் இருக்குமிடம் வரையில் வந்தால் அவர்கள் மட்டுமல்ல, சூடாமணி விஹாரமே முழுகிப் போவது திண்ணம் என்று தோன்றியது.

இந்தக் காட்சியைப் பார்த்து மக்கள் பிரமித்து நின்ற போது, ஆச்சாரிய பிக்ஷு மறுபடியும் ''அதோ, நீங்கள் எல்லாரும் வசிக்கும் நாகைப்பட்டினத்தைப் பாருங்கள்!'' என்று சொன்னார்.

நாகைப்பட்டினம் நகரம் சூடாமணி விஹாரத்துக்குச் சிறிது வட திசையில் அமைந்திருந்தது. வெகு தூரத்துக்கு வெகு தூரம் பரவியிருந்தது. கடற்கரையையடுத்துப் பண்டக சாலைகள், சுங்கம் வாங்கும் கட்டடங்கள் முதலியவை இருந்தன. அவற்றுக்கு அப்பால் ஜனங்கள் வசிக்கும் வீடுகள் ஆரம்பமாகிக் கிழக்கு மேற்கிலும் தெற்கு வடக்கிலும் சுமார் அரைக் காத தூரத்துக்கு மேல் பரவியிருந்தன.

கடல் பொங்கிப் பண்டக சாலைகளும், சுங்கச் சாவடிகளும் இருந்த இடத்தையெல்லாம் தாண்டிக் கொண்டு வந்து பட்டினத்தின் தெருக்களிலும் புகுவதற்கு அச்சமயம் ஆரம்பித்திருந்தது.

கடலில் இருந்த படகுகளும் நாவாய்களும் எங்கேயோ ஆகாசத்தில் அந்தரமாகத் தொங்குவது போல் தண்ணீர் மலைகளின் உச்சியில் காட்சி அளித்து அப்படியும் இப்படியும் ஆடிக் கொண்டிருந்தன. படகுகளின் பாய் மரங்கள் பேயாட்டம் ஆடிச் சுக்கு நூறாகப் போய்க் கொண்டிருந்தன.

''மகா ஜனங்களே! ஒரு காலத்தில் காவேரிப் பட்டினத்தைக் கடல் கொண்டது என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அம்மாதிரியான விபத்து நமது நாகைப்பட்டினத்துக்கு நேராமல் புத்த பகவான் காப்பாற்றுவாராக! ஆனாலும் நீங்கள் உடனே திரும்பிச் சென்று உங்கள் குழந்தை குட்டிகளையும் உடைமைகளையும் கூடுமான வரை காப்பாற்றிக் கொள்ள முயலுங்கள்!'' என்று ஆச்சாரிய பிக்ஷு தழதழத்த குரலில் கூவினார்.

இதைக் கேட்டதும் அந்த ஜனக் கூட்டமானது கடல் அலை போலவே விரைந்து நகரத்தை நோக்கி நகரலாயிற்று. முன்னணியில் நின்றவர்கள் ஓடத் தொடங்கினார்கள். பின்னால் நின்றவர்கள் அவர்களைத் தொடர்ந்து ஓடினார்கள். முதலில் கூட்டமாக நகர்ந்தார்கள்; பிறகு நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். சில நிமிட நேரத்திற்குள், சற்று முன்னால் பெரும் ஜனத்திரள் நின்று கொண்டிருந்த இடம் வெறுமையாகக் காட்சி அளித்தது.

படகோட்டி முருகய்யனின் மனையாள் ராக்கம்மாள் மட்டும் நின்ற இடத்திலேயே நின்று ''என் புருஷன்! என் புருஷன்!'' என்று கத்தினாள்.

''தாயே! உன் புருஷனுக்கு ஒன்றும் ஆபத்து நேராது. பத்திரமாகத் திரும்பி வந்து சேருவான். நீ உன்னைக் காப்பாற்றிக் கொள்!'' என்றார் பிக்ஷு.

''இல்லை, இல்லை! என் புருஷனை விட்டு விட்டு நான் எப்படிப் போவேன்? நானும் கோவிலுக்குள் வருகிறேன்'' என்றாள் ராக்கம்மாள்.

''கூடாது, அம்மா, கூடாது! புத்த சந்நியாசிகள் வசிக்கும் விஹாரத்துக்குள் பெண் பிள்ளைகள் வரக் கூடாது! உனக்குத் தெரியாதா?'' என்றார் பிக்ஷு.

இச் சமயத்தில் அந்த மாபெரும் ஜனக் கூட்டத்திலே ஓடாமல் பின்தங்கி நின்று கொண்டிருந்த மனிதன் ஒருவன் ராக்கம்மாளை அணுகி வந்தான். அவன் காதோடு ஏதோ சொன்னான். அவனுடைய கரத்

தைப் பிடித்துக் கரகரவென்று இழுத்தான். அவள் அவனுடன் வேண்டா வெறுப்புடன் போகத் தொடங்கினாள்.

"ஆகா! இந்த மனிதன் யார்? இவனுக்கும் இந்தப் பெண்ணுக்கும் என்ன உறவு?" என்று எண்ணிய வண்ணம் ஆச்சாரிய பிக்ஷு விஹாரத்துக்குள் சென்றார். பொன்னியின் செல்வர் இருந்த இடத்தை அணுகினார். முருகய்யன் இதற்குள் அதிசயமெல்லாம் நீங்கப் பெற்றவனாய் இளவரசர் கூறுவதைப் பக்தியுடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

"முருகா! இன்றிரவு நீ திரும்பி வந்து என்னைப் படகில் ஏற்றி ஆனைமங்கலத்துக்கு அழைத்துப் போக வேண்டும்" என்று இளவரசர் கூறினார்.

ஆச்சாரிய பிக்ஷு, "இளவரசே! இரவு வரையில் காத்திருக்க வேண்டியதில்லை. ஜனக் கூட்டம் கலைந்து விட்டது. தாங்கள் இப்போதே புறப்பட்டுப் போகலாம்" என்று சொன்னார்.

பின்னர், வெளியில் நடந்தவற்றைச் சில வார்த்தைகளில் கூறினார்.

"சுவாமி! ஜனங்கள்தான் கலைந்து போய் விட்டார்களே? நான் எதற்காகப் போக வேண்டும்?" என்றார் இளவரசர்.

"அவர்கள் திரும்பி வர மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? மேலும், பிக்ஷுக்களாகிய எங்கள் வாக்கை மெய்யாக்குவதாகச் சற்று முன் சொன்னீர்கள் அல்லவா? அதை நிறைவேற்றி அருள வேண்டும்!" என்றார் பிக்ஷு.

உண்மை என்னவென்றால், பொங்கி வரும் கடல் அந்தச் சூடாமணி விஹாரத்தைச் சிறிது நேரத்துக்கெல்லாம் முழுக அடித்துவிடும் என்று பிக்ஷுவின் உள்ளத்தில் ஒரு பீதி உண்டாகியிருந்தது. ஆகையால் இளவரசரை அவசரமாக வெளியேற்ற விரும்பினார். ஆனைமங்கலம் கடற்கரையிலிருந்து கிழக்கே சற்றுத் தூரத்தில் இருந்தது. ஆகையினால் பொங்கி வரும் கடல் அவ்வளவு தூரம் போய் எட்ட முடியாது. எட்டினாலும் அங்குள்ள மிகப் பெரிய சோழ மாளிகை மூழ்கி விடாது.

இளவரசர் பிக்ஷுவின் கருத்தை ஏற்றுக் கொண்டார். உடனே படகு கொண்டு வருமாறு கட்டளை பிறந்தது.

இதற்கிடையில் அங்கே கூடியிருந்த புத்த பிக்ஷுக்களைப் பார்த்து ஆச்சாரிய பிக்ஷு "நாம் கருணையே வடிவமான புத்த பகவானைச் சேர்ந்தவர்கள். இப்போது நாகைப் பட்டினத்து மக்களுக்குப் பெரும் சோதனை நேரிட்டிருக்கிறது. கடல் பொங்கி நகரத்துக்குள் வேகமாகப் புகுவதைக் கண்டேன். புயலின் வேகத்தினால் வீடுகளின் கூரைகள் சிதறிப் பறக்கின்றன. மரங்கள் தடதடவென்று முறிந்து விழுகின்றன. நாகைப் பட்டினத்திலும் அக்கம் பக்கத்திலும் வசிக்கும் மக்களில் வயோதிகர்களும் குழந்தைகளும் எத்தனையோ பேர் தப்பிக்கும் வகை அறியாது தவித்துக் கொண்டிருப்பார்கள். நீங்கள் அனைவரும் நாலாபுறமும் சென்று உங்கள் கண் முன்னால் கஷ்டப்படுகிறவர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள். குழந்தைகளையும் வயோதிகர்களையும் முதலில் கவனியுங்கள். சமுத்திர ராஜனின் கோபத்திலிருந்து எத்தனை பேரைக் காப்பாற்றலாமோ, காப்பாற்றுங்கள்! நான் வயதானவன். இங்கேயே இருந்து மாலை நேரத்துப் பூஜையைக் கவனித்துக் கொள்கிறேன்" என்றார்.

இதைக் கேட்டதும் பிக்ஷுக்கள் அங்கிருந்து அகன்று சென்றார்கள்.

கால்வாயில் படகு வந்து சேர்ந்தது. இளவரசர் ஆச்சாரிய பிக்ஷுவுக்கு வணக்கம் செலுத்தி விடைபெற்று அதில் ஏறிக் கொண்டார். முருகய்யனும் ஏறிப் படகு தள்ளத் தொடங்கினான்.

படகு கண்ணுக்கு மறையும் வரையில் பிக்ஷு அதையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தார். அவருடைய முகத்தைச் சுற்றி அபூர்வமான ஜோதி ஒன்று பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தது.

நாலாம் அத்தியாயம்

நந்தி முழுகியது

படகு கால்வாயில் போய்க் கொண்டிருந்தபோது இளவரசர் நிமிஷத்துக்கு நிமிஷம் கால்வாயின் நீர்மட்டம் அதிகமாகிக் கொண்டிருப்பதைக் கவனித்தார்.

படகு தத்தளித்துக் கொண்டிருந்தது. முருகய்யன் அதைச் செலுத்துவதற்கு வெகு பாடுபட்டுக் கொண்டிருந்தான்.

புயலின் வேகமும் வினாடிக்கு வினாடி அதிகமாகிக் கொண்டிருந்தது. இருபுறமும் மரங்கள் சடசடவென்று முறிந்து விழுந்து கொண்டிருந்தன.

நந்தி மண்டபத்தை நெருங்கிப் படகு வந்தது. இளவரசர் அந்த மண்டபத்தைப் பார்த்தார். நந்தியின் தலைக்கு மேலே தண்ணீர் வந்திருந்தது. இதிலிருந்து நீர் மட்டம் எவ்வளவு உயர்ந்திருந்தது என்று நன்கு தெரிய வந்தது.

"முருகய்யா! படகைச் சிறிது நிறுத்து" என்று இளவரசர் கூறினார். முருகய்யன் படகை நிறுத்தினான். ஆனால் அதன் ஆட்டத்தை நிறுத்த முடியவில்லை.

இளவரசர் படகிலிருந்து தாவிக் குதித்து நந்தி மண்டபத்தில் இறங்கினார். பின்னர் அதன் அருகில் விழுந்திருந்த ஒரு மரத்தைப் பிடித்துக் கொண்டு மண்டபத்தின் மேல் சிகரத்தின் மீது ஏறினார். அங்கேயிருந்து சுற்று முற்றும் பார்த்தார். கால்வாய்க்குக் கீழ்ப்புறம் முழுதும் ஒரே ஜலப் பிரளயமாக

இலவசம்

இந்த அழகான ஸ்டோன்வேர் கோப்பை!



கேம்ப்கோ வின்னர் - ஜோரான ருசியுள்ள சாக்கலேட் ட்ரிங்க்! இதில் சாக்கலேட், குளுகோஸ், மினரல்கள், விட்டமின்கள் எல்லாம் உண்டு.

சக்தி தரும் சத்துள்ள கேம்ப்கோ வின்னருடன் இப்போது கிடைக்கிறது ஒரு அழகான கோப்பை!

இன்றே வாருங்கள்! பெற்றுச் செல்லுங்கள் இந்த இலவச கோப்பையை

ஒவ்வொரு 500 கிராம் கேம்ப்கோ வின்னர் ஜாடியுடனும்!



ஸ்டாக் உள்ளவரை மட்டுமே இச்சலுகை!

Campco

கேம்ப்கோ லிமிடெட்

மங்களூர்.

R K SWAMY/CL



'பாண்டு' என்றால் அபராதம்!

பாண்டுரங்கோரிவில் என்பது அவர் பெயர். அவருக்காக அவர் அத்தான் தமது நண்பருடன், பம்பாய் செண்ட்ரல் பஸ் டெர்மினலில் காத்திருந்தார். "அதோ பாண்டு வருகிறான்" என்றார் நண்பரிடம். அவ்வளவுதான் அருகிலிருந்த ஒரு போலீஸ்காரர் அவரை ஸ்டேஷனுக்கு இழுத்துக் கொண்டு போய் விட்டார்! ரூ. 100 அபராதம் கட்டிய பிறகுதான் விட்டார்! காரணம், மகாராஷ்டிராவில் "பாண்டு" என்று போலீஸ்காரர்களைக் கிண்டலாகக் குறிப்பிடுவார்களாம்! தம்மைத்தான் அவர் கேலி செய்ததாகப் போலீஸ்காரர் எண்ணி விட்டார்!

ஆதாரம்: டைம்ஸ் ஆஃப் இந்தியா.
தகவல்: பிச்சுமணி.

இருந்தது. தென்னந் தோப்பில் பாதி மரங்களுக்கு மேல் அதற்குள் விழுந்து விட்டிருந்தன. இடைவெளி வழியாகப் பார்த்த போது கடல் பொங்கி அந்தத் தென்னந் தோப்பின் முனை வரையில் வந்து விட்டதாகத் தெரிந்தது.

வடக்கே, சூடாமணி விஹாரம் இருந்த திசையை அருள்மொழிவர்மர் நோக்கினார். விஹாரத்தின் வெளிப் படிக்கட்டுகள் வரையில் கடல் பொங்கிப் பரவியிருந்தது தெரிந்தது.

பொன்னியின் செல்வருடைய மனத்தில் அப்போது ஓர் எண்ணம் உதயமாயிற்று. அது அவருடைய உடல் முழுதும் சிலிர்க்கும் படி செய்தது.

"முருகய்யா! படகைத் திருப்பிக்கொண்டு போ! விஹாரத்தை நோக்கி விடு!" என்றார் இளவரசர்.

அதிகமாகப் பேசிப் பழக்கமில்லாதவனும் இளவரசரிடம் அளவிறந்த பக்தி கொண்டவனுமான தியாகவிடங்கரின் மகன், ஏன் என்று கூடக் கேளாமல் படகைத் திருப்பிச் சூடாமணி விஹாரத்தை நோக்கிச் செலுத்தினான்.

வரும் போது ஆன நேரத்தைக் காட்டிலும் போகும் போது சிறிது குறைவாகவே நேரமாயிற்று. ஆனால் இளவரசருக்கோ ஒவ்வொரு வினாடியும் ஒரு யுகமாக இருந்து கொண்டிருந்தது.

படகு விஹாரத்தை அடைந்த போது பொங்கி வந்த கடல் ஏறக்குறைய விஹாரம் முழுவதையும் சூழ்ந்து கொண்டிருந்தது. நீர் மட்டம் மேலே மேலே ஏறிக் கொண்டுமிருந்தது.

ஈழ நாட்டிலுள்ள விஹாரங்களைப் போல் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரம் அக் காலத்தில் அவ்வளவு கம்பீரமாகவோ உயரமாகவோ அமைந்திருக்கவில்லை. இன்னும் கொஞ்சம் தண்ணீர் மேலே ஏறினால் விஹாரத்தின் மண்டப சிகரம் கூட முழுகி விடும் என்ற நிலைமை ஏற்பட்டிருந்தது.

இளவரசர் படகிலிருந்து தாவித் தண்ணீரில் முழுகாமலிருந்த ஒரு மண்டபத்தின் மேல் தளத்தில் குதித்தார். அங்குமிங்கும் பரபரப்புடன் ஓடினார். விஹாரத்தின் அடித்தளத்துக்கு அவர் போகாமல் மேல் மாடங்களில் ஒவ்வொரு பகுதியாகத் தேடிக் கொண்டு வந்தார். மேல் மாடங்களிலேயே சில இடங்களில் மார்பு அளவு தண்ணீரில் அவர் புகுந்து செல்ல வேண்டியதாயிருந்தது. மேலும் மேலும் ஏமாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. கடைசியில், கௌதம புத்தரின் கம்பீரமான உருவச் சிலை அமைந்திருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார். அந்தச் சிலையின் மார்பு அளவுக்குத் தண்ணீர் ஏறியிருந்தது. அங்கே இளவரசர் நின்று நன்றாகச் சுற்று முற்றும் பார்த்தார். தண்ணீரில் குனிந்தும் பார்த்தார். அவருடைய வாயிலிருந்து எழுந்த மகிழ்ச்சியும் வியப்பும் கலந்த 'ஆஹா!' ஒலி அவர் தேடி வந்ததை அடைந்து விட்டார் என்பதற்கு அறிகுறியாக இருந்தது.

ஆம்; புத்தர் சிலையின் அடியில் தண்ணீருக்குள்ளே பகவானுடைய பத்ம சரணங்கள் இரண்டையும் இறுக்கிக் கட்டிக் கொண்டு ஆச்சாரிய பிக்ஷு உட்கார்ந்து கொண்டிருந்தார்.

பொன்னியின் செல்வர் தண்ணீரில் முழுகிப் பிக்ஷுவின் கரங்கள் இரண்டையும் சிலையிலிருந்து பலவந்தமாக விடுவித்து விட்டு அவரைத் தூக்கி எடுத்தார். தண்ணீருக்குள்ளே பிக்ஷுவைத் தூக்குவது இலேசாக இருந்தது. தண்ணீருக்கு வெளியே வந்த பிறகு அவ்வளவு இலேசாக இல்லை. ஆஜானுபாகுவும் நல்ல பலிஷ்டருமான அந்த பிக்ஷுவின் உடல் கனம் இளவரசரைத் திணறச் செய்தது.


"முருகய்யா! முருகய்யா!" என்று குரல் கொடுத்தார்.

"இதோ வந்தேன்!" என்று சொல்லிக் கொண்டே முருகய்யன் படகைக் கொண்டு வந்தான்.

பொன்னியின் செல்வர் ஆச்சார்ய பிக்ஷுவைத் தூக்கிக் கொண்டு படகை நோக்கி விரைந்து சென்றார். அவருடைய கால்கள் தடுமாறின.

(தொடரும்)


காரணங்கள்
கதை: கிருஷ்ணா
படம்: செல்வம்
மிஸ்டர் சுரேஷ்! என்ன இதிலே இத்தனை மிஸ்டேக்? ம்... இது மாதிரி தப்பு வந்தா இனிமே மெமோதான்.... ஜாக்கிரதை...
சரி சார்... சரி பண்ணிடறேன் சார்...
மிஸ்டர் ராஜன்... நீங்க தயாரிச்ச கொட்டேஷன்ல ஒரு மிஸ்டேக். நான் கவனிக்கலேன்னா நமக்கு இரண்டாயிரம் நஷ்டம் ஏற்பட்டிருக்கும். போகட்டும், இனிமே கவனமா இருங்க...
என்னம்மா அப்படிப் பார்க்கிறே.... சுரேஷ் கிட்டே ஒரு மாதிரியும் ராஜன்கிட்ட ஒருமாதிரியும் நடந்துக்கிட்டது ஆச்சரியமா இருக்கா....
ஆ... ஆமாம்... சார்...
பொதுவாகவே சுரேஷ் வேலைல கவனம் வைக்கிறதில்லே... அதனால நான் பொறுப்பு வரணும் கிறதுக்காக சுரேஷ் கிட்டே அப்படிக் கடுமையா நடந்துக்கிட்டேன்... ஆனா ராஜன்...
...அப்படிப் பட்டவரில்லே. எதிலும் கவனமா இருக்கிறவர். அப்படியும் தப்பு வந்திருக்குன்னா ....அது அவரையும் மீறி வந்ததா தான் இருக்கும். அதனால தான் ராஜன் கிட்டே அப்படி ‘சாப்டா’ நடந்துக்கிட்டேன்.



* பாம்பே ஹை (வடக்கு)விலுள்ள உற்பத்தி மேடை.



* கர்னல் வாஹி: ஓ. என். ஜி. ஸி. தலைவர்.

முன்பு, கடலுக்குள் மூழ்கி முத்தெடுத்தார்கள். இப்போது கடலுக்குள் குடைந்து எண்ணெய் எடுக்கிறார்கள். விளக்குகிறது இக்கட்டுரை...

"பூமிக்குள் புதையுண்டு கிடக்கும் கச்சா எண்ணெயைக் கண்டுபிடிப்பதும், ஆழ் குழாய்க் கிணறுகள் மூலம் வெளிக் கொண்டு வருவதும், நிலத்தின் மேல் செய்யக் கூடியதுதான். ஆனால், கடலுக்குள் எப்படி இதைக் கண்டுபிடித்து வெளிக் கொணருகிறார்கள்? கஷ்டமாக இருக்காதா?"

இந்தக் கேள்வியை நாம் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கமிஷன் (ONGC) வல்லுநர்களிடம் கேட்ட போது, "ஒப்பு நோக்குகையில், கடலுக்குள் வேலை செய்

கடலுக்குள் எண்ணெய் கண்டெடுக்கும் வித்தை!

வதைத்தான் நாங்கள் சுலபமாகக் கருது கிறோம்'' என்றார்கள்.

''எப்படி?'' என்று நாம் மறுபடியும் வியப்பாகக் கேட்டோம்.


''சாதாரணமாக இன்னின்ன இடங்களில் கச்சா எண்ணெய் கிடைக்கலாம் என்பதை நமது செயற்கைக் கோள்கள் எடுத்துத் தரும் புகைப்படங்களை ஆராய்ந்துதான் அனுமானம் செய்கிறோம். அப்படி அனுமானம் செய்கிற இடங்களுக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள பாறைகளின் தன்மை ஆகியவற்றைக் கொண்டு எண்ணெய் கிடைக்கலாம் என்று மேலும் உறுதி செய்து கொள்கிறோம். பிறகு அங்கு ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்ட ஆரம்பிக்கிறோம். இது தான் பொதுவான நடைமுறை.

''இதை நாங்கள் நிலத்தின் மேல் செய்யும் போது சில கஷ்டங்கள் இருக்கின்றன. உதாரணமாக எண்ணெய் கிடைக்கக் கூடிய இடங்கள் என்று நாங்கள் அனுமானிக்கிற இடங்களில் சர்வே மற்றும் ஆய்வு செய்யச் செல்லும் போது, அந்தந்த இடங்களிலுள்ள நிலச் சொந்தக்காரர்களிடம் அனுமதி வாங்க வேண்டும். அவர்கள் அனுமதி கொடுத்த பிறகு எங்கள் வாகனங்கள் செல்வதற்கான பாதை வசதிகளைப் பற்றியெல்லாம்கூட நாங்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது.

ஆனால், கடலுக்குள் இந்தப் பிரச்னைகளெல்லாம் இல்லை. சர்வசாதாரணமாக ஒரு நாளைக்கு முந்நூறு கி. மீ. அளவுக்கு நாங்கள் கடலுக்குள் சர்வே செய்ய முடியும். நிலத்தின் மேல் செய்வதற்கும் கடலுக்குள் செய்வதற்கும் உள்ள ஒரேயொரு வித்தியாசம் நிலத்தின் மேல் ஆகும் செலவை விடக் கடலுக்குள் ஆகும் செலவு, சுமார் நான்கு மடங்கு அதிகமாக இருக்கும் என்பது தான். ஆழ்துளைக் கிணறுகள் தோண்டும் துரப்பணக் கருவிகள் விஷயத்தில் இன்னும் செலவு அதிகம். நிலத்தின் மேல் தோண்ட இருபது கோடி பெறுமானமுள்ள ரிக் போதுமென்றால் கடலுக்குள் தோண்ட இருநூறு கோடி ரூபாய் பெறுமானமுள்ள ரிக் தேவைப்படும். அவ்வளவுதான்!''

''உதாரணமாக நிலத்தின் மேல் சர்வே செய்யும் போது, ஓரிடத்தில் எண்ணெய் கிடைக்க வாய்ப்பிருப்பதாக நீங்கள் உணரும் போது, அந்த இடத்தில் அடையாளம் இடுவதும் பிறகு தோண்டும் போது மீண்டும் அந்த இடத்தை அடையாளம் காண்பதும் சுலபம். ஆனால் கடலுக்குள் எப்படி இது சாத்தியம்?''

''அதுவும் கஷ்டமில்லை. ஆரம்பத்தில் சர்வே செய்யும் போது, நிலத்தின் மேல் தோட்டாக்களைக் கொண்டு வெடிகள் வெடிக்கச் செய்து, அந்த ஒலியின் எதிரொலி அதிர்வுகளைக் கணக்கிட்டு எவ்வளவு ஆழத்தில் எண்ணெய் கிடைக்கலாம் என்பதைக் கண்டுபிடிப்பது போலவே, கடலுக்குள் வெடிகள் வெடிக்கச் செய்யத் தோட்டாக்களுக்குப் பதிலாக 'ஏர் கன்' என்று சொல்லப்படும் காற்றழுத்தக் கருவியைப் பயன்படுத்துகிறோம். எண்ணெய் இருப்பது உறுதியாகிறபோது, நாங்கள் சென்றுள்ள ஆய்வுக் கப்பலின் துணையோடு அந்த இடத்தை அடையாளமிட்டுக் கொள்வோம். எப்படி? கடலுக்குள் நாங்கள் இருக்கும் இடத்தை ஒரு பாயிண்டாக வைத்துக் கொண்டு, கடற்கரைகளில் இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த இரண்டு இடங்களிலிருந்தும் தொடர்ச்சியாக ஒலி அலைகளைப் பரவச் செய்வோம். அந்த இரண்டு ஒலி அலைகளும் ஒன்றையொன்று சந்தித்துக் கொள்கிற இடம்தான் ஆழ்துளைக்



* கடலுக்கு அடியில் எப்படித் தூண்களை நிறுவுகிறார்கள் என்பதை இப்படம் விளக்குகிறது...

கிணறு தோண்ட வேண்டிய பாயிண்ட்! ஆக, மீண்டும் நாங்கள் தோண்டுவதற்காகத் துரப்பணக் கருவிகளைக் கொண்டு செல்கிற போது, இந்த ஒலி அலைகள் சந்தித்துக் கொள்கிற பாயிண்டை எங்களிடமுள்ள நவீனக் கருவிகள் மூலம் மீண்டும் கண்டுபிடித்துக் கொள்வோம். கஷ்டமேயில்லை."

"ரிக்குகளை நிறுவுவதிலும் சிரமம் இருக்குமே?"

"அதுவும் சிரமமில்லை. சுமார் எண்பது மீட்டர் ஆழம் வரை கடலுக்குள் தூண்களை நிறுத்தி (படம் பார்க்க) அதன் மேல் மேடையமைத்துக்கொண்டு கிணறுகளைத் தோண்ட ஆரம்பிப்போம். எண்ணெய் கிடைத்ததும் அதிலிருந்து சற்றுத் தள்ளிக் கடலுக்குள்ளேயே சற்று வசதியான இடத்தில் உற்பத்தி மேடை (Production Platform) அமைத்துக் கொள்வோம். அங்கு ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து வரும் கச்சா எண்ணெயைக் கொண்டு வந்து, எண்ணெயைத் தனியாகவும் வாயுவைத் தனியாகவும் பிரித்தெடுத்துத் தனித்தனிக் குழாய்கள் மூலம் நிலத்திற்கு அனுப்புவோம்."

ஆக, ஒப்புநோக்கத்தான் சுலபமேயொழிய நிஜமாகவே சுலபமான காரியமல்ல கடலில் ஆழ்கிணறு தோண்டுவது. மேலும் 'சுலபம்' என்று இவர்கள் குறிப்பிடுவதற்குக் காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, விஞ்ஞான முன்னேற்றம் காரணமாக மேல்நாடுகளில் கச்சா எண்ணெய் கிடைந்தெடுக்கத் தேவையான நவீன உபகரணங்களைக் கண்டுபிடித்துத் தயாரித்து வைத்திருக்கின்றனர். அவற்றை விலைக்கு வாங்கியோ அல்லது வாடகைக்கு எடுத்தோ ஓ. என். ஜி. சி. செயலாற்ற முடிகிறது. இரண்டாவது காரணம், (ஒப்பு நோக்க) எட்டு மடங்கு, பத்து மடங்கு என்று செலவு ஆனாலும் கவலை இல்லை. அரசுத் துறையில் இருப்பதால் என்ன செலவானாலும் அரசு கஜானாவிலிருந்து மூலதனம் கிடைத்து விடும். மூன்றாவதாக, ஏக போக்கியமாக இயங்குவதால் அரசு நிர்ணயிக்கும் விலைக்குத்தான் நாம் டீசல், பெட்ரோல், கெரசின், நாஃப்தா, முதலிய பல கச்சா எண்ணெய்ப் பிரிவுகளையும் வாங்கியாக வேண்டும் என்பதால் ஓ. என். ஜி. சி. லாபகரமாக நடப்பதில் தடை ஏதுமில்லை. இவையெல்லாம், ஓ. என். ஜி. சி. யின் பணியைச் சுலபமாக்குகின்றன. ஆனால் ஒன்று, நிலத்தில் குடைவதைக் காட்டிலும் கடலில் கச்சா எண்ணெய் குடைவதில் ஆபத்து அதிகம்.

நிலத்தில் குடையும் போது ஒரு விபத்து என்றால், புயல் என்றால் தப்பி ஓடிப் பிழைக்க வாய்ப்புண்டு. கடலில் இத்தகைய வாய்ப்பு கிடையாது. கடும் புயல் அல்லது விபத்தில் பொருட்சேதம் மட்டுமின்றி உயிர்ச் சேதமும் மிகுதியாக இருக்கும். பிரிட்டனைச் சேர்ந்த வடக்குக் கடலில் நேர்ந்த பெரிய விபரீதம் சமீபத்திய சரித்திரம். எனவே தீவிபத்து போன்றவை ஏற்படாதிருக்க மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் இருப்பது தவிர, புயல் மழைக் காலங்களில் குறைந்தபட்ச ஊழியர்களே கடல் மேடைகளில் பணியாற்றுவார்கள்.

கறுப்புத் தங்கம் என்று வர்ணிக்கப்படும் கச்சா எண்ணெய்தான் உலகப் பொருளாதாரத்தையே நிர்ணயிக்கும் விஷயமாக இருக்கிறது. உலக நாகரிக வளர்ச்சியின் அடிநாதமாகவும் விளங்குகிறது. கச்சா எண்ணெய் என்பது ஹைட்ரஜன் மற்றும் கார்பனின் சேர்க்கையான ஹைட்ரோ கார்பன். இது திரவ நிலையில் இருந்தால் கச்சா எண்ணெயாகவும் வாயு நிலையில் இருந்தால் இயற்கை எரிவாயுவாகவும் வெளிப்படுகிறது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு பூமிக்குள் புதையுண்டு, படிவுப் பாறைகளுக்கு இடையில் சிக்கிக் கொண்ட நுண்ணிய உயிரினங்கள்தாம் நாளடைவில் பூமியின் அழுத்தத்தில் இரசாயன மாற்றமடைந்து கச்சா எண்ணெயாகி விட்டன என்பது அனைவரும் அறிந்த விஷயம்தான்.

"இப்போது தமிழகக் கடற்பகுதியில் எங்கெங்கு எண்ணெய் கிடைக்கிறது?"

"தரங்கம்பாடியிலிருந்து பதினைந்து கி.மீ. தூரத்தில் கடலுக்குள் 3500 மீட்டர் ஆழத்தில் ஓர் ஆழ்குழாய்க் கிணறு. அதில் நாளொன்றுக்கு 4,300 பாரல் கச்சா எண்ணெய் கிடைக்கிறது. பரங்கிப் பேட்டையிலிருந்து பன்னிரண்டு கி. மீ. தூரத்தில் 1,800 மீட்டர் ஆழமுள்ள குழாய்க் கிணற்றிலிருந்து நாளொன்றுக்கு 3.5 லட்சம் கியூபிக் மீட்டர் எரிவாயு கிடைக்கிறது. காவிரிப் படுகையில் இன்னும் நிறைய இடங்களில் கடலுக்குள் எண்ணெய் மற்றும் எரிவாயு கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக உணருகிறோம்!' என்று மகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும் கூறுகிறார்கள் ஓ. என். ஜி. சி. வல்லுநர்கள்.

இயற்கை எரிவாயுவின் துணை கொண்டு தற்போது முதற்கட்டமாகத் தமிழ்நாடு மின் வாரியம் ஐந்து மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் ஒன்றை அமைக்கவுள்ளது. அடுத்த கட்டமாக நூறு மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான எரிவாயுவுக்கும் ஓ. என். ஜி. சி. யிடம் பதிவு செய்துள்ளது தமிழக மின் வாரியம்.

ஓ. என். ஜி. சி. அல்லும் பகலும் நிலத்திலும் நீரிலுமாகத் தனது துரப்பணப் பணியைச் செய்து கொண்டேயிருக்கிறது. நம் நாட்டின் தேவையில் அறுபத்தைந்து சதவிகித எண்ணெயை ஓ. என். ஜி. சி. யே தற்போது வழங்கிக் கொண்டிருக்கிறது. மீதியைத்தான் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம் என்பது பெருமைக்குரிய விஷயம்.

— இளங்கோவன்

படங்கள், உதவி: ஓ. என். ஜி. சி.



Enterprise/GS/153Tm

தப்பிய தலைமுறைகள்



விமலா ரமணி

அந்தக் குடிசைகள் வழியாகத் தான் நடந்து பக்கத்துத் தெருவுக்குப் போக வேண்டும். அப்படி நடந்து போகிற போது அந்தக் குடிசைகளைப் பார்த்திருக்கிறாள் சித்ரலேகா. வாசலிலேயே பாத்திரங்கள் தேய்க்கும் தண்ணீர் ஆறாக ஓடுவதும், அதில் நாய்களும், கோழிகளும், ஆடுகளும் மேய்வதும், படுத்துக் கிடப்பதும், வீதியிலேயே தம் குழந்தைகளை அவர்கள் குளிப்பாட்டுவதும், இதற்கிடையில் மெட்ரோ வாட்டர் லாரி வந்தால் போட்டதைப் போட்டுவிட்டு லாரி பின்னால் ஓடுவதும்... குழாயடியில் வரிசையாகக் குடங்களுடன் காத்திருப்பதும்.....

சித்ரலேகாவுக்கு ஆச்சர்யமாக இருக்கும். இந்த வாழ்க்கைக்கு இவர்கள் பழகிப் போனவர்கள். தங்கள் வாழ்க்கையே இப்படி 'க்யூ'வில் நிற்பதும், குழாயடியில் நிற்பதும், ரேஷன் கடையில் நிற்பதுமாகக் கழிக்கப்பட என்றே கடவுளால் தரப்பட்ட வரப்பிரசாதம் என்று நினைக்கிறவர்கள்....

இவர்களுக்கு நாட்டைப்பற்றி அக்கறை இல்லை. யார் ஆளுகிறார்கள் என்கிற கணிப்பு இல்லை. ஏதோ இலவசமாகக் கிடைப்பனவைகளை வாங்கிக் கொண்டு, 'மகராசன் நல்லா இருக்கணும்' என்று வாழ்த்திவிட்டு, காசு கொடுத்தால் ஓட்டுப் போடுவேன் — என்று பேரம் பேசியபடி, ரிக்ஷா 'இஸ்துக்கொண்டு....' குடித்துக் கொண்டு......

இவர்களுக்கு சுய கணிப்புத் தெரிந்திருக்க வேண்டும்..... ஒரு நல்ல புதிய தலைமுறையை, ஒரு புதிய சிந்தனையை சுயமாக உருவாக்க இவர்களுக்கு யார் கற்றுத் தரப் போகிறார்கள்....?

— இவள் இப்படி ஏதோ தனக்குள் யோசித்தபடி தன் வீட்டு வாசலில் நின்ற போது தான்....

மெட்ரோ வாட்டர் லாரி வந்தது...

லாரி வர வர.... ''ஓடு.... ஓடு தே... லாரி வருது... போ... போய் முதல்லே பைப்பைப் புடி....'' — குடிசை வாழ் மக்கள் கூச்சலிட ஆண் பெண்... இருபாலரும் பெண்டு பிள்ளைகள் அனைவரும் லாரியின் பின்னே ஓடினார்கள்.

வழக்கமாக அந்த லாரி இவர்கள் வீட்டு வாசலில் தான் வந்து நிற்கும். இவள் இந்தக் கூட்டத்தில் தண்ணீர் பிடிக்கப் போக மாட்டாள். சில சமயம் குடத்துடன் போய்க் காலி குடத்துடன் திரும்பிய வரலாறும் உண்டு. தினம் தினம் இவளைப் பார்த்த பரிச்சயத்தில் குடிசைப் பெண் ஒருத்தி —

''தா... இப்படித்தாமே... நான் புடிச்சுத்தாரேன்...'' — என்று இவளிடமிருந்து குடத்தை வாங்கி அந்தப் பெண்ணே தண்ணீர் பிடித்துத் தந்திருக்கிறாள். இவள் வீட்டில் வயதான மாமியார், மாமனார் இருக்கிறார்கள். மடி, ஆசாரம் பார்க்கிறவர்கள். எனவே அந்தப் பெண் பிடித்துக் கொடுத்த தண்ணீரை உபயோகப்படுத்த முடியாது. என்று சொன்னால் அந்தப் பெண் மனம் வாடிவிடும். எனவே இவள் பேசாமல் சிரித்தபடி, தண்ணீர்க் குடத்தை வாங்கிக் கொண்டு, அதை கொல்லையில் தென்னை மரத்துக்குக் கொட்டி விட்டுவந்துவிடுவதும் உண்டு!

இவள் கணவனுக்குக் கொஞ்சம் செல்வாக்கும், பணமும் இருக்கிற காரணத்தால் லாரித் தண்ணீரை விலை கொடுத்து வாங்கி 'சம்ப்'பில் நிரப்பிக் கொண்டு நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தார்கள். இன்று அதுவும் தீர்ந்துவிட்டது. வீட்டில் கொஞ்சம் கூடத் தண்ணீர் இல்லை. ஒரு குடமாவது கிடைத்தால் தேவலை.... லாரித் தண்ணீர் எப்போது கொண்டு வருவார்களோ தெரியவில்லை — என்று நினைத்தபடி இவள் குடத்துடன் வாசலுக்கு வந்தபோது தான் அந்த விபத்து நடந்து விட்டது!

மெட்ரோ வாட்டர் லாரி பின்னால் ஓடி வந்த சிறுவர்களில் ஒருவன் (வழக்கமாக இவர்கள் ஆளாளுக்கு ஒரு குழாயைத் தம் அம்மாக்களுக்காக 'ரிசர்வ்' செய்வார்கள். மூன்று குழாய்கள் பொருத்தப்பட்டிருக்கும் அந்த லாரியில் ஆளாளுக்கு ஒரு குழாயைப் பிடித்துக் தொங்கிக் கொண்டு லாரியுடன்

ஓடுவார்கள். டிரைவரும், கூட வரும் ஆளும் சொன்னாலும் கேட்க மாட்டார்கள்...!) லாரி வருகிறது என்றதும் கோவணத்துடன், லாரி பின்னால் ஓடிக் குழாயைப் பிடித்தவன் கை வழுக்கிக் கீழே விழுந்து ஏகமாய் அடி பட்டு......

ஏக அமர்க்களம்... களேபரம்....

அந்தப் பையன் ரத்த வெள்ளத்தில் துடி துடிக்க... ஆத்தாக்காரி அழுகையும், ஆவேச முமாக ஒப்பாரி வைக்க... அந்தக் குடிசைப் பகுதியே கூடி விட்டது.

''டேய்... எவண்டா டேய்... புள்ளை மேலே லாரி ஏத்தின சோமாறி....?'' குடிசைக் காரர்களின் கோபத்தையும், ஆவேசத்தை யும் பார்த்த லாரி டிரைவரும், கூட வந்த ஆளும் அந்த நிலையில் அவர்கள் முன் னால் போனால் தன்னை பீஸ் பீஸாக்கி விடுவார்கள் என்கிற உண்மையைப் புரிந்து கொண்டு, திடுதிடுவென்று வாசல் கதவு திறந்திருந்த சித்ரலேகாவின் வீட்டிற்குள் நுழைந்து விட.... கையில் குடத்துடன் தண்ணீர் பிடிக்க வாசலுக்கு வந்த சித்ர லேகா இந்த நிகழ்ச்சியால் பிரமை பிடித்துப் போய் என்ன பண்ணுவது என்று புரியாமல் உள்ளே வர....

'சட்'டென்று வாசல் கதவைச் சாத்திய அந்த டிரைவர், அவள் காலடியில் விழுந் தான். ''தாயீ.... கதவைத் திறந்துடாதீங்க... என்னைக் கொன்னுடுவாங்க... இப்போ நான் என்ன சொன்னாலும் கேட்க மாட் டாங்க... நீங்க தயவு செய்து போலீஸுக்குப் 'போன்' பண்ணி அவர்களை வரவழைச்சு அவங்க பாதுகாப்போட என்னை அனுப்பி வையுங்கம்மா... அங்கே ஓர் உசிரு துடிச் சுட்டு இருக்கிறதா நினைக்காதீங்க.... இங்கே ரெண்டு உசிரு துடிக்குது.....''

சித்ரலேகா திகைத்துப் போனாள். வீட் டில் விவேக்கும் இல்லை.... ஆபீஸ் போயிருந் தான்.... வயதான மாமியார் மாமனார்.... இவர்களை ஏன் உள்ளே விட்டாய்...? — என்று கத்துவார்களோ என்று பயந்த நேரத் தில் மாமனாரே கூறினார் —

''அம்மா சித்ரா... இவர் சொல்றது நிஜம்.... இவரை உள்ளே சமையல் ரூம்லே ஒளிஞ்சுக்கச் சொல்லு.... அம்மா உள்ளே சமைக்கட்டும்... இந்த ரூம்க்குள்ளே யாரை யும் விடமாட்டோம். வயசான மாமியார் சமையல் வேலை செய்யறாங்கன்னு சொல்லு.... இந்த டிரைவரும், இந்த ஆளும் கொல்லை வழியாத் தப்பிச்சு வெளியே போனதாச் சொல்லு.... யாராவது ரெண்டு பேரை மட்டும் உள்ளே வந்து பார்க்கச் சொல்லு.... அதுக்குள்ளே நான் போலீஸுக் குப் போன் பண்றேன்....''


படபடவென்று மாமனார் பேச... மாமி யார் சமையல் அறைக்குள் நுழைய... அந்த டிரைவரும், அந்த இன்னொரு ஆளும் அந்தப் பெரிய அரிசிக் குதிரின் பின்புறம் (கிராமத்தில் மாமனாருக்கு நிலம் இருப்ப தால், நிலத்திலிருந்து விளைந்து வரும் மொத்த நெல்லையும் கொட்டி வைக்கும் குதிர் அது) ஒளிந்து கொள்ள... சித்ரலேகா மெதுவாகக் கதவைத் திறந்தாள்.

காத்திருந்த கூட்டம் ஆவேசமாக உள்ளே நுழைய முனைந்த போது, சித்ர லேகா கை கூப்பி அவர்களை வேண்டிக் கொண்டாள்.

''அவங்க ரெண்டு பேரும் பின்பக்கமாத் தப்பி ஓடிட்டாங்க... சந்தேகமா இருந்தா யாராவது ரெண்டு பேர் உள்ளே வந்து பாருங்க....''

இதற்குள் ரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்த அந்தச் சிறுவனை ஓர் ஆட் டோவில் ஏற்றினார்கள். ஆத்தாக்காரியும், வயதானவள் ஒருத்தியும் (அந்தச் சிறுவனின் பாட்டியாக இருக்க வேண்டும்) சாபம் கொடுத்தபடி ஆட்டோவில் ஏறினார்கள். அந்தப் பெண் விதவை போலிருக்கிறது... ''எனக்கு இனிமே யார் இருக்காங்க?'' — என்று அவள் அலறியது பரிதாபமாக இருந் தது.

''அந்த டிரைவர் நாசமாப் போக... கட் டையிலே போக.... என் ராசா மேலே லாரி ஏத்தின அவனை ஆத்தா வந்து வாரிட்டுப்



போக.....''

அந்த ஆட்டோ கிளம்பித் தெருமூலைக்குப் போகும் வரை அந்த சாபம் சித்ரலேகாவின் காதுகளில் கேட்டுக் கொண்டே இருந்தது.

அதன் பின்....?

கோபமடைந்த மக்கள் லாரித் தண்ணீரைத் திறந்து விட்டு 'ஹோலி' கொண்டாடி.... ஏக களேபரம் செய்து அடங்கிப் போனார்கள்... போலீஸ் மெதுவாக வந்தது...

சமையல் அறையில் பதுங்கிக் கிடந்த டிரைவருக்கும், உதவி ஆளுக்கும் இருந்த இடத்திலேயே டிபன், காபி எல்லாம் கிடைத்தன.

சித்ரலேகாவுக்கு ஆச்சர்யம்...! தன் ஆசார மாமியாரும், மாமனாரும் கூட ஓர் ஆபத்துச் சமயம் என்று வரும்போது எப்படி மாறிப் போனார்கள்! பரவாயில்லை. இவர்களும் அவசரத்துக்கு 'அட்ஜஸ்ட்' செய்து கொள்கிறார்கள் என்று நினைத்தாள்.

அதன் பின் மெல்ல போலீஸ் உதவியுடன் அவர்கள் இருவரும் யாருக்கும் தெரியாமல் வெளியே கடத்தப்பட்டு... எல்லாமே ஏதோ சினிமாவில் நடக்கிற சம்பவம் மாதிரி நடந்தது!

இது நடந்து சில நாட்கள் ஆயின... அந்தப் பையனின் உடல்நிலையை மட்டும் அடிக்கடி சித்ரலேகா விசாரித்துக் கொண்டாள். அவன் தேறி வருவதாகச் சொன்னார்கள்.

தினம் வழக்கம் போல் லாரி வந்தது. வேறு டிரைவர் வந்தார். வழக்கம் போல் கூட்டம்... குழப்பம்.. கூச்சல்... க்யூ....

அன்று — —

அந்தப் பையன் கையில் கட்டுடன் ஒரு கையில் தண்ணீர் பிடிக்க வந்தான். இன்னும் மெலிந்திருந்தான்... அப்பாடா! நல்ல வேளை... பிழைத்து விட்டான். 'இனி லாரி பின்னால் ஓடாதே... குழாயைப் பிடிக்காதே' — என்று சொல்ல வேண்டும் — என்று நினைத்தவள் அந்தப் பையனை கூப்பிட நினைத்த போது....

அதோ... அட... அந்த பழைய டிரைவரும், இந்தச் சிறுவனின் தாயும் இணைந்தபடி வருகிறார்கள்....!

முன்பு வெறுமையாக இருந்த அவள் நெற்றியில் இப்போது குங்குமம்! புத்தம் புதுப்புடைவை உடுத்தி... அவள் கழுத்திலிருந்த புதிய மஞ்சள் கயிறு சித்ரலேகாவைப் பிரமிக்க வைத்தது.

''நீ நாசமாகப் போக... என் ராசா மேலே லாரி ஏத்தின அவனை ஆத்தா வந்து வாரிட்டுப் போக.....''

அவள் கொடுத்த சாபங்கள் இவள் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருப்பது போன்ற பிரமை....!

இதோ... இதோ.... இவர்கள் பின்னால் அந்தப் பாட்டியும் வருகிறாள்.... வந்தவள் இவளைப் பார்த்துச் சிரித்தாள். கை கூப்பித் தொழுதாள்.... மெல்லத் தயங்கியபடி இவளிடம் பேசினாள்....

''அவங்க ரெண்டு பேரும் கண்ணாலம் கட்டிக்கிட்டாங்க... தாயீ...''

''பார்த்தேன்...'' — என்றாள் சித்ரலேகா சுரத்தில்லாமல்.

''பாவங்க, சின்னப் பொண்ணு... புருஷனும் போய்... ஒரு புள்ளையை வைச்சுட்டு திண்டாடிட்டு இருக்கு... இந்த டிரைவர் தம்பிதான் பண்ணின தப்புக்குத் தண்டனையா அவளைக் கண்ணாலம்... கட்டிக்கறேன்னு எங்கிட்டே தான் கேட்டுது. நான் தான் பார்த்தேன். அவளுக்குக் கூட அத்தனை இஷ்டமில்லை. நான் தான் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைச்சேன். அந்தத் தம்பி நல்லவன் தான். ஆஸ்பத்திரிச் செலவுக்கெல்லாம் அந்தத் தம்பிதான் பணம்கொடுத்தது. அவனோட உருவத்துலே நான் என்னோட இறந்த மகனைப் பார்த்தேன்....'' — கிழவி கண்களைத் துடைத்துக் கொண்டாள். சித்ரலேகா பிரமித்துப் போனாள்.

''அப்போ இது... இது உன் மக இல்லையா...?''

''இல்லை தாயீ... மருமகப் பொண்ணு... மகன் இறந்துட்டான். மருமக நினைச்சிருந்தா என்னை வீட்டை விட்டுத் துரத்தி இருக்கலாம். ஆனா மருமக நல்லவ... தான் குடிக்கற கஞ்சியிலே எனக்கும் கொஞ்சம் தருவா... பேரப்புள்ளைக்குக் கதை சொல்லுவேன். நான் போயிட்டேன்னா என் மருமகளுக்கு ஒரு 'துணை' வேண்டாங்களா...? என்ன இருந்தாலும் பொம்பளைதானுங்களே... புது மகனும் அதான் அந்தத் தம்பி நல்லவனாத் தான் இருக்கான். இந்த வேலையை வுட்டுட்டு வேற வேலைக்குப் போயிட்டான். நாங்க ஒண்ணா சந்தோஷமா இருக்கோம்... இன்னிக்கு வாழறது தான் தாயீ வாழ்க்கை.. நாளைக்கு நமக்குக் கை கால் வி*ள ங்க லேன்னா கஞ்சி ஊத்த அன்பா யாராவது வேண்டாங்களா....? அதான் சரின்னுட்டேன்....!''

சித்ரலேகா சிலையானாள். எத்தனை தெளிந்த சிந்தனை! வாழ்க்கையை, யதார்த்த ரீதியாகப் புரிந்து கொண்ட சத்தியம்.... குடிசைக்குள் இப்படி ஒரு கோபுர எண்ணம்! எத்தனை பேருக்கு வரும் இந்தச் சிந்தனை...? இவள் மாமியார் கூட ஓர் அவசரத்தில் 'அட்ஜஸ்ட்' பண்ணிக் கொண்டு சமையல் அறையில், அண்டியவர்களுக்குத்தன் கொள்கைகளை மாற்றி கொண்டு இடம் கொடுத்தவள் தான். ஆனால் தன் தலைமுறையையே மாற்றி அமைக்க இடமளித்த இந்தத் தாய் இன்னும் புதுமையானவளோ...? நாளைக்கு புது மகளுக்குக் குழந்தை பிறந்தால் இந்தப் பழைய பாட்டி அதே பழைய கதையைத்தான் சொல்லுவாள். ஆனால் ஒரு புதிய தலைமுறையை ஆரம்பித்து வைத்தவளல்லவா இவள்....

நினைக்க நினைக்கச் சித்ரலேகாவுக்கு அந்தக் கிழவி தன்னைவிட உயரத்தில் இருப்பதாகப் பட்டது.

பாம்பே டையிங்
ஒன்பது கெஜ புடவையை
அணிந்ததும் பாவை மாறிடுவாள்
தேவதையாக



* மில் நிர்ணயித்த விலை.
* தரத்திற்கு உத்தரவாதம்

தமிழ்நாடு கேரளா மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள எங்களது 115க்கும் மேற்பட்ட ஷோரூம்களிலும், 750க்கும் மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற டீலர்களிடமும் கிடைக்கும்.

Marketed by:

சிவ்ராம்ஸ் அஸோஸியேட்ஸ்/சிவ் சேல்ஸ்
கோயமுத்தூர் - 11 சென்னை - 17

Bankers : The Federal Bank Ltd.

பாம்பே டையிங்

அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி-1989



முதல் பரிசு	ரூ.	1500
இரண்டாவது பரிசு	ரூ.	750
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 375 வீதம்	ரூ.	750

ஆக மொத்தம் ரூ. 3000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் வேறு எந்த உருவிலும்பிரசுரமானதில்லைஎன்றும்உறுதிமொழி தேவை.

- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.

- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.

- உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால்தலைஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 6 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.

பஞ்சாயத்து ஜோக்ஸ் அமர்க்களம்! பழைய ஜோக்ஸ், ஜாக்கிரதை!

வட்டமேஜை

• 'வறட்சி நிலைக்கு நிரந்தரத் தீர்வு' — தலையங்கம் மிகச் சிறப்பாக இருந்தது. நீண்டகால நோக்குடன் எதையும் — செய்யாததால் தான் வறட்சி நிரந்திரமாகிறது. ஆட்சிக்கு வரும் எவரும் செய்வதாகக் காணோம்.

சென்னை — 5, எஸ்.வி. ராஜசேகர்.

• தாங்கள் சொல்வது போல் மழைநீரைச்சேமித்தாலேபோதும் வறட்சியைப் போக்கிவிடலாம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் தெரிந்து அதன்படி நடந்தால் நன்றாக இருக்கும். நடக்க வேண்டுமே!

சென்னை — 39, கவிதாசன்.

• மாசக்கடைசியில்கூடாடும் எங்களுக்கு கிரிஜா பார்த்திபன், லட்சுமி செந்தில் ஆகியோரின் யோசனைகளைப் படித்த போது, அளவில்லா மகிழ்ச்சியாக இருந்தது.

சீர்காழி, ஜெயலக்ஷ்மி சண்முகம்.

• க.வி.பிட்ஸ்களைத் தொகுத்து, ஒரு புத்தகமாக வெளியிட்டால் அவ்வப்போது படித்துப் படித்துச் சிரித்துக் கொண்டே இருப்போம்!

திருச்சி, ஆற்காடு எழிலன்.

• புள்ளிகள், செய்திகள் பகுதியில் அத்வானி சொன்ன திருடன் கதை மிகவும் சிறப்பாகவும் சிந்திக்கும் படியாகவும் இருந்தது.

சென்னை — 23, அயன்புரம் சிவாஜிபாபு.

• கடுமையான அக்னிநட்சத்திர வெயில் புழுக்கத்தில் அவ்வப்போது கல்கியை விசிறிபோல விசிறிக் கொண்டே சிரமத்துடன் 'பயணிக்கும் பவர்கட்'டைப் படித்தபோது வெயிலின் சிரமத்தையும் மறந்து சிரித்தேன்.

முடிகண்டநல்லூர், க.ராஜேந்திரன்.

• 'நீங்கள் உண்பது சத்தான உணவா?' — சும்மா சொல்லக் கூடாது. அசத்திட்டீங்க! சுவைக்கு மட்டுமே முதலிடம் கொடுத்தவர்கள் இனிமேல் சத்துக்கு அதி முக்கியமான இடம் அளித்து ஆரோக்கியமான தேகத்தைப் பெறுவார்கள் என்பதில்எனக்குக் கொஞ்சம்கூட சந்தேகமில்லை!

கடலூர், ஆர். வேணுமணி.



• சத்துள்ள உணவாகவே சாப்பிட வேண்டும் என்று ஆசை தான்! வெத்து உணவிற்கே வழி இல்லை என்கிற போதுதான் கிடைத்தது போதும் என்ற எண்ணமே வெல்கிறது!

மேட்டுப்பாளையம், பி.ஏ. வஹாத்.

• சிவா பட விமர்சனத்தைத் துல்லியமாக எந்தவித பாரபட்சமும் இல்லாமல் வெளியிட்டது. உண்மையிலேயே சிறப்பு அம்சம்!

சீர்காழி, ஆர். ரஜினிராஜா.

• 'சிவா' படத்தின் விமர்சனம் படத்தைத் தாங்கள் குறை கூற அஞ்சுவது போல் இருந்தது.

சங்கராபுரம், கே. மகேஷ்.

• இவ்வாரக் கல்கியின் முதல் பக்கத்தைத் திறந்தவுடனேயே ராஜீவ் காந்தியின் பஞ்சாயத்துச் சட்டத்தைக் கிண்டல் பண்ணி வெளி வந்திருக்கும் பஞ்சாயத்து ஜோக்ஸ் அமர்க்களம்.

தக்கோலம், அ. முஸ்தபா.

• 'நோயாளி — நர்ஸ்' ஜோக்கும் 'ச்ரர் வேஸ்ட்' ஜோக்கும் பழைய ஆனந்தவிகடனில் வெளிவந்தவையே!

கும்பகோணம், ஆர். வசந்தகுமார்.

• இந்த வாரக் 'கல்கி' இதழில் 39 ஆம் பக்கத்தில் இடம் பெற்றுள்ள 'கரடிகுளம் ஜெயாபாரதிப் பிரியா'வின் ஜோக்கும் 42 ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ள 'ஆர். வசந்தகுமாரின்' ஜோக்கும் ஏற்கெனவே வேறு பத்திரிக்கைகளில் வெளிவந்து விட்டன என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அணக்குடி, சிதா.

• வாழப்பாடி ராமமூர்த்தி 'பந்தா' இல்லாத மனிதராக இருக்கலாம். ஆனால் சென்னைத் தொலைக்காட்சி, ராஜீவ் காந்திக்கு அடுத்தபடியாக ஒன்றுமில்லாத விஷயத்துக்கெல்லாம் அவர் முகத்தை ஒளிபரப்பி அவர் பெயரைக் கெடுத்துவிடும் போல் இருக்கிறதே!

மன்னார்குடி, ஜி. நீலா.

• இன்றைய இளைஞர்கள் 'அழகு' என்பதை உடலிலும், உடுக்கும் உடையிலும் காண்கிறார்கள். அப்படிப்பட்ட பார்வையினால், ஒவ்வோர் இளைஞனும் (ஆண் — பெண்) ஓர் ஆதிவாசியின் குணாதிசயத்தில் வாழத் தொடங்குகின்றான் — என்று சூடாமணி இளைய சமுதாயத்தினரைப் படித்துள்ளது பிரமிப்பூட்டுகிறது! ஒவ்வோர் இளைஞரையும் தட்டியெழுப்ப — அந்த எழுபது வயதுப் பாட்டியை உபயோகப் படுத்தியிருப்பது 'சபாஷ்' போட வைக்கிறது. வெல்டன்!

கொரட்டூர், ''ஸ்ரீ'' மகுடப் பிரியன்.

• ''பிரித்து வைத்தவள்'' கதை படித்தேன். மருமகள் விடை பெறும் போது மனது கனத்து விட்டது. கதாசிரியர் எஸ். சகுந்தலாவுக்குப் பாராட்டுக்கள்.

திருச்சி, டி. செல்வகுமார்.

என் உயிர்த் தோழன்

அத்தியாயம் 8
விருந்தும் விசேஷ பீடாவும்!

தென்னவனுக்குப் பையன்களின் கூட்டுக் களவாணித்தனம் மெல்லப் புரிய ஆரம்பித்தது.

இவர்கள் வெறும் அம்புகள்தான்; எய்திருப்பது யாரென்று தெரியவில்லை. இவர்களை நொந்தும் பயனில்லை. தென்னவன் ஒரு முடிவுக்கு வந்தான். இவர்கள் போகிற வரை போகட்டும்... கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம். இவர்களை வைத்துப் பொம்மலாட்டம் நடத்தும் நபரை யாரென்று கொஞ்ச நேரத்தில் கண்டுபிடித்து விடலாம்.

தனக்குள் ரசித்துச் சிரித்துக் கொண்டான் தென்னவன்.

சிறுவர்களுக்கு, அவன் சிரிப்பு, கொஞ்ச நேரத்திற்குச் சிறைத் தண்டனையைத் தளர்த்தியது போல் இருந்தது. மெதுவாக அசைந்தார்கள். மெல்லச் சிரித்தார்கள்.

தென்னவன் குச்சியால் பல் துலக்கத் துவங்கினான்.

ஒருவன், "தென்னவன்" என்று சொல்ல, மற்றவர்களும் "தென்னவன்!... தென்னவன்!" என எதிரொலி எஃபெக்ட் கொடுத்தனர்.

தென்னவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

"இவனும் உங்களைப் போலத்தாண்ணே! வாழைத் தாரை எடுத்துக் கத்திச் சண்டை போடறேன்னுவான்... வீதியில பொம்பளங்க மண் பானையில தண்ணி எடுத்துக்கிட்டுப் போனாக் கல் எறிஞ்சு அதை ஒடச்சிருவான்! உங்களது மேடை — எங்களது வீட்டுத் திண்ணை. லைட்டு, கூரை ஓட்டை வழியா வர்ற சூரிய வெளிச்சம்... சாக்குத் துணியில திரையக் கட்டிச் சத்தமாப் பேசிக் கூட்டத்தைக் கூட்டிடுவோம்!"

பாரதிராஜா

"ஆமா!... வத்திப் பெட்டி மேல ஒட்டி இருக்கிற படம், இல்லென்னா சிகரெட் அட்டை இதான் டிக்கெட்டு... புளியம் பழம், கொடுக்காப்புளி, கடலை இதுல ஏதாவது குடுத்தாத்தான் உட்கார வைப்போம்!"

சிறுவர்கள் அளந்து கொண்டிருந்தனர்.

ஒருவன் முன்னால் பார்த்த திசையை நோக்கிச் சொல்லிக் கொள்ளாமல் வேகமாக ஓடினான்.

தென்னவன் அவன் ஓடியதைப் பார்த்துவிட்டுக் குளிக்கத் தயாரானான்.

மறுபடியும் கோரஸ் குரல்...

"நிறுத்துங்க!"

சிறுவர் படை அவனை நோக்கி நகர்ந்து வந்தது. ஓடியவனும் வந்து சேர்ந்து கொண்டான்.

"த லை க் கு த் தா னே குளிக்கப் போறீங்க...!"

"ஆமா...!"

"தலைக்கு என்னத்தப் போட்டுத் தேய்ப்பீங்க?"

"ஒண்ணுமில்லே...! சும்மா அப்படியே கையால தேய்ச்சுக்க வேண்டியதுதான்... வேணும்னா இந்த சோப்புக் கட்டியை அழுத்தித் தேச்சிக்குவேன். அதுவா இஷ்டப்பட்டா நுரை வரும்!"

"அய்யய்யே...! எங்க கிராமத்துக்கு வந்து எங்க ஆத்துல குளிக்கிறீங்க...! உங்களைச் சாதாரணமா விட்டுட்டா எங்க மானம் இல்ல கரையேறிடும்... இது என்னது சொல்லுங்க...!"

தென்னவன் அவர்கள் கையிலிருந்த பொட்டலத்தைப் பார்த்தான்.

"சொல்லுங்க!"

தென்னவனுக்குப் புரியவில்லை.

"தெரிஞ்சாச் சொல்ல மாட்டனா கண்ணுங்களா....! நீங்களே சொல்லுங்கப்பா! சீக்கிரம் என் வேலையைப் பாக்க விடுங்க!"

"ராத்திரியில ரொம்ப நேரம் கண் விழிக்கிறீங்க...! பகல்ல கடுமையா உழைக்கிறீங்க...! வெய்யில்ல அலையறீங்க...! இதனால உடம்பு உஷ்ணமா இருக்கும். தலையும் அசுத்தமா இருக்கும். பாரமா இருக்கும். யாரோ போட்டு அமுக்கிற மாதிரி இருக்கும். அதுக்கு இந்த மாவு நல்லது!"

"இது என்ன மாவு?"

"உஷ்! பேர் சொல்லக் கூடாத மாவு... ரகசியம்...!"

"இது மூலிகை!"

"இது பேரு?"

"இது பேரும் சொல்லக் கூடாது. அதே ரகசியம்... உங்களுக்கு இதோட விவரம் எதுக்கு? விஷயத்தைக் கேளுங்க..! இந்த ரெண்டையும் தலையில தேச்சுக் குளிங்க...! தலை பஞ்சு மாதிரி இலேசாவும்... உடம்புல இருக்கிற உஷ்ணம் தலைக்கு இறங்கிடும்...! ராத்திரி பாட்டுக் கட்டிப் பாடறதுக்குச் சுகமா இருக்கும்...! ம். பிடிங்க..."

"தேயுங்க!"

''குளிங்க...!''

''அப்புறம் பாருங்க....''

எல்லோரும் சேர்ந்து கத்தினர்.

தென்னவனுக்குப் புரிய ஆரம்பித்தது.

''இதுயார் ஐடியா? உங்களுதா...? இல்ல இரவல் வாங்கினதா? ''

''எங்களது கொஞ்சம், வாங்கினது கொஞ்சம்... மொத்தத்துல கொஞ்சம் கொஞ்சம். முதல்ல குளிச்சிட்டு வாங்க. அப்புறம் பேசலாம்...''

''சொல்லுங்கடா... இது எப்படி, யாரால, எதுக்கு எனக்கு இங்க வந்தது?'' தென்னவன் பேச்சில் 'மைக்வாடை' வீசியது.

''சொல்லக் கூடாதுன்னு உத்தரவு!'' அதே கோரஸ் குரல்.

''இப்ப நீங்க உடனே சொல்றீங்க... இது என் உத்தரவு!''

''தயவு செஞ்சு கேட்காதீங்க! உண்மையைச் சொல்லிட்டா அப்புறம் ராணியம்மா எங்களை நாட்டை விட்டே கடத்திடுவாங்க...! இது எங்க ஊரு பவளக் கொடி ஆமா...''

தென்னவனுக்கு இலேசாகப் பின்னணி புரிய ஆரம்பித்தது.

''சரி... நானே தெரிஞ்சுக்கறேன்... இத நீங்க உங்க சர்க்கார்கிட்டப் போயி சொல்லி வைங்க... போங்க...''

''நல்லாக் குளிங்க...! தண்ணிக்குப் பயந்து தரையிலயே கோலம் போட்டுக்கிட்டு இருக்கப் போறீங்க...!'' அவர்கள் சொல்லிக் கொண்டே ஓடினர். தென்னவன் சிரித்துக் கொண்டான்.

'சொல்லக் கூடாதுன்னு உத்தரவு!' இந்த வார்த்தை ஒரு பாடலின் பல்லவி போல அவனுக்கு ஓர் இதமான குரலில் கேட்டது.

தமிழ் முரசுவின் வீட்டு முன்னால் பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. உள்ளே கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. நாடகக்காரர்களுக்கு அவர் வீட்டில் இன்று மதிய விருந்து.

அவர் வீட்டில் கை நனைக்காத பெரியவர்களே கிடையாது. முக்கியமாய் வருகிறவர்களுக்குத் தம் வீட்டில் விருந்து கொடுப்பதை அவர் ஒரு சம்பிரதாயமாகவே வைத்திருந்தார்.

அவருக்கு உணவில் 'கைப் பக்குவம்' முக்கியம். சமையலின் போது அடிக்கடி வந்து பரிசோதனை செய்வார். மனைவி இருந்த போது அவரது போக்குப்படியே நடந்தது. ஒண்டிக் கட்டையான பிறகு நடக்கும் பெரிய விருந்து இது என்பதால் கவனமுடன் இருந்தார். சிட்டுவின் தலையில் பனங்காய் வைக்க அவர் விரும்பவில்லை. அவளைக் கூப்பிட்டு முன்பே சொல்லி





உங்கள் பிள்ளையை நோய்க்கிருமிகள் ஓயாமல் தாக்கிக் கொண்டே இருக்கின்றன.



நோய்க் கிருமிகளை வெற்றி கொள்ள உங்கள் பிள்ளையின் உடம்பில் போதுமான அளவு நோய் எதிர்ப்புச் சக்தி இருக்கிறதா?

உங்கள் பிள்ளையின் உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தால், அடிக்கடி சளி, இருமல், தொண்டை வலி, ஜுரம், பசியின்மை, வயிற்றுக் கோளாறு போன்ற தொல்லைகள் வரக் கூடும். இதனை உடனே கவனித்து, சரி செய்யாவிடில் பிள்ளையின் உடல் வளர்ச்சியும், மன வளர்ச்சியும் பாதிக்கப்படலாம். உங்கள் பிள்ளைக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை

விட்டார்.

''சிட்டம்மா...! நாடகக்காரவங்க நம்ம வீட்டுக்கு விருந்துக்கு வராங்க...! ஆளுங்க சமையல்வேலைசெய்வாங்க... நீ கூடமாடப் பாத்துக்க...! அங்கே இங்கே ஓடி உடம்பைக் கெடுத்துக்காதே...! புரியுதா?''

நாடகக்காரர்கள் வருகிறார்கள் என்பதை விட தென்னவன் வருகிறான் என்பதே அவளைக் கவ்விப் பிடித்துக் கொண்டிருந்தது.

தலைவாழை இலைகள் வெட்டப் பட்டன. முக்கியமான விசேஷங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள், வெள்ளி தம்ளர்கள் பரணிலிருந்து இறக்கப் பட்டன.

யார் யார் எங்கே உட்கார வேண்டும் என்பதை முடிவு செய்து வெளியே தமிழ் முரசு வந்த போது, நாடகக்காரர்களை அழைக்கப் போன வண்டிகள் வந்திருந்தன.

ராஜபார்ட் பெரிய கும்பிடு போட்டுக் கொண்டு இறங்கினார். கூடவே மற்றவர் களும் இறங்கினர்.

பளபளக்கும் பாவாடை தாவணியில் இருந்த சிட்டு, மின்னலென ஓடி ஜன்ன லருகே போய் நின்று கொண்டாள். அவளுக்கு இதயம் படபடத்துக் கொண்டே இருந்தது. தென்னவன் தென்படவே இல்லை. அவளுக்கு முன்னால் நின்று கொண்டிருந்த சிறுவர்களைச் சைகையால் கூப்பிட்டு, எங்கே என்பது போல் கேட் டாள். அவர்கள் 'தெரியாது' என்றனர்.

'அவசரத்துல விட்டுட்டு வந்துட்டாங் கள்ளா...! இல்ல அப்பா சரியா சொல்லி அனுப்பலையா?'

அப்பா ராஜபார்ட்டை மரியாதையுடன் அழைத்துக் கொண்டு உள்ளே போனார்.

''உங்க பாதம் எங்க வீட்ல பட்றதுக்கு நாங்க குடுத்து வச்சிருக்கணும்...! நாட கத்தையே சுவாசமாக்கிகிட்ட உங்களுக்கு, ஒருவேளை விருந்து கொடுக்கிற பாக்கியம் எனக்குக் கெடைச்சிருக்கு... இது நீங்க எனக்குக் குடுத்திருக்கிற பெருமை... வாங்க!'' எல்லோரையும் அழைத்துக் கொண்டு உள்ளே போனார்.

தென்னவன் கடைசி வண்டியிலிருந்து இறங்கினான். அதற்குள் எல்லோரும் உள்ளே போயிருந்தனர்.

சிறுவர்கள் தென்னவனைச் சூழ்ந்து கொண்டனர். உள்ளே போக வேகமாக ஓடி வந்த தாமரை தென்னவனைப் பார்த்து ஒதுங்கி நின்று கொண்டாள்.

''ம்...! போங்களேன்... வண்டியில பேசறது பத்தாதுன்னு மேடையிலயும் பேசிப் பாடிட்டீங்களே...! அது எப்படி இவ்வளவு ரசனையோட செய்யறீங்க! பொறப்புலயே சிலதுக்கு ஆண்டவன் போடற பிச்சை, பின்னால எப்பிடி செல்வாக்கக் குடுக்குது பாத்தீங்களா!''

தென்னவன் சிரித்தான்.

தாமரை வெட்கப்பட்டாள்.

'சொல்லக் கூடாதுன்னு உத்தரவு!'

இவளுக்குப் பொருத்திப் பார்த்தான்... சரியாக இல்லை. இவளாக இருக்காது. அவன் கண்களுக்குள் சிக்காத அந்த பாவாடை தாவணி பறந்து எங்கோ மறைந்தது. தென்னவனுக்கு ஏதோ பொறி தட்டியது போல் இருந்தது.

''தென்னவரே... வாங்க! ராஜபார்ட் அப்பா பக்கத்துல உட்காருங்க! ம்.. ஆரம்பிச்சிடலாமா...?'' சொல்லி விட்டுத் திரும்பினார் தமிழ்முரசு.

''ஏ... தாமரை... எதுவும் கிடைக்காம போயிடப் போவுதுன்னு பந்தியில முன்னாலயே உட்காந்துடாதே...! கூடமாட வேல செஞ்சிட்டு அப்புறம் உட்கார்ந்துக்க!''

விருந்து பிரமாதமாக ஆரம்பமாகியது.

நாடகக் குழுவினர் இலைகளில் 'தனி ஆட்சி' நடத்திக் கொண்டிருந்தனர்.

தென்னவன் மெல்லச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

சிட்டு அவன் இலைக்கு ஏதாவது வைத்துக் கொண்டே இருக்கச் சொல்லித் தூரத்திலிருந்து சிறுவர்களிடம் மௌனமாக ஆணைகள் பிறப்பித்துக் கொண்டிருந்தாள்.

தாமரைக்குச் சிட்டுவின் வீச்சில் ஏதோ சிக்கியது போலிருந்தது.

''அங்க மட்டும் என்னம்மா இது...! விட்டா அந்த ஆளை உன் பசிக்கும் சேத்துச் சாப்பிட வச்சிருவ போலருக்கே!''

''ஆமா... தாமரை!''

சிட்டு தன்னை மறந்து பேசியது தாமரைக்குப் பிடி கொடுத்தது போல் இருந்தது.

''சிட்டு... நாடோடி மாதிரி இவங்க... இவங்க மேல அதிக நாட்டம் வச்சிக்கக் கூடாது புரியுதா!''

''தாமரை! அவுங்களும் மனுஷாளு தானே... அவுங்களுக்கும் மனசு இருக்கு இல்ல....''

''யாருக்கு... அவங்களுக்கா...! அவருக்கா? அவுங்களுக்கு இப்ப வயிறு மட்டும்தான் வேலை செய்யுது... உனக்கு மனசு கெடந்து அடிச்சுக்குது! நேத்து நீ இந்த ஆளப்பத்தி விசாரிச்சப்பவே சந்தேகப் பட்டேன்... சிட்டு... இது 'அந்த' வயசுடி...! ஏமாந்தா வயசு உன்னைய தின்னு ஏப்பம் விட்டுடும்!''

தாமரையிடம் சிட்டு பேசத் தயாராக இல்லை. ''போடி... அவுங்க சாப்பிட்டு முடிச்சிட்டாங்க... கை கழுவத் தண்ணி மொண்டு கொடு! போ!''

தமிழ்முரசு 'விருந்தோம்பல்' அதிகாரத்தை முடித்து விட்ட திருப்தியில் இருந்தார். வெற்றிலை, பாக்கு தாம்பாளத் தட்டுடன் தரப்பட்டது. அவரவர்கள் எடுத்துப் போட்டனர். தென்னவன் எடுக்கப் போக, சிறுவர்கள் ''ம்... எடுக்காதீங்க.. வேணாம்!'' — என்று சைகை செய்தனர்.

தென்னவன் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான். தமிழ்முரசு அவனைப் போட்டுக் கொள்ளச் சொல்லி வற்புறுத்தினார். ''தென்னவா! பாத்தியா ஒவ்வொரு வெத்திலையும் எப்படி இருக்கு... இதுலயே பந்தி போட்டுப் பரிமாறலாங்கற மாதிரி இல்லே... இது நம்ம தோட்டத்து வெத்திலை...!

இங்கிதமாக, ''வேண்டாம்'' என்றான் தென்னவன். சிறுவர்கள் அவனையே முறைத்துக் கொண்டிருந்தனர்.

பல்குச்சி —

மாவு —

மூலிகை — வரிசையில் அடுத்து வரப் போகும் சிறப்புப் பொருள் என்னவாக இருக்கும் என்ற சிந்தனை வசத்தில் இருந்தான் தென்னவன்.

உள்ளே சிட்டு அழகாய் ஒரு பீடாவைச் செய்து முடித்தாள்.

அதில் ஒரு கிராம்புவைச் செருகினாள்.

சிறுவர்கள் சரியாய் நேரம் உணர்ந்து உள்ளே ஓடினர். பீடாவைத் தென்னவனுக்குத் தரச் சொல்லிக் கொடுத்தாள்.

பவ்வியமாக ஒரு புனிதமான பொருளைப் பெற்றுக் கொள்வது போல் அதனை வாங்கிக் கொண்டு அவர்கள் ஓடினர்.

ராஜபார்ட் தம் சகாக்களோடு கிளம்பிக் கொண்டிருந்தார். எல்லோரும் நன்றி சொல்லிக் கொண்டனர். ராஜபார்ட் இரவு நாடகத்திற்கு வரும்படி தமிழ் முரசுவுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

தென்னவன் வீட்டின் அமைப்பைப் பார்த்துக் கொண்டே வெளியே வந்த போது அவனைச் சிறுவர்கள் நிறுத்தினர்.

''இந்தாங்க... இதப் போட்டுக்குங்க. இது சாதாரண பீடா இல்லே... விசேஷமான பீடா.''

ஒரு பூவைப் போல அதை எடுத்து வாயில் போட்டு மென்றான். சிறுவர்கள் உதட்டில் 'சொல்லக் கூடாதுன்னு உத்தரவு' என்ற வார்த்தைகள் பதிவாகி இருந்தது போல் தென்னவனுக்குத் தெரிந்தது.

பீடா அவன் நாவு முழுதும் ருசியை ஏற்படுத்தி இருந்தது. அனுபவித்து மென்றபடியே வெளியில் வந்தவனை ஒரு கிழவியின் குரல் நிறுத்தியது.

''ராசா... நீ மகராசனா இருப்பே...! நேத்து கூத்துல உன் குரலைக் கேட்டு ரொம்ப சந்தோஷப்பட்டேன் ராசா... இந்த செவிட்டுக் கிழவிக்கும் உன் குரல் கேட்டுச்சி ராசா! வேஷப் பொருத்தம், குரல் கச்சிதம் என்னமா இருந்துச்சிப்பா...! அடுத்தவங்க கண்ணு உன் மேல பட்றக் கூடாது! உறவுக்காரங்க யாராவது இருந்தா சொல்லி திருஷ்டி சுத்திப் போடச் சொல்லு...!''

''எனக்கு யாரும் உறவுன்னு இல்ல பாட்டி... நான் ஒரு அனாதை...''

'தென்னவன்... தென்னவன்...' என்ற எதிரொலிகள் மறைந்து 'அனாதை' என்ற எதிரொலி சிட்டுவை ஆக்கிரமித்தது.

உடலில் ஓடிய நடுக்கத்தை அவளால் உடனே தடுத்து நிறுத்த முடியவில்லை...

(தொடரும்)



ஆயத்தமாகிவிட்டார் ஆனந்தமான நேரத்தை அனுபவித்திட.


அலுவலகத்தில் ஓயாத உழைப்பு, பதற்றம். ஆனால் இப்போதோ அது ஓடி ஒளிந்து விட்டது. குழந்தைகளோடு குழந்தையாய் அளவற்ற சக்தியுடன் விளையாடுகிறார்.

ஊட்டச் சத்துமிக்க ஒரு கோப்பை ஹார்லிக்ஸ் கொடுத்து நாள் முழுவதும் அவருக்கு வேண்டிய வலிமையும் ஆற்றலும் அளிக்கும் உங்களுக்கே நன்றி.



"ஹார்லிக்ஸில், வலிமைக்கும், ஆற்றலுக்கும், நல்ல உடல் ஆரோக்கியத்துக்கும் தேவையான- புரோட்டீன்ஸ், விட்டமின்ஸ், மினரல்ஸ், கார்போஹைட்ரேட்ஸ் —ஆகிய முக்கிய ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன.

அதுவே, நாள் முழுவதும் ஆரோக்கியம் தரும் ஹார்லிக்ஸின் மேன்மை."



சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

HTA 6224TAM

* கே. மகேஷ், சங்கராபுரம்.

? 'தி. மு. க. ஆட்சியைக் கலைத்தால் தமிழ் மக்கள் கொதித்து எழுவார்கள்' என்கிறாரே கலைஞர்?

! நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ்—அ. தி. மு. க. கூட்டணி தமிழ் நாட்டில் பெரும்பான்மை பெற்று, காங்கிரஸ், வட மாநிலங்களிலும் பெருமளவில் வென்று மத்தியிலே ஆட்சி அமைத்தால், ஒரு வேளை இங்கு ஆட்சிக் கலைப்பு பற்றிப் பிரதமராக வரும் ராஜீவ் யோசிக்கக்கூடும். அதுவரை இல்லை. கலைஞர், 'தேசிய முன்னணியே இங்கு வெற்றி பெறும்' என்ற நம்பிக்கையுடன் இருந்தால் இவ்வாறு பேச அவசியமில்லை. பேசியதுதான் பேசினார், 'கொதித்து எழுவார்கள்' என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், 'கொதித்து எழுந்து மீண்டும் வோட்டுப் பெட்டிகளை உதய சூரியன் சின்னத்தாலேயே நிரப்புவார்கள்' என்று ஜனநாயக உணர்வோடு பேசியிருக்கக் கூடாதா!

* பி. வி. சீனிவாசன், சென்னை — 28.

? சென்னை டிவிகாரர்கள் அடிக்கடி வாழப்பாடியை அல்லது அவரது புகைப் படத்தையேனும் காண்பிப்பதன் மர்மம் என்ன?

! தலைவர்கள் உருவான காலம் ஒன்று இருந்தது. இன்று தலைவர்கள் உருவாக்கப்படும் காலம்.

* அ. ராமச்சந்திரன், பெசண்ட் நகர்.

? 'நான் மெக்காவில் இருக்கிறேன்', 'நான் ஜெருசலத்தில் இருக்கிறேன்' என்ற காளிமுத்துவின் சமீபத்திய பேச்சு பற்றி?

! அரசியலிலிருந்து இறையுணர்வை ஒதுக்கி விடக் கூடாது என்று பெரியோர்கள் சொன்னது, அரசியல்வாதிகள் மதங்களை இழிவுபடுத்த வேண்டும் என்ற அர்த்தத்தில் அல்ல!

* மு. மதிவாணன், அரூர்.

? சினிமா தியேட்டர்கள் கடுமையாக ரெய்டு செய்யப்படுவதைப் பற்றி...?

! ரேஷன் கடைகள் திடீர் சோதனை, சத்துணவுக் கூடங்கள் திடீர் சோதனை, ஆஸ்பத்திரிகளுக்கு அமைச்சரின் திடீர் விஜயம், ஆம்னி பஸ்கள் திடீர் சோதனை வரிசையில் இதுவும் ஒன்று. தவறுகள் திருத்தப்பட வேண்டியது அவசியமே. எல்லாத் துறையினரிடமும் யோக்கியப் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்ற அச்சத்தை உருவாக்க இவை உதவும். ஆனால் இதெல்லாம் ஆரம்ப சூரத்தனமாக முடிந்து போய் விடக் கூடாது.

* யாஸிர் நேசன், பறங்கிப்பேட்டை.

? தமிழ் மொழியில் மீண்டும் எழுத்துச் சீர்திருத்தம் செய்ய விழையும் தினமணியின் செய்கை குறித்து?

! இதில் நான் கி. ஆ. பெ. விசுவநாதம் கட்சி, கடிகாரத்தைப் பின்னோக்கி ஓடச் செய்கிற காரியங்கள் எனக்கு ஒப்புதலில்லை. நாம் ஏற்கெனவே ரொம்ப ஸ்லோ. செய்ய வேண்டியன எவ்வளவோ இருக்க, இதிலெல்லாமா நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பது!

* ஜி. இந்திரா, திருச்சி.

? அரசியல்வாதிகளை ஆளுனர்களாக நியமிப்பதற்குப் பதில், எந்தக் கட்சியையும் சார்ந்திராத அறிவாளிகளை நியமித்தால், 'ஆளுனர்கள் மைய அரசின் ஏஜெண்டுகள்' என்ற எதிர்க் கட்சி குற்றச்சாட்டைத் தவிர்க்கலாமே?

! முன்னொரு காலத்தில் அரசியல்வாதிகள் ஆளுனராக நியமிக்கப்பட்டபோதிலும் அவர்கள் நடுநிலையாளர்களாக விளங்கி, தாங்கள் அறிவாளிகள் என்று நிரூபித்தார்கள். இன்று, கட்சி சார்பற்ற அறிவாளிகள் நியமிக்கப்பட்டால் கூட, தங்களை நியமித்த மத்திய அரசுக்கு விசுவாசம் காட்டி, தங்களை வெறும் அரசியல்வாதிகளாக நிரூபித்துக் கொள்கிறார்கள்!

* க. சரவணகுமார், தூத்துக்குடி.

? சென்னை வந்திருந்த ஜனாதிபதியை வரவேற்கக் காங்கிரஸ்காரர்களுக்குப் பாஸ் வழங்க தி. மு. க. அரசு மறுத்து விட்டதாமே?

* ஓய்ந்து விடவில்லை!





* மெக்காவில் இருக்கிறார்?

* ஆடம்பர நூற்றாண்டு!





* 'நறுக்'குட்டு!



* மர்மம் என்ன?

கலைஞர் ஆட்சி கலைக்கப் படுமானால்...?



* ஆட்சி கலைக்கப்பட்டால்...?

! இதற்குத்தான் சரியான, ஏற்கத்தக்க விளக்கத்தை தி. மு. க. அரசு வழங்கி விட்டதே! வாழப்பாடி, தமிழக அரசை மணிக்கொரு தடவை கொட்டிக் கொண்டேயிருந்தால் நாளிதழிலும் டீவியிலும் அச் செய்திகள் வந்து கொண்டேயிருக்கும்; தாம் பிரபலமாகி விடலாம் என்று எண்ணுகிறார் போலும். அவர் விமர்சனம் அர்த்தமுள்ளதாக இருந்தால்தான் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். அபத்தமான குற்றச்சாட்டுக்கள் அவரைப் பிரபலமான கோமாளியாக்கி விடும்!

*** எஸ். நளினி, கோவை – 1.**

? வரவர சென்னைத் தொலைக்காட்சி, பஞ்சாயத்து ராஜ் பற்றி பொன் மொழிகள் பாணியில் ஸ்லைட் போடுகிறதே இது எங்கு போய் முடியும்?

! "ராஜீவ் காந்திக்கே, இ. காங்கிரஸுக்கே, கைச் சின்னத்துக்கே உங்கள் வோட்டு!" என்று பகிரங்கமாக ஒலி – ஒளி பரப்ப வேண்டியதுதான் பாக்கி. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் அது கூட நடந்து விட்டால் வியப்பதற்கில்லை!

*** எஸ். எஸ். துரை, ஜேடர்பாளையம்.**

? வெற்றிகரமான 250 – வது நாளைத் தாண்டிய இந்தி படம் "கயாமத் சே கயாமத்தக்" பற்றி...?

! ஜூஹி சௌளாவின் நடிப்பு, இனிமையான இசை – இரண்டும், பழைய பழி வாங்கும் கதைதான் என்பதை மறந்து விடச் செய்கின்றன.

*** கே. ராஜகோபால், சென்னை – 92. ***

? மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழாவில் இல்லாத ஆடம்பரம், பந்தா நேரு நூற்றாண்டு விழா ஆரம்பத்திலேயே காணப்படுகிறதே?

! மகாத்மாவின் பேரன் பிரதமராக இருக்கவில்லையே!

*** தமிழ் எழிலன், காஞ்சிபுரம்.**

? சட்டசபைத் தேர்தலுக்குப் பிறகு எம். எஸ். உதயமூர்த்தி மௌனமாகி விட்டாரே?

! தமது இயக்கத்தின் கூட்டத்தைச் சமீபத்தில்தான் சிறப்பாக நடத்தியிருக்கிறார். விவசாய விஞ்ஞான மேதை எம். எஸ். சுவாமிநாதன், எக்ஸ்பிரஸ் குரூப் குருமூர்த்தி முதலியோர் கலந்து கொண்டனர். இயக்கத்தின் பணிகளை விவரிக்கும் ஒரு சஞ்சிகை இப்போது வெளியிடப் பெறுகிறது. உதயமூர்த்தி ஓய்ந்து போய் விடவில்லை.

*** ஜி. என். சரவணன், பழனி.**

? மோதிரக் கையால் குட்டுப்பட்ட அனுபவம் உண்டா?

! ஓ! ஒரு சமயம் ராஜாஜி பற்றிய ஒரு கவிதை கல்கியில் பிரசுரமாக, அதில் 'மது விலக்கை அமல் செய்தவர்' என்பதற்குப் பதில், 'மது விலக்கை ரத்து செய்தவர்' என்று கவிஞர் பெருமகனார் எழுதி விட, அதைக் கவனித்துத் திருத்தாமல் நான் விட்டு விட, அது ராஜாஜியின் கழுகுக் கண்களுக்குத் தப்பாமல் சிக்கி விட... நறுக்! அப்பா! இப்போது நினைத்தால் கூட வலிக்கிறது!

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

கே. ராஜகோபால்,
14, வேங்கடேச நகர்,
விருகம்பாக்கம்,
சென்னை – 92.

அது வேறு ஜாதி

புனிதன்

இங்கு வந்தது மீனாவின் கணவன் சோமுவுக்குப் பிடிக்கவில்லை. "இதோ பார், மீனா, நான் காலை எட்டு மணிக்குப் போறேன். இருட்டினதுக்கப்புறம் வருவேன். குழந்தையோட நீ தனியா இருக்கணும். இந்த ஏரியா ரௌடி ஏரியா. வேணாம்," என்று குறுக்கே நின்றான்.

ஆனால் மீனா பிடிவாதமாய் இந்த வீட்டைத் தேர்ந்தெடுத்தாள். ஒரு ஹால், தனி ரூம், சமையல் கட்டு. ஐந்நூறுதான் வாடகை. எங்கே கிடைக்கும்? குடித்தனக்காரர்களும் டீஸண்ட்டானவர்கள். பாங்க்காரம்மாள், மளிகைக் கடைக்காரம்மாள் அவர்கள் பேச்சுத்தான் ஒரு மாதிரி மெட்ராஸ் பாஷை. ஆனால் தங்கமான குணம். ரயில்வே கிளார்க் சம்சாரம் — கொஞ்சம் ஸ்டைல். வெளியாரைப் பற்றி என்ன? நடந்து கொள்ளும் விதத்தில் இருக்கிறது.

ஆயிற்று நாலு நாள். என்ன குடி முழுகிப் போச்சு?

மூன்று வயது ராஜியின் அட்டகாசம் தான் பிரச்னை. வேலைக்காரி தோதாய்க் கிடைக்கவில்லை.

என்ன அது திமுர் அலறல்! — மொட்டை மாடியில் துணி காயப் போட்டுக் கொண்டிருந்த மீனா பதைத்தாள்.

மெயின் ரோடுப் பக்கம் தடதடவென்று ஏழெட்டுப் பேர் —

இந்தண்டை இவர்கள் வீட்டுச் சந்துப் பக்கம் கூட நாலைந்து பேர்.

காலுக்கடியில் பள்ளம் பறித்தாற்போல் ஒரு திகில் குமிழிட்டது.

மீனாவின் முகத்தில் அரும்பிய வியர்வையை முந்தானை வாங்கிக் கொண்டது.

மளிகைக் கடைக்காரம்மாள் மீனாவைத் தட்டிக் கொடுத்தாள். "நீ புச்சில்லே! போவப் போவச் சரியாப் பூடும்."

"என்னம்மா ஆச்சு?"

"என்னன்னுமோ ஆவும். கண்டுக்காதே!"

கண்டுக்காமல் இருக்க முடியவில்லை. தடதடவென்று கதவை உடைக்கும் சப்தம். வெளியே இருப்பவர்களுக்கும் மாடிக்குமாய் வாக்குவாதம் துல்லியமாய் விழுந்தது காதில்.

"மருவாதியா அவனை (ஓர் அசிங்கமான வார்த்தை) வெளியே வுடு. அவனை அறக்காமே உட மாட்டேன்." அந்தக் குரலில் ஆங்காரம், வெறி.

"இந்தா பாருப்பா, நாலு குடித்தனக்காருங்க இருக்கிறோம். எல்லாம் பொம்பளைங்கதான் இப்போ. வாசல்லேயே இருந்தோம். ஒருத்தரும் வரலை." — பாங்க்காரம்மாளின் சமாதானப் பேச்சு.

"ஆங்... நீ சொன்னா சரியாப் போச்சா? பார்த்துக்கினே இருந்தேனே! என் கண்ணு நொள்ளையா? உனக்கே தெரியாமே எங்கினா பூந்துகினு இருப்பா. தொறந்து வுடு. இல்லேன்னா போய்க்கினே கீறேன்."

கித்தேரியின் தோஸ்த் ஒருத்தன் தூரத்திலிருந்து எச்சரித்தான். "அடேய் சோமாரி... ஜீப் வருதுடா..."

மீனாவின் மனசு இறக்கை அடிப்பதை நிறுத்திக் கொண்டது.

ராஜி! அந்த சொள்ளு வாய் நோண்டி நோண்டிக் கேட்குமே. இத்தனை கூச்சல் சத்தம் கலாட்டா.... எப்படித் தூங்கிக் கொண்டிருக்கிறது?

அவள் திரும்பினாள். "ரா...."

திமுர் திகில் — மகிழ்ச்சி இரண்டுக்குமே ஒரே உணர்வுதான். தொண்டை அடைத்தது.

ராஜி! நகமும் சதையும் குறுஞ்சிரிப்புமாய் ராஜி. ஹால் கதவை ஒட்டினாற் போல். ஒரு பெண்ணின் தீர்க்கமான அணைப்புக்குள்.

அந்தப் பெண்ணை அளந்தாள். மாநிறம். பத்தொன்பது வயது இருக்கும். உருட்டுத் தேகம். ஆரோக்கியமான கன்னம். சற்றுச் சுருட்டை முடி. ஜடை போட்டுச் செருகிக் கொண்டிருந்தாள். மலிவான, ஆனால் பளீர் வாயில் சேலை. நெற்றியில் அகலமான செந்தூரம். கழுத்தில் மணிச்சரம். சதைப்பிடிப்பான ராஜியின் கையில் அது விளையாடியது.

"நீ... நீ யாரும்மா?"

"நீதான் புச்சா வந்திருக்கிறே. மளிகைக் காரம்மாவுக்கு என்னியத் தெரியும்."

"நீ இங்கே இருக்கிறது?"

"ஐயோ, அது தெரிஞ்சிருந்தா கதையே மாறிப் போயிருக்காது?"

எத்தனை பெரிய கண்கள். பய நினைப்பில் மருளும் போது பாவமாய் இருக்கிறது.

"அக்கா, இந்த மணி எனக்குத்தானே?" ராஜி கேட்டது, மணிச்சரத்தை ஆசையாய்த் தடவி.

"உனக்கில்லாததா? போட்டுக்கடி ராஜாத்தி!" விருட்டென்று மணி மாலையைக் கழற்றினாள். ராஜி கழுத்தில் போட்டாள். "நம்ப பொண்ணாம்மா? நான் வந்தப்பவே முழிச்சிக்கிச்சு. சொன்னேன். அழாமே இருந்தா, இந்த மணியைத் தர்றேன்னு. அதைக் கவனம் வச்சினு கேக்குது. பாரேன், கில்லாடி பொண்ணும்மா."

''ஏய் ராஜி. அதைக் கழற்றி எறி. தொறந்த வீட்டிலே எதுவோ நுழையற மாதிரி...''

''கூச்சப்படாதே. சொல்லும்மா. நான் நாயிதான். ஆனா உசிரு இருக்குதே! அறக்க வந்துச்சே. அதான் பொறம்போக்கு. யாரோ கொல்த்துக்காரன் கன்னாபின்னான்னு சொன்னான். இது இன்னா ஏதுன்னு கேக்கலை. அறக்கறதுக்கு வந்துச்சு. கோவத்துலே அறத்துடும். அப்பாலே அய்யாண்ணா வருமா அம்மான்னா வருமா? உசிரு போனாப் போனதுதானே? அதான் இப்படி ஒண்டிக்கினேன். முன் கோவம். ஆறினா சரியாப் பூடும்... அது வரைக்கும்...''

''அந்தக் கதையெல்லாம் வேணாம். இது கௌரவமானவங்க இருக்கிற இடம். நீ முதல்லே வெளியே போ.''

ராஜியை இறக்கி விட்டாள். கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியேறினாள்.

மீனாவுக்கு மனசை என்னமோ பண்ணிற்று.

''படித்துப் படித்துச் சொன்னேன். கேட்டால்தானே?'' படுக்கையில் வெடித்தான் சோமு. ''அந்தக் கித்தேரி பெரிய ரௌடியாம். நாம்தான் மறைச்சு வச்சோம்னு வந்து ரகளை பண்ணினா...''

''அவனைத்தான் போலீஸ்லே பிடிச்சிட்டுப் போயிட்டாங்களாமே?''

''அதையும் விசாரிச்சுட்டியா?''

''என்னவோ கோவத்திலே குதிச்சிருக்கான்னு தோணுது...''

''தோணும் தோணும். இதெல்லாம் சொன்னா உனக்குப் புரியாது. பட்டாத் தான் தெரியும்.''

அவன் திரும்பிப் படுத்துக் கொண்டு விட்டான்.

இடுப்பை விட்டு இறங்க மாட்டேன் என்றது ராஜி. நடக்கிற வயசில்லைதான்.

இடுப்பு புண்ணாய் நோகிறது. ''கொஞ்சம் இறங்கி நில்லு ராஜி. அம்மா காய் வாங்கிட்டுத் தூக்கிக்கறேன்.''

''ஊம்... மாட்டேன்,'' ராஜி சிணுங்கியது.

''எமன்! பீடை!''

''ஐயே, கொயந்தையை ஏம்மா திட்டறே? நீ வாடா கண்ணு.'' பின்னாலிருந்து குரல் கேட்டது.



திரும்பினாள். பூங்கா. ராஜி அவளிடம் தாவிப் போனாள்.

மீனா இடுப்பைத் தடவிக் கொண்டாள். இதம். "வேண்டாம், விடு உனக்கு ஏன் கஷ்டம்?" என்றாள் ஒப்புக்கு.

"இது கஷ்டமா?" ராஜியின் கன்னத்தோடு கன்னம் இழைத்தாள் பூங்கா.

"வா ராஜி. போகலாம்." — கறிகாய் வாங்கியதும் கூப்பிட்டாள்.

"போ. நான் அக்காகிட்டத்தான் இருப்பேன்."

"என் தங்கம்!" பூங்கா முத்தமிட்டாள். "நான்தான் தூக்கியாறேனே ஊடு வரைக்கும். நானொண்ணும் உம் பொண்ணைக் கடிச்சு முழுங்கிட மாட்டேன்."

பூங்கா கூடவே வந்தாள். "ஆமாம், அந்தக் கித்தேரியை உள்ளே தள்ளிட்டாங்களாமே!"

"மூணு மாசம் திட்டிட்டாங்க. என் ரொணம் உடுமா? ஒணும் அதுக்கு. ரோடிலே கல்ட்டா பண்ணா தாணா சொம்மாயிருக்குமா? போவட்டும். ஜெயில் களி துண்ணட்டும். ஏம்மா, அதான் எங்கம்மாளைக் காப்பாத்தணுமா? கோயில் மாடு கணக்கா நானில்லே? என்னாலே எங்கம்மாவுக்குச் சோறு போட முடியாது?"

'அந்த ஜாதியே வேறே. உனக்குப் புரியாது.' மீனாவுக்கு என்னமோ புரிகிற மாதிரி இருந்தது.

வீடு வந்தது.

"வாக்கா உள்ளே," ராஜி பூங்காவின் கையைப் பிடித்து இழுத்தாள்.

"அம்மா கோச்சுக்கும்."

மீனா கோபித்துக் கொள்ளவில்லை. அவள் வீட்டுக்குள் எட்டிப் பார்த்தாள்.

பற்றுப் பாத்திரங்கள் பரப்பிக் கிடந்தன. ராஜி கிழித்துப் போட்ட காகிதம். குப்பை, விளையாட்டுச் சாமான்கள் இறைந்து கிடந்தன. துவைக்க வேண்டிய துணி மூலையில்.

"வெய்யிலேறிப் போச்சு. இன்னுமா உங்க வேலைக்காரி வரலை? ஏம்மா?" பூங்கா நொடித்தாள்.

"வேலைக்காரி! ஆமா... பார்க்கணும்."

"நீயா இத்தினியும் செய்யறே? பாவமே!" மூலையில் சாத்தியிருந்த பூந்துடைப்பத்தை எடுத்தாள். அடி தட்டிப் படியப் போட்டுத் துப்புரவு செய்தாள்.

"சோப்புக் கட்டி போடும்மா."

"எதுக்கு? வேணாம்..."

"அட, நீ வேலைக்கு வச்சுக்காட்டாப் போவுது. என்னாலே இதைப் பார்த்தாப்பல சொம்மா போவ முடியாது. ராஜிம்மா... நீ கொண்டா துணி சோப்பு."

ராஜிக்குக் கிரீடம் வைத்த மாதிரி ஆகி விட்டது. அலமாரியில் எம்பி ஒரு நீலச் சோப்பு கொண்டு வந்து போட்டது.

"பத்தெல்லாம் இப்படியே இருக்கட்டும். துணி ஊறத்தாவலை! குப்பிப் போட்டுட்டு வர்றேன். வந்து தோய்க்கறேன்." சிட்டாய்ப் பறந்தாள். அடுப்பு மூட்டுவதற்குள் திரும்பி வந்தாள். சரக் சரக்கென்று என்ன வேகம்! பாத்திரங்கள் பளிச்சிட்டன. அவள் துணி துவைத்து அலசும் லாகவம். டினோபால் வெண்மை. பிளாஸ்டிக் பக்கெட்டில் சுண்டப் பிழிந்த துணிகள். "கிளிப்பைத் தூக்கிப் போடும்மா." போட்டாள். மாடிக்கு ஓட்டம். பம்பரம்தான்.

என்னமோ ஒரு கனவுலகத்துச் சுகானுபவம் மாதிரி இருந்தது மீனாவுக்கு.

"தங்கமான பொண்ணு. வீட்டு வேலை நறுவிசாய்ப் பண்ணும்." மனிகைக்காரம்மாள் சர்டிபிகேட் வேறே.

பூங்கா தினமும் வேலைக்கு வந்து போனாள்.

வீட்டுப்பாங்கான நல்ல வேலைக்காரி கிடைத்து விட்டாள். அவள் யார் எவர் என்று கணவன் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. சோமுவும் கேட்டதில்லை.

பூங்கா வேலைக்குச் சேர்ந்து அது மூன்றாவது மாதம்.

அன்று அவள் வருவதற்குக் கொஞ்சம் தாமதமாயிற்று.

"யம்மோவ்!"

மீனா நிமிர்ந்து பார்த்தாள். அசந்து போய் விட்டாள். "என்னடி இன்னிக்கு அலங்காரமெல்லாம் அமர்க்களமா இருக்கு? பட்டுப் புடைவை..."

"சேட்டுக்கடை ஏலத்திலே எடுத்தேன். நல்லா இல்லை?"

தலை நிறையப் பூ. புதிதாய்க் காதுத் தோடு, மூக்குத்தி, கில்ட்டோ, இரவலோ! என்ன கெட்டுப் போச்சு? "என்னடி விசேஷம்? மாப்பிள்ளை பார்க்க வருதா?"

"போங்கம்மா." இதே மாதிரி சந்தர்ப்பத்தில் அவளும் இப்படித்தான் குங்குமமாய்ச் சிவந்தாள். "மாப்பிள்ளைதான். எல்லாம் உங்களுக்குத் தெரிஞ்சதுதான்."

மனசுக்குள் சுருக்கென்று ஒரு நெருடல். "யாரைச் சொல்றே?"

"அறக்க வந்துச்சே. அதுதான். நடத்தைக்காகப் பத்து நா முன்னாடியே உடறாங்களாம். எங்க பேட்டை வாத்தியாரு வந்து சொன்னாரு."

"உன்னைக் கொலையே பண்ண வந்தான். அவன் வர்றான்னா இப்படி..."

"அதுக்கு எம் மேலே அத்தினி ஆசைம்மா. போம்மா நீ..." அவள் உடம்பெல்லாம் வெட்கமாயிற்று. "யம்மா, நான் வேலையை முடிச்சிகினு... நேரே போறேன். எந்நேரத்துக்கு உடுவாங்களோ! சாய்ந்திரம் வரலேம்மா, குட்டி தாங்குதா?"


"நான் பார்த்துக்கறேன். நீ போ."

மீனா உள்ளே திரும்பினாள். சோமு இன்னும் ஆபீசுக்குக் கிளம்பவில்லை. அவன் முகத்தைப் பார்த்ததும் திக்கென்று ஆகி விட்டது. எரிப்பது போல் ஒரு முறைப்பு.

"ஒரு தடவை பட்டது போதலை உனக்கு. இல்லை? அவ்வளவு சொல்லியும் மறுபடியும்...."

தொட்டிலில் இருக்கும் ராஜியின்

எழுதலாமே எங்களுக்கு!...



★ வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் உடையவரா நீங்கள்?

★ ஆங்கில மொழியில் போதிய புலமையின்மையினால் உங்களது முன்னேற்றம் தடைபடுகிறதா?

★ மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதை ஓரளவு புரிந்து கொண்டாலும், அவர்களிடம் ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசிவிடுவோமோ என்று தயக்கமாக இருக்கிறதா?

★ ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற உங்களது விருப்பம் நிறைவேற பல வழிகளில் முயன்றும், பல புத்தகங்களைப் படித்தும் நீங்கள் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படவில்லையா?

★ இக்குறைகளை யாரிடம் கூறுவது, எப்படித் தீர்வு காண்பது என்பது பற்றி சிந்தித்து வருகிறீர்கள் அல்லவா?

கவலையை விடுங்கள்.

தயக்கமின்றி ஆங்கிலத்தில் சரளமாக உரையாட வேண்டும், இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற வேண்டும் என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் நிறைவேற ஓர் எளிய பயிற்சி முறையினை தமிழகத்தின் தலைசிறந்த கல்விநிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் அளித்து வருகிறார்கள்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் முறையில் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம். "நேர்முகப் பயிற்சியும் உண்டு".

இன்றே ஒரு போஸ்ட் கார்டில் உங்களது விருப்பத்தை எழுதலாமே எங்களுக்கு.

நீங்கள் எழுத வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்
த. பெ. எண் 4986,
9, மேட்லி ரோடு, தி.நகர்,
சென்னை 600 017.

கன்னத்தைத் தொட்டு அவன் கொஞ்சவில்லை. வாசலில் நிற்கும் அவளைப் பார்த்துப் புன்னகை செய்து பள்ளிக்கூடப் பிள்ளை மாதிரி டாட்டா காட்டவில்லை. ஸ்கூட்டரை ஓங்கி உதைத்தான்.

ஆறரை மணிக்கெல்லாம் சோமு திரும்பி விடுவான். மணி ஏழாயிற்று. ஏழரை அடித்தது. இன்னும் காணோம்.

இவரை ஏன் இன்னும் காணோம்...? ஆத்திரமான மனநிலையில் வாகனம் ஓட்டக் கூடாது என்று சொல்வார்களே!

''மீனா... மீனா... மீனா...''

பாங்க்காரம்மாளின் அலறல். பனிக் காற்று நெருப்பாய் வீசுவது போல் ஒரு தவிப்பு.

''இங்கே இருக்கேம்மா....''

மீனாவிடமிருந்து ராஜியை வாங்கிக் கொண்டாள் அந்த அம்மாள். ஏதோ ஒரு கலவரத்தின் திகைப்பு.

''பாங்கில் அவருக்கு போன் வந்ததாம். ஆட்டோவில் வந்திருக்கிறார். போ. துணைக்கு அவரும் வருவார்...''

''அம்மா... அவருக்கு ஒண்ணும்...'' தொண்டை அடைத்தது மீனாவுக்கு. கண்ணீர் கொப்புளித்தது.

''பயப்படும்படியா ஒண்ணும் இல்லே. வாம்மா... போயிட்டே பேசலாம்.'' அந்தச் சந்தனப் பொட்டுக்கார முன் வழுக்கை மனிதர் — பாங்க்காரர் — கனிவோடு அழைத்தபடி முன்னே நடந்தார்.

இழுத்துப் போர்த்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக ஆட்டோவில் ஏறிக் கொண்டாள் மீனா.

''எங்கே போறோம்? என்ன ஆச்சு?''

''அதான் நேரே போறோமே. ஜி. ஹெச்லேருந்து போன் வந்தது. நல்ல வேளை, அக்கவுண்ட் டாலி ஆகலே. பாங்க்கிலே இருந்தேன். விஷயம் என்னன்னு டீடெய்லாக் கேட்க முடியலே. உயிருக்கு ஆபத்தில்லையாம். பயப்படத் தேவையில்லேன்னாங்க.''

கடவுளே! அவருக்கு ஒன்றும் நேர்ந்திருக்கக் கூடாது.

சோமுவுக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை.

வயிற்றிலே பெரிய பாண்டேஜ். பின்னால் போலீஸ் காவல் இருந்தது. அதிகாரி அவளைக் குடைந்தார்.

அண்ணாசாலையிலிருந்து சென்ட்ரல் வழியேதான் அவன் ரூட். வழியில் பக்கிங்ஹாம் பாலத்து மேட்டில் ஏறும்போது கல்லறைக்குப் பக்கத்தில் ஸ்கூட்டர் ரிப்பேராகியிருக்கிறது. ஓரமாய் நகர்த்தி வைத்து ரிப்பேர் பார்த்திருக்கிறான்.

யார் எவர் என்று தெரியவில்லை. திடீரென்று ஒருவன் பாய்ந்து வயிற்றில் கீறி விட்டான். அலறினான் சோமு. பல்லவன் நின்றது. கல்லறைக்குள் இறங்கி ஓடி விட்டான் கேடி. பிடிக்க முடியவில்லை. பக்கத்தில் ஜி.ஹெச். இருந்ததோ, உயிர் பிழைத்ததோ!

மெல்லக் கண்ணைத் திறந்தான் சோமு.

அவன் அதிகாரிகளைப் பார்த்தான். பார்வை கெஞ்சிற்று. விலகிக் கொண்டார்கள்.

''பட்டாத்தான் தெரியும்னு சொன்னேன். பட்டுட்டேன். இனிமேயாவது தெரிஞ்சுக்குவியா?''

''நினைச்சேன். அப்போ அவன்தான்...''

''ம்... போதும், வாயைத் திறக்காதே. அது வேற ஜாதி. நாம ஒதுங்கியிருக்கறதுதான் நல்லது.''

''இது வடிகட்டின கோழைத்தனங்க. ரௌடித்தனத்துக்கு இடம் கொடுத்து ஒதுங்கி ஒதுங்கிப் போனா அழியறது நாம மாத்திரம் இல்லை, அவங்களே கூடத்தான். அவங்களும் மனுஷங்கதாங்க. வேற ஜாதி வேற ஜாதின்னு சொல்றீங்களே, அத்தனையுமா ரௌடிங்க? அந்த ஜாதியிலே பூங்கா மாதிரி அமிர்தமும் இருக்கு. கித்தேரி மாதிரி விஷமும் இருக்கு. பாற்கடலைக் கடைஞ்சப்போ ரெண்டும்தானே வந்தது? விஷம்னு ஒதுக்கியிருந்தா, இன்னிக்கு நாம்ப கும்பிட தெய்வங்களே இல்லாமப் போயிருக்கும்! விஷத்தை ஒதுக்க ஒதுக்கத்தான் அமிர்தம் இருக்கிறதே தெரியும். பயந்து பயந்து அதை வளர விட்டுட்டோம்னா அமிர்தமும் விஷமாயிடும். என்னங்க, நான் சொல்றது புரியுதா?''

சோமுவின் முகத்தில் பிரமிப்பு. ஒரு லேசான புன்னகைக் கீற்று.

''இன்ஸ்பெக்டர்!'' தீர்மானமாக அழைத்தாள் மீனா.

அடுத்த இதழில்......

- அழிப்பதற்கு ஓர் ஆயுதம்!
  — அக்னி ஏவுகணை பற்றிய கட்டுரை
- "தலைவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டது ஏன்?"
  — மூப்பனார் சிறப்புப் பேட்டி



டி. வி. வீடியோ பக்கங்கள்:

நோஞ்சான் பட்டியில் பஞ்சாயத்துராஜ் விழா!



குந்திதேவி காலத்திலேயே...

○○ மகாபாரதத் தொடர். என் பையன் வேலேந்திரன் பார்த்துக் கொண்டிருந்தான். என் அம்மா இட்டிக் கொண்டே அரிசியில் கல் பார்த்துக் கொண்டு டி.வி.யும் பார்த்துக் கொண்டிருந்தார். பாண்டவர்கள் அடைக்கலம் புகுந்த வீட்டில் குந்திதேவி முறத்தில் அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருக்கும் காட்சி. அதைப் பார்த்து என் பையன் கூறினான். "ஆட்சி நீதியும், தர்மமும் நிரம்பிய அந்தக் காலத்திலேயே அரிசியில் கல்லைக் கலந்துதான் விற்றிருக்கான்கள். பார், குந்திதேவியே கல் பொறுக்குகிறார். இந்தக் காலத்தில் இதற்குப் போய்த் திட்டாதே. குந்திதேவி காலத்தில் அரிசியில் கல் என்றால் இப்போது கல்லில் அரிசி பொறுக்க வேண்டும். அவ்வளவுதானே வித்தியாசம்" என்றான். என் அம்மா குபுக்கெனச் சிரித்துப் பேரனுக்குத் திருஷ்டி கழித்தாள்!

— கே. வி. எஸ். சுந்தரம்,
திருச்சிராப்பள்ளி — 14.

ராஜீவாச்சாரியின் இசைப் பேருரை

○○ டி.வி. நிகழ்ச்சி நிரல் சீக்கிரமே கீழ்க் கண்டவாறு அமைந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை!

கண்மணிப் பூங்கா: "பஞ்சாயத்து ராஜும் பால நாகம்மாவும்!"

காண்போம் கற்போம்: "பள்ளி மாணவனுக்கு பஞ்சாயத்து ராஜ் கைகொடுக்கும்!"

வயலும் வாழ்வும்: "பலா செழிக்கப் பஞ்சாயத்து..." மற்றும் "நோஞ்சான் பட்டியில் பஞ்சாயத்து ராஜ் விழா!"

பட்டி மன்றம்: "திருக்குறளில் பஞ்சாயத்து; திருக்குரானில் பஞ்சாயத்து...

— எது ஏற்றமுடையது?"

நாடகம்: "பாட்டியும் பஞ்சாயத்து ராஜும்";

இசைப் பேருரை: "பஞ்சாயத்தோபாக்கியானம்"

நிகழ்த்துபவர்: ராஜீவாச்சாரியார்.

— ஆர். சங்கர நரசிம்மன்,
சென்னை — 34.


மத்தியானம் எப்படி?

○○ ஈரோட்டில் ஒரு திருமணம். அதன் வீடியோ கவரேஜ் என் பொறுப்பு. சிற்றுண்டி வேளை. பந்தியில் அமர்ந்திருந்தவர்களை வீடியோவில் படமெடுத்துக் கொண்டிருந்தேன். ஒரே அமைதி. "ஏதாவது பேசுங்க சார். அப்பத்தான் இயற்கையா இருக்கும்" என்றேன். சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருவர், பக்கத்திலிருந்தவரிடம் "ஏம்பா, மத்தியானம் சாப்பாடு உண்டா? இல்லைன்னா, உப்புமாவையும், இட்லியையும் நல்லா ஒரு புடி புடிச்சிடலாம் பாரு" என்றார். பந்தியே சிரிப்பலையால் அதிர்ந்தது.

— ஐ. ல. அரவிந்தன், சேலம் — 9.

"கல்யாணத்துக்கு என்ன அவசரம்....?"

○○ சவுதி அரேபியா சென்று ஐந்தாறு வருடங்களுக்குப் பிறகு, திரும்பியிருந்தார் என் நண்பர். அவர் எங்கள் திருமணத்திற்கு வராததால் எங்கள் திருமண நிகழ்ச்சியை வீடியோவில் போட்டுக் காட்டினோம். இடையில் அவர், என் நான்கு வயது மகன் சாமிநாதனிடம், "அப்பா கல்யாணத்தில் உன்னைக் காணவே இல்லையே, அழைச்சிட்டுப் போகலியா?" என்று கேட்டு அவன் வாயைக் கிளறினார். அதற்கான காரணத்தை அவன் என்னிடம் கேட்க, நான், "அப்ப நீ பிறக்கவே இல்லை கண்ணா!" என்றேன். உடனே அவன், "நான் பிறந்த பிறகு நீ கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே; அவ்வளவு என்ன அவசரம்?" என்று சட்டெனக் கேட்டு எங்கள் அனைவரையுமே சிரிப்பில்



ஆழ்த்தி விட்டான்.

— சீர்காழி ஸ்ரீராம், தென்பாதி.

ஓடினார், ஓடினார், காளிமுத்து ஓடினார்!

○○ டெக் வாடகைக்கு எடுத்துப் பராசக்தி படம் பார்த்தோம். கலைஞர் வசனம் மிகவும் ஆழமாக மனத்தில் பதிந்திருந்தது. படம் முடிந்தவுடன் பேச்சு பல திசையில் திரும்பிக் கடைசியில் ஜெயலலிதா அ.தி.மு.க. வில் காளிமுத்து சேர்ந்தது பற்றித் தொடர்ந்தது. ''அந்த அம்மாவைக் கண்டபடி திட்டி விட்டுக் கடைசியில் அவரையே தலைவியாக ஏற்றுக் கொண்டு விட்டாரே'' என்றேன். உடனே என் நண்பன் ராமு சற்று முன் பார்த்த பராசக்தி படப் பாணியில் ''அவர் என்ன செய்வார்? தேர்தல் தோல்வி அவரை மிரட்டியது. காளிமுத்து ஓடினார்; பணக் கஷ்டம் பயமுறுத்தியது மீண்டும் ஓடினார்; ராபின் மெயின் வழக்கு ராத்தூக்கமில்லாமல் செய்தது. ஓடினார் ஓடினார் போயஸ் கார்டன் வீட்டு வரவேற்பறைக்கே ஓடினார். அந்த ஓட்டத்தைத் தடுத்திருக்க வேண்டும். வாட்டத்தைப் போக்கியிருக்க வேண்டும்! அன்று வோட்டளித்த வாக்காளர்கள் செய்தார்களா? வாழ விட்டார்களா காளிமுத்துவை?'' என்று கலைஞர் பாணியில் வசனம் பேச, வீடே கலகலத்து விட்டது!

— டி. எஸ். கண்ணன், திருப்பரங்குன்றம்

லோடு கேட்ட இராமன்

○○ ஒரு ஞாயிறு அன்று திருவையாற்றில் எனது நண்பர் வீட்டில் 'ராமாயணம்' தொடர் பார்த்துக் கொண்டிருந்தோம். ராமன் அனுமனிடம் திடீரென ''இன்னைக்கு எத்தனை லோடு?'' என தமிழில் கேட்டார்! யாவரும் திகைக்க, ''திருவையாறு நாலு, திருப்பழனம் ரெண்டு, கண்டியூர் இரண்டு, திருக்காட்டுப்பள்ளி பதினொன்று'' என அனுமன் பதில் கூறினார்! பின்னர் ''குருங்குளம் காலிங் அய்யம்பேட்டை'' என வார்த்தைகள் ஒலித்தன. அப்போதுதான் எனக்கும் புரிந்தது! சர்க்கரை ஆலைக்குக் கொடுக்கப்படும் தினசரி கரும்பு லோடு விபரம் இது! அவர் வீடு சர்க்கரை ஆலையின் திருவையாறு பிரிவு அலுவலகத்தின் அருகே அமைந்திருந்ததினால் ஒயர்லெஸ் மூலம் கொடுக்கப்பட்ட செய்தி — டி.வி.யில் கேட்டிருக்கிறது. ஆண்டெனாவை சற்றுத் திருப்பியபின் இராமன் லோடு கேட்பதை நிறுத்திக் கொண்டார்!

— ஜி. பொதியப்பன், குருங்குளம்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: இ. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.


"எனக்குப் பிடித்த
சக-நடிகரா?
ஸின்த்தால்!
மூன்று ஷிஃப்ட்களில்
நடித்த பிறகும்
அது என்னை
புத்துணர்ச்சியுடனும்
எழிலுடனும் வைக்கிறது."
Godrej
CINTHOL
LUXURY
TOILET POWDER
CINTHOL
கோத்ரெஜ்
தயாரிப்பு
ஸின்த்தால் - நாள்முழுதும் புத்துணர்ச்சியூட்டும் நறுமணம்

REGISTERED No. M. 4362
Registered as a Newspaper in Sri Lanka

